


# செண்பகம்

இதழ் - 02

பிரதேச செயலகம்
வெருகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செண்பகம்

வெருகலசம் 02

மலர்க் குழுவும்

கலாசார அதிகார சபையும்

பிரதேச செயலகம்

வெருகல்

2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மாவலிமான் மாவழியு மாவழிமா வேலிமலி**
**மாவழிவேல் மாமலராள் தாள்பரவி – மாவொளியாய்**
**சொல்மகிழச் செந்தமிழார் செம்பனுவல் செப்பிடுவாம்**
**சொல்கமழும் செண்பகமாம் சேர்.**

மாவலிமான் – மகாவலி கங்கை எனும் பெண்ணாளின், மா வழியும் – அழகு பொலிகின்ற, மாவழி – பெரிய ஆற்றுப்பாதையை அண்டி, மாவேலி – வயல் நிறைந்த ஊராம் வெருகலில், மலி – நிறைந்து அருளும், மா அழி வேல் – சூரனாகிய மாமரத்தை அழித்த வேலாயுதனதும், மாமலராள் – வண்டுகள் நாடும் மலரில் (செண்பகத்தில்) உறையும் செண்பகநாச்சியினதும், தாள் பரவி – திருவடிகள் பணிந்து, மாவொளியாய் – பெருமை மிகுந்த ஒளி என்று, சொல்மகிழ – சொல்லி மகிழும் படி, செந்தமிழார் செம்பனுவல் – செம்மையான தமிழ் வளம் நிறைந்த இந்த நூலை, செப்பிடுவாம் – சொல்கின்றோம், சொல்கமழும் – இனிமையான சொற்கள் மணக்கின்ற, செண்பகமாம் – "செண்பகம்" எனும் பெயர் கொண்ட நூலை, சேர் – சேர்ந்து படியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தென்கயிலை ஆதீனத்தின் ஆசிச் செய்தி | iv |
| கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | v |
| இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ...... | vii |
| கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளரின் .... | viii |
| திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி | ix |
| முன்னாள் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி | x |
| கலாசார அதிகார சபைத் தலைவரின் முன்னுரை | xi |
| மலர்க்குழுவினர் மனம் மலர்கிறார்கள் | xii |
| பிரதேச செயலாளருடன் அலுவலக உத்தியோகத்தர்கள் | |
| வெருகல் பிரதேச கலாசார அதிகார சபை – 2021 | xiv |
| மலர் வெளியீட்டுக் குழுவினர் | xiv |
| வெருகல் பிரதேசத்தின் பாரம்பரிய நெற்செய்கை நடைமுறைகள் | 1 |
| வெருகல் பிரதேச விவசாயக் கலைச்சொற்கள் சில | 7 |
| வெருகல் பிரதேச விவசாயப் பாடல்கள் | 8 |
| வெருகல் பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாடு | 10 |
| வெருகல் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமயத் தலங்கள் | 13 |
| அறநெறிக் கல்விக்காய் கரம் கோர்ப்போம் | 16 |
| ஈச்சிலம்பற்று வெருகல் பிரதேசத்தில் அழிந்துவரும் கலைகள் | 18 |
| பணம் பேசும் குணம் பேசா மாந்தர் குலம் | 21 |
| தேசத்திற்கு சிறந்த பிரஜையைக் கட்டியெழுப்பும் இலக்கியமும் கலையும் | 24 |
| திரைப்படத்துறையில் வெருகல் இளைஞர்கள் | 27 |
| வெருகல் முற்றத்தில் மறைந்த கிராமிய விளையாட்டுக்கள் | 30 |
| குறவஞ்சி சிலம்பாட்டமும் கொட்டியாரப்பற்றும் | 33 |
| சந்ததிக்குச் சொல்லிடுவோம்..! | 36 |
| வெருகல் பிரதேசத்தின் கூத்துப்பாரம்பரியமும் சிறுவர் கூத்தின் ...... | 37 |
| இலங்கைத்துறையும் ஏழு குளங்களும் – அன்றும் இன்றும் | 41 |
| மலையிறங்கினாள் மலைநீலி! | 46 |
| காலனித்துவ கால ஆவணங்களில் வெருகல் பிரதேசம் | 53 |
| பின்னிணைப்பு : வெருகல் வரைபடங்கள் | 59 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தென்கயிலை ஆதீனத்தின்
## ஆசிச் செய்தி

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

செந்தமிழ் மண்ணாம் திருகோணமலையின்
பழம் தமிழ் ஊராம் வெருகலம்பதியின்
பிரதேச செயலகத்தினால்
செண்பகம் மலரானது
மண்ணின் கதை பேசும்
மனதின் கதை பேசும்
எண்ணம் சீர்கொள்ளும்
வண்ணம் தமிழ் பேசும்
பண் பேசும் கலை பேசும் நேற்றைய நிறைவை நாளைக்கு சொல்லும்
நல்ல வழி பேசும்
இன்னமும் பேசும்
கலாசார விழாவில்
இனிதாய் இவர் செயல் முடியட்டும்
என்றும் இறையருள் பொழியட்டும்
வேண்டுகிறோம் இறைவனை
வாழ்க இவர் தொண்டு வளர்க இவர் செயல்

**இவ்வண்ணம்**
**இறைபணியிலுள்ள**
**அகத்தியர் அடிகளார்**
- தென்கயிலை ஆதீனம் -
திருகோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව

கலாசார அலுவல்கள் திணைக்களம்

**Department of Cultural Affairs**

8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை 8th floor, Sethsiripaya, Battaramulla

Trailblazer of a Beautiful Nation

My No. DCA/06/04/02/GEN/01 Your No. Date 2021.01.12

Towards building a blessed nation of compassionate, complete and culturally rich human beings



## கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

ஒவ்வொரு சமூகத்திற்கும் தனிப்பட்ட பண்பாடு உள்ளது. அவை ஒரு சமுதாயத்திற்கே உரிய தனித்தன்மைகளைப் பெற்றவை. பண்பாட்டுக் கூறுகளான பழக்கம், எண்ணம், தத்துவம், நம்பிக்கை ஆகியவை சமுதாயத்திற்கு ஏற்ப மாறுபடும் தன்மை உடையன. காலத்திற்கு ஏற்பவும் மாறும். எந்த ஒரு பண்பாடும் மாறாத் தன்மை உடையதாக இருக்க முடியாது.

சமூகவியல் அடிப்படையில் பண்பாடு என்பது பிறருடன் பகிர்ந்து கொள்வதைக் குறிப்பிடும். நம்முடைய பழக்கங்கள், மரபுகள், நம்பிக்கைகள், கொள்கைகள், எண்ணங்கள், மதிப்புக்கள் எல்லாமே மக்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டவையே ஆகும். மனித இனத்தினுடைய கடந்தகால நிகழ்கால மற்றும் எதிர்கால அடைவுகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியையே பண்பாடு எனும் சொல் குறிப்பதாகும். ஆகவே பண்பாடு பல நூற்றாண்டுகளாக ஒரு தலைமுறையிடமிருந்து மறு தலைமுறைகளுக்கு மரத்தின் வேர் பரந்து கொண்டிருப்பது போல் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றது.

நம் உயிருக்கு காப்பீடு செய்து நம் சந்ததியினரைக் காப்பாற்றுவது போல், நம் மூதாதையர்கள், மகான்கள், அறிஞர்கள், சீர்திருத்தவாதிகள், தத்துவ ஞானிகள், சித்தர்கள், முனிவர்கள் கட்டிக் காத்த பண்பாட்டுக் கலாச்சாரப் பாரம்பரியத்தை, இளம் தலைமுறையினரும் நிலையாக, உறுதியாக, நலத்துடன் பாதுகாக்கக் கல்வி உதவிட வேண்டும். பண்பாட்டைத் தூய்மைப்படுத்தல், பண்பாட்டைப் புனரமைப்பு செய்து சீரமைத்துப் புதியதோர் உலகை, சமுதாயத்தை உருவாக்கும் அரிய பொறுப்பு கல்விக்குள்ளது.

இலங்கை கலைத் துறையில் கலைஞர்களை உற்சாகப்படுத்துதல், தேசிய அளவிலான வளர்ச்சியின் பரந்த விளம்பரம் மற்றும் பொதுமக்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மை என்பவற்றை நனவாக்கும் பிரதேச இலக்கிய விழாக்கள் சிறந்ததொரு தெளிவான அனுபவமாகும். கலைஞர்களை ஊக்குவித்தல் மற்றும் இலக்கியம் படைத்தல் ஆகியவற்றை மூத்த கலைஞர்களிடையே மெருகேற்றுவதில் கலாசார அதிகார சபைகள் பாரிய பங்களிப்புச் செய்கின்றன என்றால் அது மிகையாகாது. பிரதேச கலாசார விழாக்களை ஏற்பாடு செய்கின்ற கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி உதவியாளர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அந்த வகையில் பிரதேச கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக "செண்பகம்" எனும் சிறப்பு மலரினை வெளியிட வெருகல் பிரதேச செயலக கலாசார அதிகாரசபை எடுத்த முயற்சியானது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் கலை ஆக்கத்திறனை வெளிப்படுத்துகின்ற அனைத்து படைப்பாளர்கள் மற்றும் கலைஞர்களின் கலை வாழ்க்கை வழிகளை மேலும் பிரகாசப்படுத்துவதால் தேசிய தரத்தின் கலைஞர்கள் உருவமெடுக்க இறைவன் அருள் அவர்கட்கு கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

T. A. Gamage

**தரணி அனோஜா கமகே,**
பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

வெருகல் பிரதேசத்தின் பாரம்பரிய விவசாய முறைகள், கூத்து, சிலம்பாட்டம் முதலான கிராமியக்கலைகள், இப்பிரதேசத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் கலையம்சங்கள், இங்குள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்கள், இப்பிரதேசத்தில் முக்கியத்துவம் பெறும் சிறுதெய்வ வழிபாடுகள் தொடர்பான விடயங்கள், கவிதைகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் முதலானவற்றைத் தாங்கி,வெருகல் பிரதேச செயலகப்பிரிவின். பிரதேச கலாசார அதிகார சபையின் 'செண்பகம்" என்ற பெயரில் வெளிவரவுள்ள இரண்டாவது வெருகலசம் மலர் வெளியீடு சிறப்புற்றமைய எல்லாம் வல்ல எம்பெருமானை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

**அ. உமாமகேஸ்வரன்,**
பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள்
திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி.

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப் பிரதேசங்களில் ஒன்றான வெருகல் பிரதேச செயலகம் பல தமிழ் அறிஞர்களையும், கல்விமான்களையும், பல்துறைசார் கலைஞர்களையும் கொண்ட வளம் கொழிக்கும் பூமியாகும். இங்கு பட்டி தொட்டியெங்கும் நாட்டுக்கூத்துக்களும், நாட்டார் பாடல்களும் ஒலித்துக்கொண்டு இருக்கும். பிரதேச எல்லைக்குட்பட்ட தரைத்தோற்றம் மற்றும் அப்பிரதேசம் கொண்டுள்ள இயற்கை வளங்களையும் நோக்குமிடத்து இந்நூலுக்கு "செண்பகம்" என பெயரிடப்பட்டுள்ளமை மிகவும் பொருத்தமானதாகும். விழாவின் போது கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளமை பாராட்டத்தக்கது.

இத்தகைய ஆவணப்படுத்தும் முயற்சிகள் எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்படுவதனூடாக வெருகல் பிரதேசத்தின் தனித்துவம், இருப்பு, கலை கலாசாரவிழுமியங்கள் என்பன நிலைநிறுத்தப்பட வேண்டும். காத்திரமான ஆவண முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரதேச செயலாளர், விழாக்குழுவினர், கலாசார பேரவையினர், கலாசார உத்தியோகத்தர் உட்பட்ட அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.ச.நவநீதன்**
மாகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

வெருகல் பிரதேச செயலகத்தின் அனுசரணையில், வெருகல் கலாசார அதிகார சபையால் வெளியிடப்படும் இரண்டாவது இதழான "செண்பகத்தி'ற்கு எனது வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சமகாலத்து வேலைப்பளுவான சூழலில் மனித மனத்துக்கு ஆறுதலும் ஆசுவாசமும் கலைகளிடமே கிடைக்கின்றன. சமூகமொன்றின் நிலைத்திருக்கைக்கு கலையும் பண்பாடும் இன்றியமையாத கூறுகள். நவீன தொழிநுட்பத்தின் பிடியில் சிக்கப்போகும் எதிர்காலத் தலைமுறைகளிடம் அவை சென்றடைய வேண்டியது அவசியம். "செண்பகம்" முதலிய சமூக - கலை - கலாசார இதழ்களே அதைச் செய்ய இயலும்.

வெருகல் இலங்கையின் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த பிரதேசங்களில் ஒன்று. அம்மண்ணின் மரபுகளையும் பண்பாட்டு அம்சங்களையும் வெளிப்படுத்தும் செண்பகம், அந்தப் பிரதேச மக்களின் வாழ்வியலின் மறைந்து வரும் பக்கங்களை ஆவணப்படுத்துவதில் உதவவேண்டும்.

வாசிப்புப் பழக்கம் அருகிச்செல்ல, அதற்குச் சமனாக உற்பத்திச் செலவு அதிகரித்துச் செல்லும் இந்நாட்களில் தொடர்ச்சியான நூல்கள் - இதழ்களின் வருகை அபூர்வமானதே. அதிலும் அரச நிறுவனமொன்று தன் கடமையை சரியாகச் செய்கிறது என்பதற்குக் கட்டியம் சொல்லும் செண்பகம் இதழின் வருகை, இவ்வகையில் பாராட்டத்தக்கது. இவ்விதழின் வெளியீட்டில் பின்னின்று உழைத்த பிரதேச செயலாளர், ஏனைய அலுவலர்கள், மலர்க்குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துக்கள். இரண்டாவது இதழ் காணும் செண்பகம், இருநூறு இதழ் தாண்டித் தொடரவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**சமன் தர்சன பாண்டிக்கோராளை,**
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்,
திருக்கோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முன்னாள் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

திருக்கோணமலை மாவட்டத்தின் தென் பாகத்திலுள்ள வெருகல் பிரதேசமானது, செழுமையான கலை, கலாசார பண்பாட்டு அம்சங்களைத் தன்னகத்தே கொண்ட பிரதேசமாகும். தனித்துவமான அம்சங்களைத் தன்னகத்தே கொண்ட வெருகல் மண்ணின் விவசாயமானது, நீண்டகால பாரம்பரியத் தொடர்ச்சி கொண்டது என்பதுடன், இங்குள்ள மக்களது அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்ததாகவும் காணப்படுகின்றது.

நான் வெருகல் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய வேளையில், வெருகல் பிரதேசத்துக்குத் தனித்துவமான பாரம்பரிய நெற்பயிர்ச்செய்கையையும், அது தொடர்பாக மறைந்து வரும் நடைமுறைகளையும் ஆவணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். அருகிவரும் கலைகள், மரபுகளை நிலைபேறடையச் செய்யும் அரும்பொருட்காட்சியகம் ஒன்றை அமைத்தல் அவற்றில் முதலாவது இலக்கு ஆகும். இரண்டாவது வெருகலின் நெற்செய்கை மரபுகளை ஆவணப்படமாக வெளியிடுவதற்கான ஆயத்தங்கள். கொவிட்-19 பெருந்தொற்றின் தீவிரத்தால் அவை இரண்டையும் உரிய நேரத்தில் நடாத்த முடியாது போயிற்று. எனினும், நெற்பயிர்ச்செய்கை தொடர்பான ஆவணப்படமும், "செண்பகம்" மலரும் தற்போது வெளிவருவதனையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

கலை மற்றும் பண்பாட்டு விடயங்களை அழிவடையாமல் பாதுகாத்து அதனை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்வது இன்றைய கால கட்டத்தில் வாழ்கின்ற அனைவரினதும் தலையாய கடமையாகும். தற்போது வெளியாகின்ற இதழ் பல்தரப்பட்ட வரலாற்று, பண்பாட்டு, இலக்கிய விடயங்களை தன்னகத்தே கொண்டதாக மலர்ந்திருக்கின்றது. இதனை வெளியிட முன்னின்று செயற்பட்ட பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், இந்து சமய கலாசார உத்தியோகத்தர், பிரதேச கலாசார அதிகார சபையினர் அனைவரையும் பாராட்டுவதுடன் இந்நூலானது தொடர்ந்தும் பல வருடங்கள் இடையறாது வெளிவர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**கு.குணநாதன்,**
(முன்னாள் வெருகல் பிரதேச செயலாளர்),
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
குச்சவெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாசார அதிகார சபைத் தலைவரின் முன்னுரை

கலை என்பது மானிட வாழ்க்கையில் மிக முக்கியத்துவம் பெறும் அம்சமாகும். வெருகல் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களின் கலை, கலாசாரம் மற்றும் பண்பாடுகள், சமயநம்பிக்கைகள் சிறப்பு வாய்ந்ததாகும். கூத்து, கும்மி, கோலாட்டம், நாடகம், நாட்டார் பாடல், சிலம்பாட்டம், வில்லுப்பாட்டு, போன்ற பல பாரம்பரிய கலையம்சங்கள் இன்றும் இப்பிரதேசத்தில் உயிர்ப்பித்துக் காணப்படுகின்றமை கலைக்கு கிடைத்த மிகப்பெரிய கொடையாகும்.

வெருகலசம் இதழ் - I வெளிவந்த நிலையில் வெருகலசம் இதழ் - II ஆனது, "செண்பகம்" என்ற பெயரில் பாரம்பரிய நெற்செய்கை முறைகள், சிறுவர் கூத்து, சிலம்பாட்டம், சிறு தெய்வ வழிபாடு, மாணவர்களின் ஆக்கங்கள், பிரதேச பாரம்பரிய விளையாட்டுக்கள் உள்ளிட்ட பல அம்சங்களை கொண்டு வெளிவருகின்றது.

வெருகல் பிரதேசத்தில் இவ்வாறான இலக்கிய முயற்சிகள் எதிர்கால சந்ததியினருக்கும், ஆராய்ச்சிகளுக்கும் உதவும் என்ற நம்பிக்கையில் "செண்பகம்" மலரை வெளியிட முன்னின்று உழைத்த உதவிப் பிரதேச செயலாளர், இந்துசமய கலாசார உத்தியோகத்தர், பிரதேச கலாசார அதிகார சபையினர், வெருகல் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இப் பிரதேசத்தின் அடையாளச் சின்னமாக விளங்கும் "செண்பகம்" மலரானது பல பாகங்களாக வெளிவர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**எம்.எச்.எம்.கனி,**
பிரதேச செயலாளர்,
வெருகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழுவினர் மனம் மலர்கிறார்கள்

விழா நினைவாக அல்லது நிகழ்வுகளின் நினைவாக வெளியிடப்படும் நூல்களை "விழாமலர்". "சிறப்புமலர்" அல்லது "இதழ்" என்று அழைப்பது இன்று பெருவழக்காகியிருக்கிறது. இன்று வெருகல் பிரதேச செயலகத்தில் வெளியாகும் இந்நூலும் ஒரு மலரின் பெயரைச் சூடிய ஒரு விழாமலர் தான். செண்பகம்!

வெருகல் பிரதேசத்தின் இலங்கைத்துறை, ஈச்சிலம்பற்று ஆகிய இடங்களில் கோவில் கொண்டிருக்கும் தேவிக்குப் பெயர். செண்பகநாச்சி. தமிழகத்தின் குமரி மாவட்டத்தில் பல செண்பகநாச்சியார் அம்மன் கோவில்கள் அமைந்துள்ளன. மட்டக்களப்புப் பிராந்தியத்தில் இன்றும் நீடிக்கும் தமிழ் வேடுவர்களின் வழிபாட்டிலும். அப்பெயரில் ஒரு தெய்வம் இடம்பெறுவதுண்டு. அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பிலுவில் கண்ணகை அம்மன். இலங்கைத்துறைச் செண்பகநாச்சியின் இன்னொரு சகோதரி என்ற தொன்மம் நிலவுவதால் அவளுக்குக் "கண்டபாணத்துறைச் செண்பகச்செல்வி" என்றோர் பெயருண்டு (மற்றச் சகோதரி கொட்டியாற்றுத்துறை சம்பூர்க்காளி). எனவே செண்பகநாச்சி என்ற தெய்வத்துக்கு ஈழத்திலும் நீண்ட வரலாற்றுத்தொடர்ச்சி உண்டு என்று நம்பலாம்.

சிற்ப அமைதியைப் பார்க்கும் போது. சம்பூர்க் காளி. திருமலை பறையன்குளம் எல்லைக்காளி, ஈச்சிலம்பற்றுச் செண்பகநாச்சி ஆகிய அத்தனை தெய்வங்களும் ஒத்த காலத்தைச் சேர்ந்தவை என்றே அனுமானிக்கமுடியும். கொற்றவையும் காளியும் சோழரின் காவல் தெய்வங்கள். நிசும்பசூதனி, பிடாரியார், தில்லைக்காளி உள்ளிட்ட சோழரின் காவல் தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் தமிழகத்தில் கிடைக்கின்றன. சோழத்தலைநகராம் சனநாதமங்கலம் பொலனறுவையிலும் ஒரு கொற்றவை கோவில் அமைந்திருந்தது.

சோழருக்கு நூறாண்டுகளுக்குப் பிறகு பொலநறுவையை ஆண்ட மன்னன் நிசங்கமல்லனின் "அல்லைச் செப்பேடுகள்" மூலம். சேறுவில் - வெருகல் பிரதேசங்கள் "மாப்பிசும்பு கொட்டியாரம்" என்று அழைக்கப்பட்டமை தெரிய வந்திருக்கிறது. "மாப்பிசும்பு கொட்டியாரம்" என்ற பெயர் இராஜராஜ சோழனின் தஞ்சைப் பெருங்கோவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டில் பொறிக்கப்பட்ட பெருமைமிக்க பெயராகும். சோழத்தலைநகர் பொலனறுவைக்கு கடலிலிருந்து நுழையும் வழிகளில் ஒன்றான மகாவலிகங்கையின் ஆற்றுவாய்களில் ஒன்று என்ற காரணத்தினால், மாப்பிசும்பு கொட்டியாரத்தின் இலந்தைத்துறையில் செண்பகநாச்சிக்கு கோவில் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஈழமண்டலம் சோழராட்சியின் கீழ் இருந்தபோது ஏற்பட்ட சோழக்குடியேற்றங்களை அண்மித்து செண்பகநாச்சி உள்ளிட்ட காவல் தெய்வச் சிலைகள் திருமலையின் வெவ்வேறு இடங்களில் கோவில் கொண்டிருக்கக்கூடும். திருமலையில் இடம்பெற்ற சகல குடியேற்றங்களும் திருக்கோணேச்சரத்துடன் தொடர்புபட்டவையாகவே பதிவாகி இருக்க, செண்பகநாச்சியை இன்றும் வழிபடும் சிந்துநாட்டார் சமூகத்தின் வருகை மாத்திரம், செண்பகநாச்சி கோவிலோடு பதிவாகி இருப்பதை இங்கு நாம் ஊன்றி நோக்கலாம்.

செண்பகநாச்சி, வேடுவரின் தெய்வங்களிலும் இடம்பிடித்திருப்பதால், அவள் இலங்கையின் சுதேச தெய்வமாக இருக்கவே வாய்ப்பதிகம். துறைமுகங்களின் அருகே பெருங்கோவில்களை அமைத்த தமிழ் வழக்கத்துக்கேற்ப, இங்கு இடம்பெற்ற செண்பகநாச்சி எனும் சிறுதெய்வ வழிபாடு, சோழர் காலத்தில் மேல்நிலைப்படுத்தப்பட்டு பின்பு செண்பகநாச்சி பேராலயமாக வளர்ச்சி கண்டிருக்கலாம். இந்த வரலாற்றுச் செய்தியை 'அம்மன் சிலை கப்பலில் வந்த கதை' மூலமும் உய்த்துணர முடிகிறது. இன்றும், கப்பலில் கரையேறிய "பெரியசாமி" பற்றிய தொன்மங்கள் இலந்தைத்துறையில் நிலவுகின்றன.

திருக்கோணமலைத் துறைமுகத்தில் இடம்பெற்ற சிவலிங்க வழிபாடு -திருக்கோணேச்சரம், மாந்தைத் துறைமுகத்தில் இடம்பெற்ற சிவலிங்க வழிபாடு - திருக்கேதீச்சரம் கண்டபாணத் துறைமுகத்தில் இடம்பெற்ற வேலன்/குமார தெய்வ வழிபாடு - திருக்கோவில், மாத்துறை துறைமுகத்தில் இடம்பெற்ற தேனவரைத் தெய்வ வழிபாடு - தெவிநுவரை விஷ்ணு என்று இலங்கையின் பண்டைய துறைமுகங்களுக்கருகே இடம்பெற்றுவந்த பல சுதேச வழிபாடுகள் பின்னாளில் சைவப் பெருந்தெய்வங்களாக வளர்ச்சி கண்டதை இலந்தைத் துறைமுக செண்பகநாச்சி விடயத்திலும் ஒப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன காரணத்தாலோ செம்போத்து என்றழைக்கப்பட்ட பறவையை இன்று செம்பகம் என்று அழைப்பதால், அந்தப் பறவைப் பெயரே இன்று பெருவழக்காகப் போயிற்று. ஆனால் செண்பகம், தமிழ் கூறு நல்லுலகில் போற்றிப் புகழப்பட்ட மலர்களில் ஒன்று *(Magnolia champaca)*. அது தெற்காசியாவைத் தாயகமாகக் கொண்டது. அதன் நறுமணமும் நிறமும் தமிழ் இலக்கியங்களில் வெகுவாக விதந்தோதப்பட்டிருக்கின்றன.

வெருகல் - ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்தில், வெருகல் முருகனை விடப் பழைமை வாய்ந்த தெய்வம் செண்பகநாச்சி. இயற்கையில் தெய்வத்தைக் காணும் பழந்தமிழர் மரபின் தொடர்ச்சியையும் அவளில் காணலாம். தமிழ்ப் பண்பாட்டில் முதன்மை இடம் வகிக்கும் மலர்களில் ஒன்று செண்பகம். அம்மலரின் நறுமணம் போல், அடியவரைச் சூழ்ந்து அருள் கமழ்பவள் செண்பகநாச்சி.

கடந்த 2016இல் வெளியான வெருகலசம் எனும் நூலே இம்மலர் வரிசையில் முதலாவது மலர். வெருகல் + கலசம் முதலிய சொற்களை அழகாய் இணைத்து உருவான பெயர் அது. ஆனால் வெரு + கலசம் என்ற இணைந்த பெயரில், அச்சமூட்டும் கலசம் என்ற அசாதாரணமான அர்த்தமே முதன்மைப்பொருளாகிறது. பொதிந்த பொருளொன்றைக் காணமுடியாமையாலேயே இம்மலர் வரிசை செண்பகம் எனப் பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. ஈழத்தில் வெருகல் பிரதேசத்தை தன் முதன்மைத் தலமாகக் கொண்டிருக்கும் தொல்புகழ் வாய்ந்த தேவியை நினைவுகூர்ந்தும், அவள் பெயரிலமைந்த மலரின் பிராந்திய, பண்பாட்டு, இலக்கிய, இயற்கை முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டும், இந்த மலர், செண்பகம் என்ற பெயரைச் சூடிக்கொள்கிறது. இது இரண்டாவது மலர். இனிச் செண்பகம் ஆண்டாண்டாய் மணம் கமழுட்டும். தமிழ் வாசம் வீசட்டும்.

***'விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை***
***வேங்கை வண்செருந்தி செண்பகத்தின்***
***குருந்தொடு முல்லை கொடி விடும் பொழில்சூழ்***
***கோணமா மலையமர்ந்தாரே'***
***(திருமுறை 3:123:6)***

**- மலர்க்குழுவினர் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலாளருடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெருகல் பிரதேச கலாசார அதிகார சபை - 2021

| | |
|---|---|
| தலைவர் | : எம்.எச்.எம்.கனி (பிரதேச செயலாளர் ) |
| உப தலைவர் | : ப.மதிபாலசிங்கம் |
| செயலாளர் | : த.தவரூபன் |
| உப செயலாளர் | : வி.விக்னேஸ்வரன் |
| பொருளாளர் | : மோ.சாந்தகோபு |
| ஆலோசகர் | : க.அருணாசலம், க.கணேசன் |
| உத்தியோகபூர்வ அங்கத்துவம் | : கா.ஸ்ரீகந்தராசா (கிராம அலுவலர்) |
| ஒருங்கிணைப்பாளர்கள் | : யோ.சதேஷா (இந்து சமய, பண்பாட்டு அபிவிருத்தி அலுவலர்) வ.ரதிதேவி (பண்பாட்டு அபிவிருத்தி அலுவலர்) |

## மலர் வெளியீட்டுக் குழுவினர்

- வி. துலாஞ்சனன் - உதவிப் பிரதேச செயலாளர் (பதில் கடமை)
- யோ.சதேஷா - இந்து சமய,பண்பாட்டு அபிவிருத்தி அலுவலர்
- வ.ரவிதேவி - பண்பாட்டு அபிவிருத்தி அலுவலர்
- வெ.த.சி.பர்ஷானா - அபிவிருத்தி அலுவலர்
- த.மகேந்திரன் - சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்
- ஞா. தவேந்திரன் - அபிவிருத்தி அலுவலர்
- ஒ.பிரசாந்த் - அபிவிருத்தி அலுவலர்
- வி.புவிந்தராஜ் - அபிவிருத்தி அலுவலர
- த. சுபாசினி - அபிவிருத்தி அலுவலர்
- ச.பிரியங்கா - முகாமைத்துவ சேவை அலுவலர்
- பா.ஜிந்துஸா - முகாமைத்துவ சேவை அலுவலர்
- வி.கிருபானந்தராசா - பட்டதாரிப் பயிலுநர்
- ஏ.கிருபாகரன் - பட்டதாரிப் பயிலுநர்
- ச.டிலக்சனா - பட்டதாரிப் பயிலுநர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ப . மதிபாலசிங்கம், வி.துலாஞ்சனன்



# வெருகல் பிரதேசத்தின் பாரம்பரிய நெற்செய்கை நடைமுறைகள்

*"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து." (திருக்குறள் - 1032)*

**நெ**ல் மிகப்பழைமை வாய்ந்த ஒரு தாவரம். இந்தியத் துணைக்கண்டமும் சீனமும் நெல்லின்தாயகங்கள். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அது பயிரிடப்பட்ட தகவல்கள் கிடைத்திருக்கின்றன. சொற்பிறப்பு ஆய்வுகளின் படி, ரைஸ் எனும் ஆங்கிலச்சொல், தமிழ் 'அரிசி'யிலிருந்தே உருவானது. வருடாந்தம் 750 மில்லியன் தொன்கள் உலகளாவிய ரீதியில் உற்பத்தி செய்யப்படும் நெல்லானது, கரும்புக்கும் சோளனுக்கும் அடுத்து மூன்றாவது மிகப்பெரிய விவசாய விளைபொருள் ஆகும். இலங்கை உட்பட ஆசிய நாடுகளினதும் ஆபிரிக்க நாடுகளினதும் முதன்மை உணவு நெல்லே ஆகும்.

நெல் உற்பத்தியில் தற்போது நவீன தொழிநுட்பங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதால், பல்லாயிரம் ஆண்டு வரலாறு கொண்ட நெல் அறுவடையில் கடைப்பிடிக்கப்பட்ட மரபுகள் அருகி வருகின்றன. அப்படி இலங்கையின் நீண்ட பாரம்பரியம் கொண்ட கிழக்குக் கரையோரம், தொன்மையான வெருகல் பிரதேசத்தில் நெல் உற்பத்தியின் போது கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபுகளை ஆவணப்படுத்தும் ஒரு முயற்சியாக வெருகல் பிரதேச கலை இலக்கிய விழாவான செண்பகத் திருவிழாவில் "பொலி பொலியோ" ஆவணப்படம் வெளியிடப்படுகிறது. அந்த ஆவணப்படத்தின் விரிவான எழுத்து வடிவம், இந்தக் கட்டுரை.

வெருகல் இலங்கைத் திருநாட்டின் கீழைக்கரையில் திருக்கோணமலை மாவட்டத்தின் தென் எல்லையில் அமைந்துள்ள பிரதேசம். இலங்கையின் நீளமான நதியான மகாவலி கங்கையின் ஒரு கிளை, வெருகல் கங்கையாகப் பிரிந்து, இங்கு தான் இந்து மாசமுத்திரத்தில் கலக்கின்றது. வெருகல் கங்கையே திருக்கோணமலை மாவட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரிக்கும் தெற்கு எல்லை ஆகும். வெருகல் என்றால் வெருகுச் செடிகள் (தருப்பை - தாவரவியற் பெயர்: *Desmostachya bipinnata*) நிறைந்த இடம் என்று பொருள். வெருகல் கங்கையின் கரையோரமாக இன்றும் நிறைய வெருகஞ்செடிகளைக் காண முடியும்.

2020 கணக்கெடுப்பின் படி, சுமார் 52 சதுர கிமீ பரப்பளவு கொண்ட வெருகல் பிரதேசத்தில் 4,374 குடும்பங்களைச் சேர்ந்த 15,045 நபர்கள் வாழ்கிறார்கள். இங்குள்ள ஈச்சிலம்பற்று, இலங்கைத்துறை, கல்லடி கிராமங்களை அண்டி, கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. பிரித்தானிய ஆட்சிக் காலத்தில், மூதூர், சேருநுவரை இணைந்த கொட்டியாரப்பற்று பிரதேசமாக நீடித்த வெருகல், தற்போது, நூறு சதவீதம் தனித்தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வாழும் பிரதேசமாக விளங்குகின்றது. வரலாற்றுப்பிரசித்தி பெற்ற வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி திருக்கோவிலும், இலங்கைத்துறை - ஈச்சிலம்பற்று செண்பகநாச்சி அம்மன் கோவில்களும் இப்பிரதேசத்தின் பழம்பெரும் வழிபாட்டிடங்கள். வெருகல் பிரதேசத்தின் முதன்மையான வாழ்வாதாரத் தொழில் நெல்லுற்பத்தியாகக்காணப்படுகின்றது.

வெருகல் பிரதேச நெற்பயிர்ச்செய்கைக்கு நீண்ட வரலாறு இருக்கிறது. வெருகல் கோவிலை அண்டி வாழ்ந்த மக்கள், தங்கள் வயல்நிலங்களுக்காக வெட்டிய கால்வாய் ஒன்றின் காரணமாகவே, வெருகல் கங்கை திசை மாறி ஓடியதாக ஒரு வரலாற்றுக் குறிப்பு சொல்கிறது. இங்குள்ள ஒரு சமூக உட்பிரிவு தங்களை "கதிரவன்னியன் குடி" என்று அழைத்துக்கொள்கிறது. தங்களை ஆண்ட வன்னியன் இங்கு வருகை தந்தபோது, தாங்கள் நெற்கதிர்களால் பந்தல் அமைத்ததால் அப்பெயர் வந்ததாகச் சொல்கிறார்கள். 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இப்பகுதிக்கு வருகை தந்த பிரித்தானிய அலுவலர்கள் பலர், வெருகல் படுகையில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச்செய்கை பற்றி பல குறிப்புகளை எழுதி இருக்கிறார்கள். வெருகல் கங்கைக்குத் தெற்கே அடர்ந்த காடு இருப்பதையும், கங்கையிலிருந்து கொட்டியாரம் வரையான பகுதி சிறந்த நெல்வயல்களைக் கொண்டிருப்பதையும், சிலர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வெருகல் பிரதேசத்தில் நெற் பயிர்ச் செய்கையானது, பிரதானமாக ஆடி - ஆவணி மாதங்களில் ஆரம்பித்து, தை - மாசி மாதங்களில் நிறைவுறுகிறது. வான்மழையை நம்பிச் செய்யப்படும் இந்த வேளாண்மையை மானாவாரி என்றும் பெரும்போகம் என்றும் சொல்கிறார்கள். "ஆடி அரையாறு ஆவணி பேராறு' என்றும் "ஆடி உழவு தேடி உழு" என்றும் இங்கு நிலவும் பழமொழிகள் இதற்குச்சான்றாக விளங்குகின்றன. நீர்ப்பாய்ச்சல் வசதி கொண்ட வயற்காணிகளில் மட்டும் இடப்போகம் என்று சொல்லப்படும் கோடை கால நெற்செய்கை இடம்பெறுகிறது.

ஆடி, ஆவணி மாதங்களில் பெய்யும் பெருமழை ஒன்றுடன் பெரும்போக நெற்செய்கைக்கான ஆயத்தங்கள் இடம்பெற ஆரம்பிக்கின்றன. இம்மழையை தலைமழை என்று சொல்வார்கள். இதை அடுத்து பரவலாக உழவு ஆரம்பமாகும். உழவுவதற்கு மரத்தால்செய்யப்பட்ட கலப்பையே பயன்பட்டது (உரு 1.1). காளை மாடுகளில் கலப்பையைப் பூட்டி, அவற்றை வயலுக்குக் கொண்டு சென்று, கலப்பையை வயல் சேற்றில் ஆழப்புதைத்து மாடுகளால் இழுக்கச் செய்து உழுவார்கள்.

உழவுதல் மூன்று தடவை இடம்பெறும். தலைமழைக்குப் பின் முதலாவது தடவை உழவுவதை இங்கு "நிலையெடுப்பு" என்று கூறுவார்கள். நிலையெடுப்புக்கு முன், வயல் பூமியில் குலதெய்வத்தை வழிபடுவது வழக்கம். இது பஞ்சாங்கம் பார்த்து நல்லதோர் நாளில் செய்யப்படுவதே வழமை. ஒருவருடைய வயலில் 1 தொடக்கம் 10 வரையான மாடுகள் கலப்பையில் இணைக்கப்பட்டு உழுதபடி இருக்கும்.




**உரு 1.1 கலப்பையின் பாகங்களைக் காட்டும் வரைபடம்**

கூலிகள் ஏதும் பெறப்படாமல் மாற்று வேலையின் அடிப்படையில் ஒற்றுமையாக இணைந்து எல்லோர் வயலிலும் ஒரே நேரத்தில் உழவுவார்கள். நிலையெடுப்பு முடிந்து பத்து பதினைந்து நாட்களில் பின் மீண்டும் இரண்டாவது உழவு செய்யப்படும். இதை 'மறுத்தல்' என்று கூறுவார்கள். பூமியை மறுத்து குறுகிய நாட்கள் இடைவெளியில் மூன்றாவது உழவும் விதைத்தலும் ஒரே நேரத்தில் இடம்பெறும். இதை "நெல்லுப் போடுதல்' என்று சொல்வார்கள். பெரும்பாலும் நெல்லுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடும் போது, மழைப்பொழிவு இருக்காது என்பதால், அதை புழுதி விதைப்பு என்றும் சொல்வதுண்டு.

நெல்லை விதைத்து உழவுச் சாரினால் மூடிவிட்டால் எப்போது மழை பொழிகின்றதோ அப்போது அவை முளை கொள்ளத் தொடங்கும். இது தவிர, வீட்டிலேயே பெரிய பெரிய பாத்திரங்களில் நெல்லை நீரில் ஊறவைத்து, முளை வந்த பின்னர் ஈரமண்ணில் விதைப்பதும் உண்டு. ஓரளவு முளைத்த நெல்லு நாற்றுகளை வயலில் நடும் வழக்கமும் வெருகலில் இருந்து வந்திருக்கிறது

வழக்கமாக 04, 04 1/2 மாத நெல்லினங்களையே தேடி விதைத்தார்கள், குறிப்பாக பனங்களி, கறுப்பன், சீனட்டி, ஒட்டவாலன். இளங்கலை, முருங்கைக்காயன் அல்லது ஆனைக்கொம்பன் போன்ற பாரம்பரிய நெல்லினங்கள் இங்கு பயிரிடப்பட்டு வந்தன. நெல் முளைக்க ஆரம்பித்ததும், பூமியில் போதுமான தண்ணீர் இருக்கின்றதா, ஏதும் களைகள் இருக்கின்றனவா, பூச்சித்தாக்கம் இருக்கின்றதா என்பது தினமும் விவசாயிகளால் பரிசீலிக்கப்படும்.

தண்ணீர் போதாமல் இருந்தால், வயலுக்கு அருகே இருக்கும் குளம், குட்டைகளிலிருந்து, ஏற்று எனும் கருவி மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டது. ஏற்று, மரத்தைக் குடைந்து செய்யப்பட்ட அமைப்பு. பிற்காலத்தில் தச்சுக்கருவிகளைப் பயன்படுத்தி பொளியப்பட்ட நவீன ஏற்றுகளையும் செய்தார்கள் (உரு 1.2). வயலில் களை எதையும் கண்டால், அவற்றை கையால் பிடுங்கி அகற்றுவது வழக்கமாக இருந்தது. நெற்செய்கையில் பெண்கள் ஈடுபட்ட முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாக, களையெடுப்பு இருந்தது.

நெல்லில் பூச்சித்தாக்கம் இருந்தால், அவை கைகளால் அகற்றப்பட்டன. பெரும்பாலும் பூச்சித் தாக்கத்தைக் கட்டுப்படுத்த 'தீர்த்தம் விசிறுதல்' எனும் நடைமுறை வழக்கத்தில் இருந்தது. ஊர்ப் பூசாரிகளிடம் சென்று தண்ணீர் ஓதி தமது வயலுக்கு எறிந்தால், பூச்சித்தாக்கம் குறையும்என்பது நம்பிக்கை. பூச்சிக்கடியிலிருந்து வயலைக் காக்க முனிக்கு தேங்காய் நேர்தல் எனும் சடங்கும் வயலோரத்தில் இடம்பெற்றது.



**உரு 1.2 மரத்தைக் குடைந்து செய்யப்பட்ட இடைக்கால ஏற்று ஒன்று.**

சுமார் மூன்று மாதமளவில் நெல்லின் பசிய நிறம் மாறிச் சிவந்து, நெற்கதிர்களோடு பயிர்கள் தலைசாயும். இதை "கதிர் பறிதல்" என்று அழைத்தார்கள். கதிர் முழுமையடையும் வரையான பருவங்களுக்கு குடலை, வீ என்றெல்லாம் பெயர் உண்டு. கதிர் பறிந்த பின்னர், அறுவடை வரை வயலுக்கு காவல் அதிகம் தேவைப்படும். கால்நடைகள், யானை, பன்றி, பறவைகளிடமிருந்து வயலைக் காப்பது அவசியமாக இருந்தது.

வயலில் நெற்கதிர்கள் தைமாதம் அளவில் அறுவடைக்குத் தயாராகும். அப்போது புதிரெடுத்தல் எனும் சடங்கு இடம்பெறும். புதிதாக விளைந்த நெல்லில் பொங்கல் வைத்து, பூமிதேவிக்கும் சூரியனுக்கும் நன்றி சொல்லுவதே புதிரெடுத்தல். இது பெரும்பாலும் தைப்பொங்கல் அல்லது தைப்பூசத்தை அண்டிய நாளில் இடம்பெறும். அதற்குப் பின்னர் அறுவடை ஆரம்பமாகும். வயலில் அறுவடை நிகழும் நாட்களை வெட்டுக்காலம் என்று அழைப்பர்.

காலநிலையை அவதானித்து மழை பெய்யாத நாட்களில் வெட்டுக்காலம் வருமாறு பார்த்துக்கொள்வர். அறுவடையை "கனத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களில்" ஆரம்பிப்பது வழக்கமில்லை. அமாவாசை, அட்டமி, நவமி இந்த நாட்களே கனத்த நாள் என்று அறியப்படுகின்றன. பெரும்பாலும் அறுவடை வளர்பிறை நாட்களிலேயே இடம்பெறும்.

வெட்டுக்காலம் ஆரம்பமானதும், வயலில் அறுவடை நிகழ்த்துவதற்குப் பொருத்தமான இடமொன்று தயார் செய்யப்படும். இதைக் "களம் செதுக்குதல்" என்பார்கள். வயலுக்குள் சற்று உயரமான நீர் தேங்கி நிற்காத ஓரிடம் இதற்காக களத்தடி, அல்லது களத்துத் திடல் என்ற பெயரில்நிரந்தரமாக இருந்து வருவதுண்டு.

அறுவடைக்கான முன்னாயத்தங்கள் மும்முரமாக இடம்பெறும். வட்டையில் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள், முறைவைத்து காவல், சூடுபோடும் நாள், வெட்டு நாள், எண்பவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்வார்கள். வேளாண்மை வெட்டுவதற்காக கூலியாட்களை பணிக்கு அமர்த்திக் கொள்வார்கள். இவர்கள் வெட்டுப்பாட்டி எனப்படுவார்கள். ஒரு வெட்டுப்பாட்டியில் அண்ணளவாக இருபது பேர்வரைஇருப்பதுண்டு.

அறுவடை ஆரம்பமாகும் முதல் நாள், களத்தடி நடுவே, மடை வைத்து பொங்கல் பொங்கி குலதெய்வத்தை வழிபடுவார்கள். பின்னர் அறுவடை ஆரம்பமாகும். வெட்டுப்பாட்டி பூமாதேவியை வணங்கி வயலுக்குள் இறங்கி வெட்டுக்கத்தியால் நெற்கதிர்களை அறுப்பார்கள். அறுக்கப்பட்ட ஒருபிடி நெற்கதிர் மாவக்கை எனப்படும். இப்படி எட்டு அல்லது ஒன்பது மாவக்கைகள் சேர்ந்தது ஒரு கட்டு. நெற்கட்டுகள் பல சேர்ந்தது ஒரு உப்பட்டி. உப்பட்டி சில சேர்ந்தது கட்டு, பல நூறு கட்டுக்கதிர் சேர்ந்த போர்க்குவை சூடு. சிறிய சூட்டுக்கு போர் என்று பெயர்.

இந்த உப்பட்டிகள் வெல்லா நாரால் வரிந்து இறுக்கிக் கட்டப்படும். வெல்லா நார்கள் அறுவடைக்கு முன்பே காட்டுக்குச் சென்று வெல்லா மரத்தின் மரப்பட்டைகளை உரித்து நாராக எடுக்கப்படுகின்றன. அறுவடை செய்த அடுத்த நாளில் உப்பட்டிகள் கட்டப்படும். உப்பட்டி கட்டும் போது வயலில் சிந்திய கதிர்களைப் பொறுக்கி எடுத்துச் செல்வதற்கு வசதி குறைந்த பெண்கள் வயலுக்கு வருவதுண்டு. சூட்டு உப்பட்டிகளிலிருந்து சில கட்டுகள், வெட்டுப்பாட்டிக்கு கூலியாக வழங்கப்படும். இதனைக் "கூலிக்கட்டு" என்பார்கள்.

கட்டப்பட்ட உப்பட்டிகள் களத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு சூட்டில் அடுக்கப்படும். இதை "சூடு குமித்தல்" என்பார்கள். சூடு என்பது நெற்கதிர்களைக் கொண்டு கூம்பக வடிவில் அமைக்கப்படும் கதிர்க்குவியல் ஆகும். சிறிய சூடுகள், போர் என்று அழைக்கப்படும். சூடு மழையையும் வெயிலையும் தாங்கும் அமைப்பு என்பதால், அதை மாதக்கணக்கில் கூட அப்படியே வைத்திருக்கமுடியும். எனினும் காட்டு மிருகங்கள், திருடர்கள், தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக, மாவிலை, வேப்பிலை, வைக்கோல், கயிறு என்பன கொண்டு சூட்டுக்களம் எல்லைப்படுத்தப்படும்.

சூட்டிலிருந்து கதிரைப் பிரித்தெடுக்கும் இறுதிக்கட்டப்பணி, வெட்டிற்கு சில வாரங்கள் கழிந்த பின்னர் ஆரம்பமாகும். காலநிலையின் சாதக நிலைமை கருதி வளர்பிறையில் 7ஆம் பிறை கடந்த பின்புதான் சூடடிப்பை நடாத்துவார்கள். எவ்வாறெனினும் சித்திரை வருடப்பிறப்பிற்கு முன்பே சூடடிப்பு வேலைகள் முடிந்துவிடும்.

சூடடிப்பு வேலை தொடங்கும் நிகழ்வானது இம்மக்களால் மிகவும் பக்தி பூர்வமாக நிகழ்த்தப்படுவதுண்டு அந்நாட்களில் எருமை மாடுகளைக் கொண்டே சூடுகள் அடிக்கப்பட்டது. மூன்று சோடி மாடுகளை ஒரு தொடுவை என்பார்கள். இரண்டு மூன்று தொடுவை மாடுகளால் சூடடிப்பு இடம்பெறும். இதற்காக களம் தயார் செய்யப்பட்டு தூய்மைப்படுத்தப்படும். சூட்டுக் களத்தைச் சுற்றி வைக்கோலால் (மிதிஞ்சானால்) திரிக்கப்பட்ட வைக்கோற்புரியினால் வேலித்தடை அமைப்பார்கள். இது அமைப்பதன் நோக்கம் "துடக்கு" அற்ற இடம் என்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்துவதாகும். வைக்கோற்புரியிலே வேப்பம் இலைக்கொத்துக்களையும் தொங்கவிடுவார்கள். பெண்களோ, துடக்குள்ளவர்களோ, மச்சம் மாமிசம் சாப்பிட்டவர்களோ சூட்டுக்களத்துக்குள் நுழையக்கூடாது. வேலை செய்வோர் களம் முடியும் வரை வீட்டிற்கு செல்லமாட்டார்கள்,

சூடு போடுதல் நடைபெறும் தினம், களத்தில் பொங்கலிடுவார்கள். பிள்ளையார் மடைபோட்டு பொங்கல் படைத்து வழிபாடுகள் நடைபெற்று, சூட்டுக்களத்தின் நடுமையத்தில் "அரக்கு" புதைக்கப்படும். அரக்கு என்றால் மதுபானம். இது வைரவருக்காக நேர்ந்து புதைக்கப்படுகிறது. அரக்கு புதைக்கப்படும் களத்தின் மைய இடமும் அரக்கு என்றழைக்கப்படும்.

பொங்கலின் பின்னர், சூடடிக்கத் தேவையான வேலையாள்தடி, போலம் (விளக்குமாறு), மண்வெட்டி போன்ற உபகரணங்களை களத்தின் மையத்தில் வைத்து வழிபடுவார்கள். பின்பு சூட்டின்மேல் ஏறி அதன் உச்சிப்பகுதியில் தேங்காய் உடைக்கப்பட்டு சூட்டிலிருந்து மாவக்கையொன்றை இழுத்து களத்தைச் சுற்றி சொரியவிட்டு மிகுதிக்கதிரை அரக்கில் வைப்பார்கள். இவ்வாறு மூன்று முறை செய்யப்பட்டு நிறைவுபெற்ற பின்சூட்டுக்களத்தில் வேலைக்கமர்த்தப்பட்டோர் சூடுபோடுதலில் ஈடுபடுவார்கள்.

இவர்கள் தொடுவை மாடுகள் மிதிப்பதற்கு ஏற்ற அளவில் கதிர்களை களத்தில் இட்டு மாடுகளால் வளைத்து மிதிப்பார்கள், ஒரு மிதிக்கேற்ற கதிர் அளவை ஒரு "வாட்டி" என்பார்கள். குறிப்பிட்ட ஒரு வாட்டியை விடியும்வரை மிதிப்பதுண்டு. சில நெல்லினங்கள் விரைவாக சொரியும் தன்மையும் சிலவகை சொரிவதற்கு நீண்ட நேரமும் எடுக்கும்.

நீண்ட நேரம் சூடு மிதிப்பதால் எருமைகளும் அவற்றை வளைப்பவர்களும் சோர்வடைவதுண்டு. வேலை நேரத்தில் களைப்பை போக்குதற்காக மாடுகளை "குரக்காட்டுதல்" நடைபெறும். மாடுகளைக் குரல்காட்டும்போது வேலையில் ஈடுபட்ட மாடுகளை போற்றுதலும் புகழ்தலும், தாலாட்டு போன்ற சொற்கோர்வையாக அமையும். குரல்காட்டும்போது இப்பிரதேசத்தின் சிறப்புகளை கூறியும் குரல் காட்டுவதுண்டு. (பார்க்க: பின்னிணைப்பு பாடல்கள்)

சூட்டுக்களத்தில் நெற்கதிர்களை மிதித்து நெல்லாக்கிய பின்பு வைக்கோலை வேலையாட் தடியினூடாக நெல்லிருந்து வேறுபடுத்துவார்கள். இங்கு வேறாக்கப்பட்ட நெல்லை "பொலி" என்பார்கள். வைக்கோலை "மிதிஞ்சான்" என்பார்கள். பொலியானது அன்றைய வெயிலில் உலர்ந்த பின்பு பி.ப. இரண்டு மணியளவில் பொலிதூற்றுதல் நடைபெறும். அதாவது நெல்லிருந்து தூசிகளை வேறுபடுத்தலே இதன் நோக்கமாகும். பொலி தூற்றுவதற்காக மூன்று கதிகால்களைக் கொண்டு அமைக்கப்படும் முக்காலி போன்ற அவரி அமைக்கப்படும். அவரியை 'காற்று வளம்' பார்த்து நிறுத்திவைப்பார்கள். அதன்மேல் ஏறிநின்று பொலியைக் கொட்டுவது, பொலி விடுதல் எனப்படுகின்றது.

அவரிக்கு மேலே ஏறி பொலி விடுபவருக்கு, கீழே நின்று பொலியை அள்ளிக்கொடுப்பவரை "பொலி கட்டுபவர்" என்பார்கள். அவரிக்குக் கீழே நிற்கும் இன்னொருவர் சூட்டிலிருந்து மண்கட்டிகளையும், வேறு கழிவான பொருட்களையும் வேறுபடுத்தலில் ஈடுபடுவார். இவரை "கருங்காய் பொறுக்குபவர்" என்பார்கள். தூய்மைப்படுத்தப்பட்ட நெல்மணிகள் மீது கிடக்கும் இலைகுழைகளை போலத்தால் கூட்டிவிடு என்ற பொருளில், "போலம் வை" என்பார்கள். சூடடித்த பின்னர் உபயோகப்படுத்தப்படும் உபகரணங்களும் செயல்களும், குழூஉக் குறிகளாக சிறப்பான பெயர்கொண்டு அழைக்கப்படுவதுண்டு. அவற்றில் சில சொற்கள் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

தூற்றப்பட்ட நெல்மணிகள், சேகரிப்பதற்கு தகுதி பெற்று விடுகின்றன. இவற்றை வைரப்பொலி என்பார்கள். வைரப்பொலிகள் ஆரம்ப காலத்தில் கோட்டைகளில் வைத்துப் பேணப்பட்டன. கோட்டை என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கோலைக் கயிற்றுப்புரியாகப் புரிந்து, அதன் நடுவே வைக்கோலில் பொலியை வைத்து, சுற்றிக் கோளமாகக் கட்டப்பட்ட அமைப்பு. கோட்டையில் சேமிக்கப்பட்ட நெல், பூச்சிப்பாதிப்பு, நீர்க்கசிவு என்பனவற்றின் பாதிப்பின்றி, வருடக்கணக்கில் பாதுகாப்பாக இருக்கும். திறந்து மூடக்கூடிய வாய்ப்பகுதி இருப்பதால், அதிலிருந்து தேவையான நெல்லைப் பெற்றுக்கொள்வதும் இலகு. முதற்கோட்டையை குலதெய்வத்துக்கு பூசைக்கென நேர்ந்து விடுவது வழமை. ஏனைய கோட்டைகள் வீட்டுக்கு



எடுத்துச் செல்லப்பட்டு சேமிக்கப்படும். பிற்காலத்தில் சாக்கு மூடைகளும் அதன் பின்னர் நெகிழிப்பைகளும் நெல்லைச் சேமிக்கப் பயன்படுகின்றன.

சூடடிக்கப்பட்டு தூற்றப்பட்ட புதிரை வீட்டிற்குக் கொண்டுசெல்லும் போது சில மரபுகள் இருந்தன. மாட்டு வண்டியில் நெல் வீட்டுக்குக் கொணரப்படும் போது, வீட்டின் சுவாமியறை அலங்கரிக்கப்பட்டு, அங்கு குத்துவிளக்கு எரிந்துகொண்டிருக்கும். கோட்டை அல்லது மூடையோடு சேர்த்து, குட்டானும் நெல்லால் நிரப்பப்பட்டு வெள்ளைச் சீலையால் மூடப்பட்டு எடுத்துச் செல்லப்படும். வீட்டுக்குள் நெல் நுழைந்ததும், கணவன் பயபக்தியோடு நெல் நிறைந்த குட்டானை மனைவி கையில் கொடுக்க, அவர் அதை எடுத்துச் சென்று சுவாமியறையில் வைக்க குடும்பத்தார் வழிபடுவார்கள். அதன் பிறகு வீட்டின் குறித்தொதுக்கிய இடத்தில் நெல்லை வண்டியிலிருந்து இறக்கி சேமித்து வைப்பார்கள்.

அடுத்த காலபோகம் ஆரம்பிக்கும் வரைக்கும் உணவுக்கும் ஓய்வுக்கும் பஞ்சம் இருக்காது. கட்டு அம்மனுக்கு பொங்கல் பொங்குவது, வன்னியத்தம்புரானுக்குச் செய்தல், வதனமார் சடங்கு என்பன முக்கியமான வழிபாடுகளாகக் காணப்பட்டன. நாட்டுக்கூத்தும் வசந்தனாடலும் சிறப்புற இடம்பெற்றன. கலைகள் வளர்ந்தன. தெய்வங்கள் மகிழ்ந்தன.

காலம் வெகுவேகமாக ஓடிவிட்டது. விவசாயத்தில் எத்தனையோ மாற்றங்கள் இடம்பெற்றுவிட்டன. கலப்பையையும் மாடுகளையும் உழவு வண்டி பிரதியிட்டு விட்டது. பத்துப் பதினைந்து வெட்டுப்பாட்டி செய்த வேலையைச் செய்வதற்கு இன்று ஒரு அறுவடை வண்டி போதுமானதாக காலம் மாறி விட்டது. சூடடித்தல், பொலி தூற்றுதல், கோட்டை, முதலிய செயற்பாடுகளும் அவற்றுக்கான சமகாலப் பெறுமதியும் மறைந்தே விட்டன.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல தானே!
எங்கோ வெகுதூரத்தில் கேட்கிறது
"பொலிபொலியோ" ஓசை.
சூடான பெருமூச்சு மனப்பாரத்தைக்
குறைக்க முயன்றபடி வெளியே வந்து
விழுகின்றது.

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் பிரதேச விவசாயக் கலைச்சொற்கள் சில

அடையவளைஞ்சான் - எல்லை வரம்பு
அளை - சிறிய நீர்ப்பாதை
ஆயம் - காணிக்குரிய குத்தகை
இரட்டிப்பு - இரண்டாம் உழவு
பெருவாயன் - குட்டான் எனும் பாத்திரம்
சார் / உழவுசால் - கலப்பை சென்ற வழி
சிறுவாயன் - நாழி, ஒரு பாத்திரம்
உமை - வரம்பின் நடுவே நீர்கசியும் சிறுதுளை
நிலையெடுப்பு - முதல் உழவு
பொலி - விளைந்த நெல்
போலம் - குழையாலான சிறு விளக்குமாறு
முறிவு - வெள்ளத்தால் உடைந்த வரம்புகளில் உள்ள ஆழ்ந்த மடு
வக்கடை - வரம்பில் உள்ள நீர்வரத்துக்கான வழி
வெளி - வயல்வெளி
வாரிக்காலன் - எருமை மாடு
அட்டாளை - மிக உயர்ந்த பரண்
புரை - உயர்ந்த கால்கள்மேல் கம்பு மீது மண்பூசி அமைக்கும் வசிப்பிடம்
வேலைக்காரன்தடி - நெல்லைக் கிளறும் வளைவான தடி
பரண் - உயரமான மரங்கம்பின் மீது அமைந்த காவல் இடம்
சிறாம்பி - சிறிய பரண்.
கரைஞ்சான் (வாழைப்பழம்)
வலிச்சான் (உரொட்டி)
வெள்ளோடன் (தேங்காய்)
மிதிஞ்சான் (வைக்கோல்)
மின்னிகட்டுதல் (நித்திரை செய்தல்),
வருணன் (மழை),
கூளக்கையன் (பேய்),
பெருமாள் (ஆண்பிள்ளை), அடைக்கலச்சல்லி (பெண் பிள்ளை),
கடற்கரும்பு (மீன்),
கருங்காய் (நெல் தூற்றும் போது அகற்றப்படும் வேறு பொருட்கள்),
புகைஞ்சான் (புகையிலை),
களம் பொலிதல் (சூடுபோட்டு முடிவுறுதல்)
வெள்ளம் / கலங்கல் (தண்ணீர்)
கையாத்துதல் - (விதைக்காத முளைநெல்லை கிளறிவிடுதல்)
காத்தாடி (காவு தடி) - தோளில் சுமை காவிச்செல்லும் தடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெருகல் பிரதேச விவசாயப் பாடல்கள்

**தொகுப்பு: திரு. த. மகேந்திரன்**
*சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், பிரதேச செயலகம், வெருகல்.*

ஆலயடிப்பிள்ளையாரே நீ அரசடி ஐங்கரன்டா ஓகோ
பேழைவயிற்றோனே நீ பெருச்சாளி வாகனன்டா ஓகோகோ
முன்னங்கால் வெள்ளையடா நீ முகம் நிறைந்த சீதேவி ஓகோ
பால் போல் முகங்களெல்லாம் இப்போ பச்சிலை போல் ஆனதென்ன ஓகோகோ
நீ வேடகுலமடா ஐயா நீ வெள்ளார் வங்கிசம்டா ஓகோ
கண்டு பனையோலை இப்போ கணக்கெழுத வெள்ளோலை ஓகோகோ
மலையா மலைக்குறவா நீ மாவடங்கமே வீடா ஓகோ
மலடி தலைவாசலிலே தலைவாழை மேயவிட்டான் ஓகோகோ
வாட்டி நெறநெறன வளையிடதா கிடா அரசே ஓகோ
கண்டு மான் கண்டாரே நீ கவரிமா கண்டே ஓகோகோ
தூங்காதே தம்பியரே நான் துணைவாறேன் ஓகோகோ

உன் பிறகே கோனே கிடாவே கிடா அரசே
கிடாக்களுக்கு நாயகன்டா ஓகோகோ
முன்னங்கால் கெண்டையடா நீ முகம் நிறைந்த சீதேவி
ஓடி நட கண்டாரே நீ ஒண்ட உறுதி உன் காலிலே ஓகோகோ
கண்டு மான் கண்டாரே நீ கவரிமா கண்டே ஓகோகோ
இந்த நடை நடந்து என்ன செல்லாது கண்டாரே
காண இன்னமும் நேரம் செல்லுமடா ஓகோகோ
ஓட நல்ல வெட்டையடா உனக்கு உலவ நல்ல பூஞ்சோலை ஓகோகோ
வாட்டி வலமாக நீ வர உனது வால் வல்லரக்கா ஓகோகோ
ஓடி நட கண்டாரே ஒண்ட உறுதி உள்ள காலாலே ஓகோகோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடர் குலமையா நீ வெள்ளர் வங்கிசம்டா ஓகோகோ
பாலையடிப்பிள்ளையாரே நீ அரசடி ஐங்கரண்டா ஓகோகோ
அன்னநடையழகா நீ அலங்கார வால் வீச்சும்
சின்ன நடையழகும் ஒண்ட சிறப்பான வால்வீச்சும் ஓகோகோ
பால் போல நிலவே நீ பகல் முழுதும் ஏங்கிறதும் ஓகோகோ
நான் மாசி மறைந்திருந்தேன் நான் மழைமேகம் கீழிருந்தேன் ஓகோகோ

கந்தசுவாமி ஐயா எங்கள் கருணை உனதாகவேணுமையா ஓகோகோ
சித்திரவேலாயுதரே எனக்கு சித்தி தர வேணுமையா ஓகோகோ
ஆலையடிப்பிள்ளையாரே நீ அரசடி ஐங்கரண்டா ஓகோகோ
வயிரவ சுவாமி ஐயா எனக்கு வழி தர வேணுமையா ஓகோகோ
ஓடும் குளுக்காலி இப்போ உலா வரும் பால் மாடு
கண்டு மான் கண்டாரே நீ கவரிமா நீ கண்டோ ஓகோகோ
வேடர் குலமையா நான் வெள்ளர் வங்கிசம்டா
வெள்ளோலை வாசிக்க ஓர் வெள்ளாளப் பிள்ளை உண்டோ ஓகோகோ
வாசி களம் தேடி என் செல்ல கண்டே இப்ப வாறாளாம் சீதேவியார் ஓகோகோ

பத்தியாள் போற இட என் செல்ல கண்டே - இப்ப
பட்ட மரம் பால் சொரியும் ஓகோகோ
உத்தமியாள் போற இடம் என் செல்ல கண்டே
உளுத்த மரம் துளுத்து இருக்கும் ஓகோகோ
பொன்னூல் அவரி கட்டி என் செல்ல கண்டே
கற்பூதர் பொலியழகு பார் தாரம் ஓகோகோ

* * *

## நெல்வயல் சூழ் ஆனைத்தீவு

கொட்டியாற்றிலிருந்து தெற்கே செல்லும் பாதை, அங்கிருந்து 9 1/8 மைல் தூரத்தில் இருக்கும் தோப்புத்துறை எனும் இடத்தினூடாகச் செல்கிறது. தோப்புத்துறையிலிருந்து ஆனைத்தீவு தெற்கே 13 1/2 மைல் தொலைவில் அமைந்திருக்கிறது. இந்தப் பாதை நெடுகிலும் இடையிடையே நன்கு செய்கை செய்யப்பட்ட நெல்வயல்கள் காணப்படுகின்றன. பனை, தென்னை, புளி, காட்டுத்தேயிலை மரங்கள் ஊடறுக்க, ஆங்காங்கே சமவெளியில் கால்நடைகள், குறிப்பாக எருமைகள், மேய்கின்றன. இங்கு உள்ளூர் மக்களால் "பச்சரிசி" என்று அழைக்கப்படும் நெல் விதைக்கப்படுகிறது. அவியும் போது இது பாட்னா அரிசியை விட இருமடங்கு ஊதுகிறது......... ஆனைத்தீவிலிருந்து 2 3/8 மைல் தொலைவில் (இங்கு படகுகள் எப்போதும் தயாராக இருக்கின்றன. சில பணம் ஊதியமாகக் கொடுக்கப்பட்டு ஒரு பல்லக்கை மறுகரைக்கு கொண்டுசெல்ல முடியும்) மூலைக்கடை என்ற இடத்தில் வெருகலாற்றைக் கடக்கும் ஒரு பயணி, தன் முன் நன்கு நெல் பயிரிடப்பட்ட களிப்பூட்டும் தாழ்நிலமொன்றைக் காண்பார். இந்த ஆற்றின் இடது அல்லது வடக்குக் கரையிலுள்ள கோவில் மிகப்பழைமையானது என்பதுடன், போய்ப் பார்த்து வருவதற்கு நல்லதொரு இடம்.
(கொட்டியாறு - மூதூர், தோப்புத்துறை - தோப்பூர்)

*1816 முதல் 1829 வரை இலங்கையில் பணியாற்றிய பிரித்தானிய அதிகாரி பென்னெட்டின் குறிப்புகளிலிருந்து.*

Bennett, John Whitchurch. (1843). Ceylon and Its Capabilities, London: Allen and Co., pp.245 -247


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வெருகல் பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாடு

**திரு. ப. மதிபாலசிங்கம்**
ஈச்சிலம்பற்று

எமது வெருகல் பிரதேசத்தில் பண்டு தொட்டு 90%ஆன மக்கள் விவசாயத் தொழிலையே தமது பூர்வீகத் தொழிலாக கொண்டு வாழ்கின்றனர். தமது வாழ்வியலோடு இணைந்துவிட்ட வகையில் சிறுதெய்வ வழிபாட்டையும் மேற்கொண்டமையை எம்மால் அறியமுடிகின்றது. இப்பிரதேசத்தில் மக்கள் வாழ்க்கை எப்பொழுது ஆரம்பித்ததோ அப்போதிருந்தே தமது தொழிலையும் தெய்வ வழிபாட்டையும் சிறப்பாக மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். அந்தளவுக்கு தமது தொழிலையும் தெய்வ வழிபாட்டையும் ஒன்றோடொன்று இணைத்து வாழ்ந்துள்ளமையையும் அறியமுடிகின்றது.

இம்மக்கள் மேற்கொண்ட விவசாயத் தொழிலுக்கும், கால்நடை வளர்ப்பிற்கும் பாதுகாப்பாக தெய்வங்களை முன்னிறுத்தி அதற்கான பிரதிபலனாக தெய்வங்களுக்கான மடைகளையும், படையல்களையும் மேற்கொண்டு இருந்தனர். இங்கு குறிப்பிட்ட தலைப்பை முற்றுமுழுதாக பூரணப்படுத்துவதென்பது நீண்ட கட்டுரையாக அமையுமென்பதால் குறிப்பிடப்பட்ட சிறு தெய்வ வழிபாடுகளை மட்டும் எடுத்து நோக்குவது பொருத்தமாகும். அந்தவகையில் எமது பிரதேசத்தில் காணப்படும் சிறு தெய்வ வழிபாடுகளாக சிலவற்றை நாம் எடுத்துநோக்குவோமானால்,

1. அம்பாள் மடை அல்லது அம்மன் மடை
2. வன்னித்தெய்வ வழிபாடு அல்லது வன்னித்தம்பிரான் பொங்கல்
3. நாயன்மார் சடங்கு
4. வைரவர் வழிபாடு அல்லது வைரவர் மடை

இவ்வகை வழிபாடுகள் இப்பிரதேத்தில் பல கிராமங்களில் பன்னெடுங்காலமாக நடைபெற்றாலும் இன்னும் சில கிராமங்களில் பல்வேறு பெயர்களில் சிறு தெய்வ வழிபாடுகள் நடைபெற்றிருந்தமையும் அவற்றில் சில வழக்கொழிந்த நிலையிலும் காணப்படுகின்றது. இவற்றில் அம்மன் மடை, வைரவர் மடை போன்றன குல தெய்வவழிபாடாகவும் கருதிக் கொள்ளலாம். குறிப்பாக இவற்றை கிராமியத் தெய்வங்களாகவும் நாம் கருதலாம்.

சிறப்பாக உழவுத்தொழிலோடு தொடர்பான மக்கள் ஒருபருவ வேலையையும் ஒருபருவ வேலையின்மையும் கொண்டிருந்தனர். தமது வயல்கள் விதைத்து முடிந்து அறுவடைக்கு முற்பட்ட காலங்களிலேயே வன்னித் தெய்வ பூசைகள் செய்வதுண்டு. வன்னித் தம்பிரானிடம் வேண்டித் தயாரிக்கப்பட்ட தீர்த்தம் கொண்டே 'முசுறு விரட்டுதல்' எனும் கடமையை செய்கின்றனர். காடுகளில் முசுறு விரட்டுவதால் தமது வயல்களில் உள்ள பூச்சி, பீடைகள் அனைத்தும்விலகி ஓடும்என்ற நம்பிக்கையிலேயே இந்நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கதாகும். இப்பிரதேச விவசாயிகள் விவசாயத் தொழிலையும் கால்நடை வளர்ப்பையும் ஒருங்கே மேற்கொண்டனர். இதனால் விவசாயமும் கால்நடை வளர்ப்பும் சமாந்திரமாகவே நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமது பசுக்களின் முதற் பாலைக் கொண்டே வன்னித் தெய்வத்திற்கான பொங்கலை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது. மேற்படி வன்னித் தெய்வ வழிபாடு தொடர்பான மேலதிக விபரங்களுக்கு வெருகலசம் முதலாம் இதழைப் பார்க்கவும்.

நல் அறுவடை முடிவுற்ற பின்னரான காலத்தில் வேலையின்மை நிலைமையை இம்மக்கள் அனுபவிப்பார்கள். இக்காலத்தில் நாட்டுப்புறக் கலைகளையும் கிராமிய தெய்வீக வழிபாடுகளையும் மேற்கொண்டனர். இவை வழிபாடாக மட்டுமின்றி பொழுதுபோக்காகவும் அமைந்திருந்தமை சிறப்பம்சமாகும்.

அறுவடை முடிந்ததும் வைரவர் மடை நிகழ்வு இடம்பெறும். நமது இந்துமத மரபிலே ஆலயங்களுக்கு காப்பாக இருப்பவர் வைரவக் கடவுளாகும். அதேபோல் தமது வீடுகளிலும், வயல்களிலும் வைரவருக்கான வழிபாட்டிடம் அமைத்து தமது வாழ்விடத்திற்கும் தொழிலிடத்திற்கும் பாதுகாப்பை வேண்டி நிற்பது மரபாகும். விவசாய அறுவடை முடிந்ததும் தமது நன்றிக்கடனை செலுத்துவதற்காக வயல்களிலே வைரவர் மடைகள் போடுவதுண்டு இவ்வைரவர் பூசைகளை நடாத்துவதற்கென்றே ஊர்களில் பூசாரிகள் இருப்பார்கள். இவர்களை கொண்டே மடைபூசை நிகழ்வுகள் நடைபெறும். இவ்வழிபாட்டு நிகழ்வுகள் இப்பிரதேசத்தில் தற்போதுவரை தவறாது நடைபெற்று வருகின்றமையையும் நாம் காணுகின்றோம்.

மேலும் அம்மன் மடை, அம்மன் குளுர்த்தியும் கிராமிய வழிபாடுகளாக இப்பிரதேசத்தில் குறிப்பிடக் கூடியதாகும். மிகவும் சிறப்பாக நடைபெறும் சிறுதெய்வ வழிபாடகவும் இதனைக் கருதலாம். நோய்கள், பீடைகள் இல்லாமல் மக்கள் வாழவேண்டும் என்ற நோக்கோடு இம்மடைகள் நடைபெறுவது வழக்கமாகும். குறிப்பிட்ட அம்மன் மடைப் பூசைகள் ஆகமமுறைப்படி நடைபெறுவதில்லை இதனையும் ஊரில் வாழும் பூசாரிமார்களே செய்வது வழக்கமாகும். இப்பூசையில் 'கலை ஆடுதல்' முறையும் பின்பற்றப்படுகின்றது. அனேகமாக இவ்வழிபாட்டு நிகழ்வுகள் சித்திரை வைகாசி மாதங்களிலேயே நடைபெறுகின்றது. இதன் காரணம் அம்மன் மடை மழை வேண்டியும், சூடு தணித்து ஊர்கள் குளிர்வடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவுமே செய்யப்படுகின்றது.

இச்சடங்குகள் மூன்று தொடக்கம் ஐந்து நாட்கள் வரை இடம்பெறும். இது இரண்டு முறைகளில் இங்கு இடம்பெறும் அதாவது ஊர் மக்கள் அனைவரும் இணைந்து பொதுவான முறையில் செய்வதும், தனிப்பட்ட வீடுகளில் தமது குலதெய்வமாக அம்மனை வழிபடும் கிராமத்தவர்கள் தமது வீடுகளிலும் மடை போட்டு வழிபடுவர். பொதுவாக குளிர்ச்சியை வேண்டியே அம்மன் வழிபாடுகள் நடைபெற்று வருவது முறைமையாகும். அது மட்டுமல்லாது அம்மனை மகிழ்விப்பதற்காக கிராமியக் கலைகளை நிகழ்த்துவார்கள். குறிப்பாக வசந்தன் இதனை 'வையந்தன் அடித்தல்' எனவும் பேச்சுமொழியில் வழங்குவார்கள். கரகாட்டம், கும்மி போன்ற நிகழ்வுகளோடு சிலம்பாட்டங்களும் நடைபெறும். இச்சிறுதெய்வ வழிபாட்டுக்காலத்தில் கிராமங்களே விழாக்கோலம் பூண்டிருக்கும். ஏழு கன்னிப் பெண்களை முன்வைத்து குளிர்த்தி பாடி பூசைகள் நடைபெறும். குறிப்பாக இது ஆலயங்களில் நடைபெறமாட்டாது. இதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பொது இடங்களில் நடைபெறுவதுண்டு. விழா முடிவில் தயிர் கொண்டு தயாரிக்கப்பட்ட சுவையான மோர் பிரசாதமாக வழங்குவர். இக்காலப்பகுதியில் வேலை இன்மையால் ஓய்வாக இருக்கும் விவசாயிகள் இது போன்ற சிறுதெய்வ வழிபாடுகளில் தமது பொழுதினை கழிப்பர்.

இது தவிர வீரபத்திரர் எனும் தெய்வமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தில் காணப்பட்ட சிறுதெய்வ வழிபாடாகும். பல கிராமங்களில் வீரபத்திரரை காவல் தெய்வமாகவே முன்னிறுத்தி வழிபட்டார்கள். அதிகமாக வீரபத்திரரை ஊர் எல்லைகளிலே வழிபடச் செய்தனர். குறிப்பாக ஆனைத்தீவு கிராமத்தில் வீரபத்திர சுவாமி சடங்கு சிறப்பாக நடைபெற்றதை அறியமுடிகின்றது. அவ்வாறு காவல்தெய்வமாக வழிபட்டு வந்த வீரபத்திரருக்கு தற்போது சேனையூரில் ஆலயமும் அமைத்துள்ளனர். இத்தெய்வத்திற்கும் கிராமிய முறையிலே மடைப்பூசைகள் நடைபெறுகின்றன. இதனை வீரபத்திரர் மடை என்றே கூறுவார்கள். அதனோடு ஈச்சிலம்பற்றுக் கிராம மக்கள் ஊரின் நுழைவாயிலில் காவல் தெய்வமாக வீரபத்திரரை நிறுத்தி பன்னெடுங்காலமாக மடை போட்டு வழிபட்டு வந்ததாக அறியமுடிகின்றது. இந்நிகழ்வுகள் 1984ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் கைவிடப்பட்டிருப்பதையும் குறிப்பிடடாக வேண்டும். இருந்த போதிலும் அவ்வப்போது வீரபத்திரர் சடங்குகளும் மடைகளும் நடைபெற்றே வருகின்றது.

காலமாற்றம் காரணமாக சிறுதெய்வ வழிபாடுகள் வழக்கொழிந்து போவதை எம்மால் உணரமுடிகின்றது. ஆனாலும் சிறுதெய்வ



வழிபாடுகளில் நம்பிக்கை கொண்ட இப்பிரதேச மக்கள் அவைகளை நிகழ்த்தியே வருகின்றனர். இது பாராட்ட தக்கதாகும். தமிழர்களின் பண்பாட்டு அம்சங்களை இழந்து வரும் நிலையில் சிறப்பான பண்பாட்டு நடைமுறைகளையும், தமக்கே உரித்தான கலாசார விழுமியங்களையும் மறையவிடாது தமது வாழ்வியலோடு இணைத்து இன்று வரை வாழ்கின்ற மக்களுடைய உணர்வுகளை பாராட்ட வேண்டியே உள்ளது. இப்பிரதேச மக்களின் இவ்வாறான ஒழுகலாறுகள் தொடர வேண்டும் என்பதே பலருடைய எதிர்பார்ப்பாகும்.

* * *

### வெருகலின் அழகு

"கரும்பு, கமுகு, கதலி, மா, பலா முதலிய மரங்கள் நிறைந்த சோலை நடுவே வெருகற்பதியான் விளங்குகின்றான். கங்கை தெற்கேயும், தாமரைக்குளம் வடக்கேயும், கடல் கிழக்கேயும், வயல்வெளி மேற்கேயும் காணப்படும் அழகைக் கண்டு உலகத்தவர்கள் இதென்ன தேவலோகமோ என்று வியப்படையச் செய்கிறது வெருகற்பதி."

~ வெருகல் சித்திரவேலாயுதர் காதல் (17ஆம் நூற்றாண்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமயத் தலங்கள்

| இல. | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ செண்பகநாச்சி அம்மன் ஆலயம் | ஈச்சிலம்பற்று |
| 2 | ஸ்ரீ நாமகள் ஆலயம் | ஈச்சிலம்பற்று |
| 3 | வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயம் | வெருகல் |
| 4 | அரசடி மாணிக்க விநாயகர் ஆலயம் | வட்டவன். வெருகல் |
| 5 | வீரபத்திரர் ஆலயம் | சேனையூர். வெருகல் |
| 6 | நாக முத்துமாரியம்மன் ஆலயம் | வட்டவன், வெருகல் |
| 7 | சித்தி விநாயகர் ஆலயம் | சேனையூர். வெருகல் |
| 8 | ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் | வெருகல் |
| 9 | ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் | பூநகர் |
| 10 | ஸ்ரீ வெற்றி விநாயகர் ஆலயம் | பூநகர் |
| 11 | ஸ்ரீ தான்தோன்றி விநாயகர் ஆலயம் | பூநகர் |
| 12 | ஸ்ரீ வீரியடியார் சித்தி விநாயகர் ஆலயம் | பூநகர் |
| 13 | ஸ்ரீ செண்பகநாச்சி அம்மன் ஆலயம் | இலங்கைத்துறை |
| 14 | பத்தினியம்மன் ஆலயம் | இலங்கைத்துறை |
| 15 | செல்வ விநாயகர் ஆலயம் | இலங்கைத்துறை |
| 16 | ஸ்ரீ மீனாச்சி அம்மன் ஆலயம் | வாழைத்தோட்டம். ஆநெய்தீவு |
| 17 | ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயம் | வாழைத்தோட்டம். ஆநெய்தீவு |
| 18 | ஸ்ரீ நாகம்மாள் ஆலயம் | முத்துச்சேனை, ஆநெய்தீவு |
| 19 | ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் | முத்துச்சேனை. ஆநெய்தீவு |
| 20 | ஸ்ரீ பெரிய தெய்வம் ஆலயம் | கல்லடி, வெருகல் முகத்துவாரம் |
| 21 | ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் | சூரைநகர், வெருகல் முகத்துவாரம் |
| 22 | ஸ்ரீ காத்தவராயன் முத்துமாரியம்மன் ஆலயம் | இலங்கைத்துறை முகத்துவாரம் |
| 23 | ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் | புன்னையடி, இலங்கைத்துறை முகத்துவாரம் |
| 24 | லம்போதரர் ஆலயம் | புன்னையடி. இலங்கைத்துறை முகத்துவாரம் |
| 25 | ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் | இலங்கைத்துறை முகத்துவாரம் |
| 26 | கண்ணகி அம்மன் ஆலயம் | இலங்கைத்துறை முகத்துவாரம் |
| 27 | ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் | கறுக்காமுனை |
| 28 | ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் | கறுக்காமுனை |
| 29 | மதுரங்குளி நாக அம்பாள் ஆலயம் | கறுக்காமுனை |
| 30 | பால விநாயகர் ஆலயம் | கறுக்காமுனை |
| 31 | விக்கிர நந்த கணநாதர் ஆலயம் | பூமரத்தடிச்சேனை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 32 | ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் | பூமரத்தடிச்சேனை |
| 33 | ஆதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் | உப்பூறல் |
| 34 | நாகம்பாள் ஆலயம் | உப்பூறல் |
| 35 | நாகதம்பிரான் ஆலயம் | முத்துச்சேனை |
| 36 | கட்டம்மன் ஆலயம் | ஆநெய்தீவு |
| 37 | வைரவர் ஆலயம் | வாழைத்தோட்டம் |
| 38 | வைரவர் ஆலயம் | முத்துச்சேனை |
| 39 | ஆதி வைரவர் ஆலயம் | இலங்கைத்துறை முகத்துவாரம் |
| 40 | நாகதம்பிரான் ஆலயம் | இலங்கைத்துறை முகத்துவாரம் |
| 41 | மணல் குன்று பிள்ளையார் ஆலயம் | இலங்கைத்துறை முகத்துவாரம் |
| 42 | நாயன்மார் ஆலயம் | ஈச்சிலம்பற்று |
| 43 | வைரவர் ஆலயம் | ஈச்சிலம்பற்று |
| 44 | கறுப்பன்துறை பிள்ளையார் ஆலயம் | உப்பூறல் |
| 45 | குளத்தடி பிள்ளையார் ஆலயம் | சின்னக்குளம் |
| 46 | நாவலடி பிள்ளையார் ஆலயம் | ஈச்சிலம்பற்று |
| 47 | வன்னித்தம்பிரான் ஆலயம் | ஈச்சிலம்பற்று |
| 48 | நாகதம்பிரான் ஆலயம் | ஈச்சிலம்பற்று |
| 49 | கட்டம்மன் ஆலயம் | வயல்வெளி ஈச்சிலம்பற்று |
| 50 | கருமாரியம்மன் ஆலயம் | வட்டவன் |
| 51 | ஈழத்து மலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் | வட்டவன் |
| 52 | பால விநாயகர் ஆலயம் | வட்டவன் |
| 53 | வைரவர் ஆலயம் | புதுவெளி சேனையூர் |
| 54 | நாகதம்பிரான் ஆலயம் | சேனையூர் |
| 55 | ஆலையடி விநாயகர் ஆலயம் | சேனையூர் |
| 56 | விநாயகர் ஆலயம் | புதுவெளி சேனையூர் |
| 57 | பாலையடி நாகம்மாள் ஆலயம் | வெருகல் |
| 58 | வெருகல் துறையடி பாலமுருகன் ஆலயம் | வெருகல் |
| 59 | முச்சந்தி விநாயகர் ஆலயம் | மாவடிச்சேனை |
| 60 | ஆலையடி விநாயகர் ஆலயம் | மாவடிச்சேனை |
| 61 | நாகதம்பிரான் ஆலயம் | மாவடிச்சேனை |
| 62 | காவடி பிள்ளையார் ஆலயம் | மாவடிச்சேனை |
| 63 | மலை முருகன் ஆலயம் | மாவடிச்சேனை |
| 64 | கங்கை வைரவர் ஆலயம் | மாவடிச்சேனை |
| 65 | வெற்றி விநாயகர் ஆலயம் | உப்பூறல் |
| 66 | வீர மாகாளி ஆலயம் | உப்பூறல் |
| 67 | எல்லை வைரவர் ஆலயம் | உப்பூறல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 68 | முருகன்கேணி மாரியம்மன் ஆலயம் | உப்பூறல் |
| 69 | பால முருகன் ஆலயம் | உப்பூறல் |
| 70 | முனீஸ்வரர் ஆலயம் | உப்பூறல் |
| 71 | கட்டு பத்தினியம்மன் ஆலயம் | உப்பூறல் |
| 72 | காடேறியம்மன் ஆலயம் | உப்பூறல் |
| 73 | மாரியம்மன் ஆலயம் | சீனன்வெளி |
| 74 | வைரவர் ஆலயம் | சீனன்வெளி |
| 75 | செல்வ விநாயகர் ஆலயம் | சீனன்வெளி |
| 76 | புதுவெளி நாகதம்பிரான் ஆலயம் | கல்லடி |
| 77 | பாலக்கேணி வைரவர் ஆலயம் | கல்லடி |
| 78 | மலைநீலி அம்மன் ஆலயம் | கல்லடி |
| 79 | பெரிய சுவாமி ஆலயம் | சூரைநகர் |
| 80 | மீனாச்சி அம்மன் ஆலயம் | சூரைநகர் |
| 81 | சிவன் ஆலயம் | சூரைநகர் |
| 82 | பிள்ளையார் ஆலயம் | இலங்கைத்துறை |
| 83 | சிவசக்தி ஆலயம் | கறுக்காமுனை |
| 84 | நாகதம்பிரான் ஆலயம் | பூமரத்தடிச்சேனை |
| 85 | ஆலயடி விநாயகர் ஆலயம் | பூநகர் |
| 86 | பிள்ளையார் ஆலயம் | பூநகர் |
| 87 | அரிப்பு பிள்ளையார் ஆலயம் | அரிப்புச்சந்தி பூநகர் |
| 88 | ஆலயடி பிள்ளையார் ஆலயம் | சந்தாடி வீதி பூநகர் |
| 89 | கால வைரவர் ஆலயம் | நரியவட்டவன் பூநகர் |
| 90 | தாமரைக்கேணி பிள்ளையார் ஆலயம் | பூநகர் |
| 91 | நாகதம்பிரான் ஆலயம் | கங்கை வீதி பூமரத்தடிச்சேனை |
| 92 | கட்டக்காட்டுப் பிள்ளையார் ஆலயம் | பூமரத்தடிச்சேனை |
| 93 | வயல்வெளி பிள்ளையார் ஆலயம் | பூமரத்தடிச்சேனை |
| 94 | சிவன் ஆலயம் | சுங்கான்குழி பூமரத்தடிச்சேனை |
| 95 | வைரவர் ஆலயம் | கல்லரிப்பு வீதி பூமரத்தடிச்சேனை |
| 96 | சமுத்திரகிரி ரஜ மகா விகாரை | சீனன்வெளி , உப்பூறல் |
| 97 | பாசாண பப்பத ரஜ மகா விகாரை | கல்லடி, வெருகல் முகத்துவாரம் |
| 98 | மெதடிஸ்த சபை | கல்லடி, வெருகல் முகத்துவாரம் |
| 99 | ஜீவனுள்ள கிறிஸ்தவ சபை | சூரைநகர், வெருகல் முகத்துவாரம் |

**தொகுப்பு : யோ.சதேஷா**

இந்து கலாசார அபிவிருத்தி அலுவலர்,
பிரதேச செயலகம்,
வெருகல்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுவதை விட ஆலயங்கள் பல எழுப்புவதை விட புண்ணியம் கோடியாம் ஏழை ஒருவனுக்கு எழுத்தறிவித்தல்"

இன்று எமது நாட்டில் எத்தனையோ சிறுவர் சிறுமியர் பல்வேறுபட்ட சமூக பிரச்சினைகளுடனும் மன உளைச்சலுடனும் மற்றும் மிகச்சிறுவயதில் திருமணம் என பல்வேறுபட்ட இன்னல்களுடன் தமது இளமை வாழ்க்கையை வீணாக கழித்து வாழ்ந்து வருகின்றனர். காரணம் சிறுவயதிலிருந்தே அறநெறி கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காமையே ஆகும். பொதுவாக சமயக் கல்வி ஒவ்வொரு மனிதனுக்கும் தமது வாழ்க்கையை ஒளிமயமாக மிளிர கட்டாயமான ஒன்றாகும்.

பொதுவாக ஒவ்வொரு மதங்களுக்கும் தத்தமது மதம் சார்ந்த கருத்துக்களை படிக்கவும் கேட்கவும் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டுச் சமயம் சார் மக்கள் அதை கடைப்பிடித்தும் வருகின்றனர். ஆனால் சைவ சமயத்தில் இது கைநழுவிப்போய்க் கொண்டிருக்கின்றது. ஆரம்ப காலத்தில் பல்வேறுபட்ட அறிஞர்களும், மன்னர்களும், மகான்களும், முனிவர்களும், நாற்குரவர்களும், ஆழ்வார்களும் அயராது பாடுபட்டு பல்வேறு இன்னல்களுக்கும் அனல்வாதம் புனல் வாதம் என பல்வேறு சோதனைகளுக்கும் மத்தியில் எமது இந்து மதத்தை வளர்த்தனர். ஆனால் இக்காலத்தில் அவர்கள் விட்டுச் சென்ற பணியை கொண்டு செல்ல யாரும் முன்வருவதில்லை.

"காதற்ற ஊசியும்வாராது காணும்கடைவழிக்கே" என்னும் பட்டினத்தாரின் பாடலின் பொருளை விளங்கிக்கொள்ளாது நவநாகரீக வாழ்க்கை முறையில் மூழ்கி மனிதன் மறுபிறப்பை பற்றி சிந்திப்பதில்லை. காரணம் சிறுபராயத்தில் இருந்து அறநெறிக் கல்வி கிடைக்காமையே. மேலும் இளம் பெற்றோரின் வசதி வாய்ப்பை நோக்கிய சிந்தனைப்போக்கும் சமய கலாசார பெறுதிகளின் பெருமையை உணராமையும் மதத்தின் நோக்கமே மனிதனின் நிம்மதியான சந்தோசமான நல்ல நலவாழ்வே என்பதை உணராமையுமே அடிப்படைக் காரணமாய் இருக்கிறது. எனவே சிறுவயதிலிருந்தே அறநெறிக்கல்வியை போதிப்பது மிகவும் தேவையானது. மேலும் அறநெறிக் கல்வியானது சிறார்களுக்கு மட்டும் என்ற எண்ணப்பாட்டை, எல்லையை நிர்ணயித்துவிடாமலும் இருக்கவேண்டும்.



**அறநெறிக் கல்விக்காய் கரம் கோர்ப்போம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பணியை மீள வளர்ப்பதற்கு நாவலரோ, விபுலானந்தரோ தேவையில்லை. சைவராகப் பிறந்த ஒவ்வொரு மக்களும் நினைத்தால் போதும். இப்பணியை நழுவ விட்டால் நிம்மதியற்ற நெறியற்ற மக்கள் கூட்டம் உருவாகும். இதன் தொடர்ச்சியாக ஆதியான எமது சைவநெறி அந்நிய மதங்களின் ஆட்சியால் நசுக்கப்படும். எனவே நாம் அனைவரும் ஒன்றுபட்டு எமது சந்ததியினரிடம் அறநெறிக் கல்வியை கொண்டு செல்வோம்.

அந்தவகையில் இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் ஐந்நிலங்களும் தன்னகத்தே கொண்டு விளங்கும் எழில் கிராமமான வெருகல் ஈச்சிலம்பற்று பிரதேசம் சிறார்களுக்கு அறநெறி கல்வியினை போதிப்பதில் முன்மாதிரியாக வளர்ந்துவருகிறது. அறநெறி கல்வியினை போதிப்பதில் எமது பிரதேச அறநெறி ஆசிரியர்களுக்கு நிகராக யாருமில்லை. இவர்களின் இத்தூய பணிக்கு இறைவன் என்றும் ஆசீர்வதிப்பார் என்பதில் எதுவித ஐயமுமில்லை. அத்தோடு அறநெறி கல்வியின் வளர்ச்சிக்கு பிரதேச ஆலய அறங்காவலர்களின் பங்களிப்பை என்றும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் எமது பிரதேசத்தில் அறநெறிக் கல்வி வளர வேண்டும் என்பதில் மக்கள் அதிக ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர்.

ஆரம்ப காலத்தில் பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகள் ஓரிரண்டே காணப்பட்டன. ஆனால் தற்போது வெருகல் பிரதேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்ற ஆலயங்களின் பெயர்களில் தற்போது அறநெறிப் பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு வெருகல் பிரதேச செயலகம் முழு பங்களிப்பையும் மனதார வழங்கியுள்மை குறிப்பிடத்தக்கது.

மேலும் அனைத்து மாணவர்களுக்கும் சீருடையும் பல்வேறுபட்ட அறநெறி நூல்களும் கிடைக்கப்பெற்ற வண்ணம் உள்ளன. அறநெறிக் கல்வியில் பாலர் பிரிவு தொடக்கம் இளைஞர் பிரிவு வரை பரிணாம வளர்ச்சி கண்டு தற்போது எமது வெருகல் பிரதேசம் அறநெறிக் கல்வியால் மிளிர்கின்றமை யாவரும் அறிந்த உண்மையாகும். “எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு” எனும் வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கு இணங்க எமது பிரதேச அறநெறிக் கல்வியின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றிய அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும். அறநெறி வளர்ச்சிக்கு பக்கபலமாக இருப்போமாக!

"இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!"

**திரு. கி. வேணுகோபால்**
(அகில இலங்கை சமாதான நீதவான்)
பொறுப்பாசிரியர்,
ஸ்ரீ செண்பகநாச்சி அறநெறிப் பாடசாலை,
வெருகல்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈச்சிலம்பற்று வெருகல் பிரதேசத்தில் அழிந்துவரும் கலைகள்









**கி**ழக்கிலங்கையில் மிகவும் அழகிய எழில் கொஞ்சும் பிரதேசம் வெருகல் -ஈச்சிலம்பற்று. இங்கு வாழும் மக்கள் தமிழ் மொழி தாய்மொழியாகக் கொண்டவராவர். இங்கு குறிஞ்சி - முல்லை - மருதம் - பாலை - நெய்தல் ஐவகை நிலங்களும் சூழப் பெற்ற அழகிய பிரதேசம். வடக்கே மகிந்தபுர கிராமத்தையும், கிழக்கே வங்கக் கடலையும் தெற்கே மகாவலிகங்கையையும் மேற்கே கல்லரிப்பையும் எல்லையாகக் கொண்டு அமையப்பெற்ற இப்பிரதேசத்தில் 10 கிராமசேவையாளர் பிரிவுகளில் சுமார் பதினையாயிரம் மக்கள் வாழ்கிறார்கள்.

இப்பிரதேசத்தில் மிகவும் முதன்மையாகவும் தாய்க்கிராமமாகவும் திகழ்வது ஈச்சிலம்பற்று. கலைகளின் தோற்றுவாயாக இருந்த இந்தக் கிராமத்திலிருந்து தான் ஏனைய கிராமங்களுக்குக் கலைஞர்கள் விரிவடைந்து பரந்து வாழ்ந்தார்கள்.

எண்ணங்களையும் உணர்வுகளையும் பிறருக்கு விளங்குவதாக அமைவது கலையாகும். தமிழர்களின் வீரத்தின் அடையாளமாகவும் மனித நாகரீகத்தின் வளர்ச்சியாகவும் முதலாம் நூற்றாண்டு அதாவது சங்ககாலம் தொடக்கம் இந்த இருபத்தியோராம் நூற்றாண்டு வரை தமிழர்கள் செறிந்து வாழும் இடமெல்லாம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. இந்தக் கலைகள் ஆய கலைகள் அறுபத்துநான்கில் ஒருபகுதியாக இருக்கிறது. இந்தக் கலைகள் ஈழமண்ணில் மட்டும் அல்லாமல் உலகெங்கும் பரந்துகிடக்கிறது. தமிழர்களின் வாழ்வியலுடன் பின்னிபிணைந்து கலைகளும் வாழ்கின்றன.

இந்த வகையில் எமது வெருகல் பிரதேசத்தில் எப்படியான கலைகள் வளர்ந்தன என்று நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினால் நாட்டுக் கூத்து - இதை முன்பு எமது மக்கள் நாடகம் அல்லது றாமா என்று அழைத்தார்கள். அத்தோடு கரகம். கும்மி. கோலாட்டம் (வைந்தன் ) ஊஞ்சல் பாடல் தற்காப்புக் கலை இசைக்கருவிகள் வாசித்தல், ஒப்பாரி. மருத்துவிச்சி பாடல். குரவை. சாமியாடுதல். இப்படியாகக் கலைகள் எமது வெருகல் - ஈச்சிலம்பற்று மக்களின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாகத் திகழ்ந்தது. இவற்றைப் பற்றி நோக்குவோமாக.

நாட்டுக் கூத்து (நாடகம்/றம்மா) பற்றி நாம் நோக்குவோமாக இருந்தால் முதலில் எமது பிரதேசத்துக்குக் கொண்டு வந்தவர் மட்டக்களப்பு மகிழவட்டவான் ஊரைச் சேர்ந்த கற்பூர அண்ணாவியார். 1947 - 1948 காலப்பகுதியில் இங்கு வருகை தந்து இலங்கைத்துறை என்னும் கிராமத்தில் திருமணம் செய்த கற்பூர அண்ணாவியார் தான் முதலில் கூத்தை ஈச்சிலம்பற்று இளைஞர்களை அழைத்துப் பழக்கினார். இவர் முதலில் பழக்கிய கூத்தானது தர்மபுத்திரன் கூத்து. கர்ணன் சட்டை போன்ற கூத்துக்களும் அரங்கேற்றப்பட்டது.

இவரோடு சிறப்பாகப் பாடி மத்தளம் வாசிக்கக் கூடியவராக ஈச்சிலம்பற்று கிராமத்தைச் சேர்ந்த சபாபதி சின்னவன் விளங்கினார். இவர்கள் பழக்கிய கூத்தை ஈச்சிலம்பற்று கிராமத்தில் அமைந்துள்ள முச்சந்திகளில் களரிகட்டி ஆடினார்கள். கற்பூர அண்ணாவியாரைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கந்தையா அண்ணாவியாரால் மயானகாண்டம். சாவித்திரி சத்தியவான் மங்கம்மாசபதம் போன்ற கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன. இவரும் ஈச்சிலம்பற்றில் திருமணம் செய்து வாழ்ந்துவந்தவர்.

அதைத் தொடர்ந்து அரசமணி என்னும் கலைஞன் ஈச்சிலம்பற்று மண்ணில் வாழ்ந்தார். இவர் நாகம்மா என்னும் பெண்ணைத் திருமணம் செய்தார். இவர் வாழ்ந்த இடம் தற்போதும் ஈச்சிலம்பற்று செண்பகநாச்சி அம்மன் ஆலயத்துக்கு அருகாக உள்ளது. இவர் பாடுவதிலும் ஆடுவதிலும் சித்தவைத்தியத்திலும் சிறந்து விளங்கினார். இவரால் 1960 ஆண்டு காலப்பகுதியில் மகாபாரதத்தில் 18ஆம் போர் என்னும் கூத்து அரங்கேற்றப்பட்டது. கணபதி, கிளிமுத்து இப்படியான கலைஞர்கள் அதில் ஆடினார்கள். அரசமணி அண்ணாவியரால் பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு கூத்துபழக்கப்பட்டது.

கற்பூர அண்ணாவியார், கந்தையா அண்ணாவியார், அரசமணி அண்ணாவியார், இவர்களைத் தொடர்ந்து, அண்ணாவியராக இராசையா தம்பிராசா என்பவர் வெருகல் முகத்துவாரத்தில் வாழ்ந்தவர். இவரையும் அரசமணி அண்ணாவியாரையும் இப்போது வாழ்கின்ற மக்கள் அறிந்திருப்பார்கள். தம்பிராசா அண்ணாவியார் கலாபூஷணம் விருது பெற்றவர். இவரால் வள்ளியம்மன் கூத்து, அரிச்சந்திரன் மயானகாண்டம் இப்படியான கூத்துக்களை மிகவும் அழகாகப் பழக்கி அரங்கேற்றம் செய்தார். இவரும் பாடசாலை மாணவர்களுக்கும் சிறப்பாகக் கூத்துக் கலையைப் பயிற்றுவித்தவர். அப்போது மத்தள வித்துவானாக புன்னையடியைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி என்பவர் திகழ்ந்தார்.

ஈச்சிலம்பற்று மண்ணில் பிறந்து, பின்பு இடம்பெயர்ந்து பூமரத்தடிச்சேனையில் வாழ்ந்த கனகராசா என்பவரும் நாட்டுக்கூத்துகள் மற்றும் அம்மன் காவியம் தாலாட்டு போன்றவற்றைத் திறமையாகப் பழக்கி ஈச்சிலம்பற்று ஊரில் அரங்கேற்றம் செய்தவர். இவருடைய மகன் கனகராசா சித்திரவேல் இப்போதும் பூமரத்தடிச்சேனையில் அம்மன் காவியம் பாடுபவராகவும் விசவைத்தியராகவும் இருக்கின்றார். தற்போதும் அருகிவரும் கலைகளில் ஒன்றான கூத்துக் கலை புன்னையடியைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி அருணாசலம் அண்ணாவியாலும் சில இளைய கலைஞர்களினாலும் வாழ்ந்து வருகின்றது.

இனி கோலாட்டம் அல்லது வைந்தன் பற்றி நோக்குவோமாக இருந்தால் ஈச்சிலம்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட சித்திராவியர் தலைமையில் தான் காவடி ஆட்டங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாட்டம், போன்ற நிகழ்ச்சிகளைத் திறம்படப் பழக்கி 13ஆம் திருவிழா வரும்போது வெருலம்பதித் தலத்தில் ஆடுவார்கள்.

மழை இல்லாமல் ஊரில் பஞ்சம் ஏற்படும் போது கட்டம்மாள் திருத்தலத்தில் மடை போட்டு வைந்தன் அடிப்பார்கள். அதற்கும் சித்திராவியர் தான் தலைமை வகிப்பார். மிகவும் திறமையாகப் பாடுவார் திறமையாக ஆடுவார். அத்தோடு கரகம் கும்மி போன்றவையும் சித்திராவியரால் பழக்கப்பட்டு வந்தாகச் சொல்லப்படுகின்றது. இப்படியான மனிதர்களை வளர்த்தெடுத்த மண்தான் ஈச்சிலம்பற்றையாகும்.

குடம் ஊதுதல் எனும் கலையும் இங்கு நிலவியது. அதாவது மழை இல்லாமல் இருக்கும் காலத்தில் ஊரில் உள்ள பெண்கள் எல்லோரும் குடத்தை வாயில் வைத்து ஊதி செண்பகநாச்சி அம்மன் ஆலயத்திலிருந்து ஈச்சிலம்பற்று கட்டம்மன் ஆலயத்திற்குச் செல்வார்கள். அங்கு தங்கி இருந்து பால் காய்ச்சி குடம் ஊதி மறு நாள் வீடுவருவார்கள்.

அத்தோடு தற்காப்புக்கலையும் எமது வெருகல் மண்ணில் இருக்கிறது. இது 1960ஆம் ஆண்டின் பின்னர்தான் பிற ஊர் கலைஞர்களால் பழக்கப்பட்டது. அவர்களில் சிலர் இப்போதும் இருக்கின்றார்கள். வே. அருளானந்தம். வை.செல்வநாயகம் இப்படி சிலரைக் கூறலாம்.





ஒப்பாரி, தாலாட்டு இவை இரண்டும் எமது பிரதேச மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்தவை. 2000ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த இவை இப்போது நாகரீக வளர்ச்சியால் மருவி வருகின்றது. இப்போது மரண வீட்டில் ஒப்பாரி பாடுவதும் குறைவு.

எல்லாவற்றையும் நாம் தொகுத்து நோக்குவோமாக இருந்தால், நாட்டுக்கூத்து கும்மி, காவடி, கரகம், கோலாட்டம், ஒப்பாரி. தாலாட்டு தற்காப்புக் கலை. இவைகள் முன்பு எமது பிரதேச மக்கள் கட்டி பாதுகாத்து வந்தார்கள். எமது வெருகல் - ஈச்சிலம்பற்று பிரதேசத்தில். உலகில் நவீன நாகரீக வளர்ச்சியால் வெருகல் பிரதேசமக்களின் பாரம்பரிய கலைகள் அழிவின் விளிம்பில் இருக்கின்றது. எனவே முன்னோர்கள் கட்டிக் காத்தது போல் இந்த 21 நூற்றாண்டில் வளர்ந்து வரும் இளம் தலைமுறையினர் கூடிய கவனம் செலுத்தி எமது முன்னோர்கள் பாதுகாத்ததைப் போல எமது பிரதேச இளைஞர்களும் பாதுகாத்துப் பயிலவேண்டும் என்பதை உறுதியாக எடுத்துரைக்கின்றேன்.


**எழுத்தாளர். கவிமாமணி. கவிஞர்.**

**த. ரூபன்,**

செயலாளர்,

வெருகல் பிரதேச கலாசார அதிகாரசபை,

ஈச்சிலம்பற்று.


* * *




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் பேசும் குணம் பேசா மாந்தர் குலம்



பிறந்திருந்தாய் இப்புவியில் பெருமையுடன் வாழ்வதற்கு
புறப்பட்டாய் பணம் தேடி இன்று
பணமில்லா மாந்தர்க்கு குணம் இருந்தும் என்ன பயன்
பாசமுடன் உறவாடி பழகுவதற்கு யாருண்டு
குணமில்லா கொடுமையினை கண்டறிந்த போதினிலும்
பணம் பேசும் குணம் பேசா மௌனமது ஏங்கிடுமோ
வாரிவழங்கிடவும் வயற்காணி வளம்பெறவும்
ஏரிக்கரைதோறும் இன்பம் நிறைந்தோங்கிடவும்
கட்டிய மனைவியும் புன்சிரிப்போடு ஆங்கே
கணவனின் வருகைகண்டு கையுறையைக் காத்திருப்பாள்!

தாய், தந்தை, தனயனுடன் தாய்நாட்டையும் பிரிந்து
தரமான தொழில் தேடி அயல்நாடு பல ஓடி
வாய்ப்பான வருமானம் வளம்பெறவே தானெண்ணி
வான் புகழ வாழ்ந்திடவும் பணம் ஒன்றே அச்சாணி
பண்டைய தமிழ் மரபின் பண்பாடு பல கண்டு
அண்டை அயலருடன் வாணிபமும் வளர்ந்தோங்க
கண்டேன் கருத்தூன்றி காசுபணம் சேர்த்திடவே
நீண்ட பயணங்கள் நெடுநாளை கண்டிடுமோ
ஊக்கமுடன் ஊருலகம் உழைப்பிற்காய் நிதம் அலைந்து
ஆக்கம் பல கண்டுய்ய அர்ப்பணங்கள் செய்கின்றார்!

எம்நாட்டில் எமக்கு இருக்கும் மதிப்பு எங்கும் கிடைப்பதில்லை
திரைகடல் பலகடந்தும் திரவியங்கள் தேடுகின்ற
வரையறை இல்லாது வாழும் நாள் பலகடந்து
அரைவயதை அர்ப்பணித்து ஆக்கம் பெற எத்தனித்து
நரைதிரை வரும்வரையில் நாடிப்பணம் தேடுவார்
பொன் பொருள் சேர்த்திருந்தும் போதுமென்றும் சொல்லமாட்டார்
பட்டினியால் வாடுகின்ற பத்தினியும் பால்சுரக்க
பெட்டியிலே பணம் வேண்டும் பிறழாத நெறிக்காக
கொட்டிக் கொடுத்தாலே குடும்பமெல்லாம் குதுகலிக்கும்
பெட்டி உடைந்த போதும் போதுமென்ற சொல்வருமோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் நிறைய பொருள் வளரப் பூரிப்பிலாழ்ந்திடவும்
புகழோடு புரிந்துணர்வும் புன்னகையும் தாங்கிடவும்
தன்னிறைய கற்புநிறை காரிகையாய் வாழ்ந்திடவும்
கைநிறைய காசுபணம் கட்டாயம் தேவையடி
ஆயிரமாய் அணிகலன்கள் அடுக்கோடு வாங்கிவர
அனுதினமும் அவள்மேனி அருந்ததிபோல் ஆகிடவும்
பூமழைகள் பொழிந்ததுபோல் பொன் கலசமென்ன கண்டீர்
பூவையரும் புதுமகளாய் புகழ்சேர்க்க பணம் தேவை
கற்பனைக்கு கருப்பொருளாய் பணம் பேசுமன்று
கல்விக்குத் துணையாக களம் போடுமின்று!

பணமில்லாப் பிணமாக பலபேரும் வாழ்ந்திடவே
மணம்பூசி வந்தவரும் துணைபோக மாட்டார்கள்
கணம் கூடக் கையோடு கை சேர்க்கமாட்டார்கள்
மணம்வீசா மலர் போன்று மதிப்பின்றி வாழ்ந்திடுவர்
பள்ளிப்பருவத்தில் பால் மணக்கும் வதனமதில்
துள்ளித்திரிகின்ற துடிப்பான இளம்வயதில்
வெள்ளி நிலாவொளியில் விளையாட்டிக் களிகொள்ள
வெள்ளிப் பணமின்றி வெறுங்கையோ விளையாது
இன்னும் இளங்குயிலாய் இல்லாளும் இசைந்துவர
இல்லானாய் இங்கே இருப்போருக்கு ஏது நலன்!

சீர்கொண்ட செங்கோலும் செழிந்தோங்கும் சேவையுடன்
ஊருலகம் போற்றும் உயர் தகைமை உடையோனும்
பாரினிலே பலகாலம் பன்னாட்டு பண்போடு
நேரில் நெறி வளர்வதற்கு நிறைவானபணம் தேவை
நல்லவரும் வல்லவரும் நட்புடைய நண்பர்களும்
இல்லையெனக் கொள்வார்கள் எவரேனும் இவ்வுலகில்
தொல்லையென கொள்வார்கள் தொடர்போடு வருவதற்கு
நல்லபொருள் சேர்க்க நயமாக பணம் தேவையடி
மணம் வீசும் மங்கையருக்கும் பணமின்றி ஒன்றுமில்லை
கணமேனும் மதிப்பில்லை கற்றாருக்குப் பணமின்றி!

உறவென்று உள்ளதுவும் உருக்குலைந்து போகும்
உயர்வான பண்புநெறி உதவாது சாகும்
இறவாத இன்னுயிர்கள் இவ்வுலகில் இன்று - பணம்
இல்லார்க்கு தொல்லையென இருப்பவரும் உண்டு
பொருள் இல்லாதாருக்கு இவ்வுலகம் இல்லை
என்னும் பொன்மொழிக்கு ஆங்கே
இல்லாருக்கு இல்லை இவ்வுலகம் என்றும்
எல்லோருக்கும் இன்பசுகம் பணமும் மேலுண்டு
கல்லார்க்கும் கல்வியில்லா வல்லார்க்கும் இன்று
காசினியில் காசுபணம் கௌரவமாய் அமைவதுண்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையரின் அன்பும் அரவணைப்பும் தந்தைமுகம்
உன்னை உளமார ஊரெல்லாம் புகழ்பாட
பாசவலை வீசிடவும் பணம் காசு துணைபோகும்
நேசம் நிலைத்திருக்க நிலையாக உறவாட
ஈசனருள் தேடி இறையில்லம் ஏகிடவும்
காசுபணமின்றி கணமேனும் கைகூடா
பட்டம் பதவி பெற பகுத்தறியும் நூல்கள் பல
நட்டமெனக் கொள்ளாது நாடெங்கும் விளங்கிடவும்
எட்டாத தூரத்தில் இணைந்தவரும் இணைந்துவர
கட்டாயம் காசினியில் காசிபணம் தேவையடி!

ஈரைந்து வயதினிலே இளமைக்கு ஏது விலை
நாலைந்து வயதினிலே நாடியது ஒன்றுமில்லை
ஆறைந்து வயதினிலே ஆசையுடன் பாசமில்லை
ஏழைந்து வயதினிலே இல்லறத்தில் தொல்லைபல
காணிநிலம் வாங்க காசிபணம் தேவையடி
பேணிநலம் காக்க பெரிதாகபணம் வேண்டும்
ஏணிபல வைத்து எட்டாத தூரத்தில்
நாணித் தலைகுனிந்து நடக்க வைக்கும் காசிபணம்
காசில்லா வீட்டில் காகமும் கரைவதில்லை
கால்நடைகள் கூட கண்ணெதிரே வருவதில்லை!

உலகாண்ட உத்தமரும் உயர்கல்வி வித்தகரும்
பலகாலம் வாழ்ந்துய்யப் பணமொன்றே உயிர்நாடி
நாடுவிட்டுப் பாடுபட்டு நாட்கள் பலகடந்தும்
கேடுகெட்டுப் போனாலும் கேலிபல செய்திடினும்
நாடுவிட்டு நாடுவந்து நயம் காணவேண்டுமென
சூடுபட்ட போதினிலும் சுழன்றுவரும் பணமின்று
முதுகு வளைந்தங்கு முதுமையெனும் காலம் வர
மூப்பறிந்து முகங்கோணா முன்னிருந்து சேவைபெற
பாரினிலே பலகாலம் உய்யத்துணர்ந்து வாழ்வதற்கு
எதுவும் இழுக்கில்லை இதுதான் உண்மைநிலை!

**திரு. இ. பரமசிவலிங்கம்**
கலைஞர்,
வெருகல்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசத்திற்கு சிறந்த பிரஜையைக் கட்டியெழுப்பும் இலக்கியமும் கலையும்

இயற்கையன்னை மனிதனை அறிதல் நிறைந்த மூளையோடும் உணர்ச்சியும் கற்பனையும் ஊற்றெடுக்கும் உள்ளத்தோடும் படைத்துள்ளாள். மானுடனின் முழுத்த வாழ்விற்கு அறிவும் வேண்டும் உணர்வும் வேண்டும். ஒன்றை மட்டும் போற்றி மற்றொன்றைப் புறக்கணிப்பதால் மனித வாழ்வு ஊனமடைகிறது. அறிவை மாத்திரம் வளர்த்து உணர்ச்சியை புறக்கணிப்பதால் மனிதன் இயந்திரம் போன்றவனாகிறான். உணர்ச்சிகளை அடக்கி ஆளும் வல்லமையற்றவனாகிறான். உணர்ச்சியை மாத்திரம் வளர்த்து அறிவினை புறக்கணிக்கும்போது மனிதன் நல்லன தீயவற்றைப் பகுத்துணரும் பண்பையிழக்கிறான். நடுநிலையினின்று எதனையும் ஆயும் ஆற்றலையிழக்கிறான்.

அறிவியலை விஞ்ஞானமென்றும் உணர்ச்சியும் கற்பனையுங் கொண்ட படைப்புக்களைக் கலையென்னும் பாகுபாடு செய்வர். கலையை நுண்கலையென்றும் கவின்கலையென்றும் அழகுக்கலையென்றும் பலவாறு கூறுவர்.

கலை ஓவியம் சிற்பம் நாடகம் நாட்டியம் இசை இலக்கியம் எனப்பல உள்ளடங்குவது. இவை அனைத்திற்கும் உணர்ச்சி வெளிப்பாடே உயிராக விளங்குகின்றது. கலைகளை விட இலக்கியஞ் சிறப்புடையது. அது மொழியினைக் கருவியாக் கொண்டு பிறப்பது. காலத்தால் அழிவின்றி நிலைப்பதனையே அளவுகருவியாகக் கொண்டு வாழ்வது. உணர்ச்சியுங் கற்பனையுங் கூடிய அனுபவ செயற்பாட்டின் பிரதிபலிப்பாக அமைவது. இக் காரணங்களால் அது எல்லாக் கவின் கலைகளிலும் சிறப்புடையது.

இலக்கியத்தின் பயன்கள் பல. அவற்றுள் பிரதானமானது உலக வரலாற்றையே மாற்றியமைக்கும் தன்மை. அறிவியல் வளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களே வரலாற்றை மாற்றும் ஆற்றலுடையன. கொடுமையும் வற்புறுத்தலுங் கொண்ட அரசியலமைப்பினாலும் சட்ட திட்டங்களினாலும் நிலையான சீர்திருத்தம் உண்டாகாது. உள்ளத்தின் ஆழத்திலே முளைவிட்டு வளர்ந்து செழிக்கும் அன்பு அருள் தியாகம் தன்னல மறுப்பு முதலிய நல்லுணர்வுகளால் உண்டாகும் சீர்திருத்தமே நிலையானதும் பயனுள்ளதுமாகும். இந்நல்லுணர்வுகளை மனிதனிடத்தே பயிர் செய்யவல்லது இலக்கியம். அதனாலேதான் சட்டம் அறிவியல் தத்துவத்துறை முதலியவற்றை ஆக்குவோரினும் பார்க்க இலக்கியம் படைக்கும் புலவர்கள் ஆற்றலும் செல்வாக்கு உடையவர்களாய் மனித உள்ளங்களை ஆள்கிறார்கள் என ஆங்கில இலக்கிய விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

வாழ்க்கையென்னும் நறுங்கனியின் தீஞ்சுவைச்சாறே இலக்கியமெனில் அது முற்றும் பொருத்தமுடைத்து. உலகமாந்தர் இயல்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கடல் போல ஆழமும் அகலமும் உடையன. அவைகளை அளவிட்டு எல்லை காணுதல் சில வாழ்நாளும் பிணிச்சிற்றறிவு முடைய மாந்தர்க்கு இயலாததொன்று. ஆனால் பொய்யியல் புலமைச் சான்றோர் ஆக்கிதந்த இலக்கியங்கள் மாந்தரியல்பின் ஆழ அகலத்தையும் நன்மை தீமைகளையும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து கூற வல்லன. அன்றியும் பல கோணங்களில் கிளைத்துச் செல்லும் உணர்வோட்டங்களையும் மனவெண்ணங்களையும் ஆசைகளையும் நம்பிக்கைகளையும் வாழ்க்கை முறைகளையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டவல்லன. சங்க இலக்கியத்து அகத்துறைப்பாடல்களும் புறத் துறைப்பாடல்களும் இவ்வுண்மையைத் தெளிவாகவும் ஆழமாகவும் நுட்பமாகவும் புலப்படுத்துகின்றன.

புறத்துறைப்பாடல்களிலே சங்கச்சான்றோர்களின் திண்ணிய மனச்சான்றும் அஞ்சாமையும் புலப்படுகின்றன. வாழ்க்கைத் தத்துவங்களும் பண்டைத்தமிழர் வாழ்வு முறையும் வைர மணிகளாய் ஒளி விடுகின்றன. அகத்துறைப் பாடல்களிலே மாந்தரின் நுண்ணிய உணர்வோட்டங்கள் துடிக்கின்றன. ஆதனால் இலக்கியங் கற்போர் மன வளர்ச்சியுடையவர்களாய் ஒழுக்க நெறி நின்று வாழ்வாங்கு வாழ்வர் என்பது வெளிப்படையாம். சீரிய கலைகள் பல வகையின. ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை, இசைக்கலை என்று கலைகளில் அறுபத்துநான்கு உள்ளன. மனிதனோடு இயற்கையாகவே கலை இணைந்திருக்கிறது. இக்கலைகள் மனிதனின் உணர்ச்சிகள் சிந்தனைகள் என்பவற்றை தூண்டுகிறது. புலவர்கள் கவிஞர்கள் போன்றவர்களின் அடிப்படைத்திறன் இக்கலையேயாகும்.

மைக்கல் அஞ்சலோ கட்டிடக்கலை சிற்பக்கலை ஓவியக்கலை என்று பலகலைகளிலும் தேர்ச்சி பெற்றவர். அவர் தேர்ச்சி பெற்ற கலைகளை வெளிப்படுத்தியதால் உலகில் மிகப் பிரபல்யமானார். கலையினால் மனிதன் மென்மேலும் உயர்கிறான். கலை ஒரு மனிதனுக்கு அனுபவத்தையும் படிப்பினையையும் கற்றுக்கொடுக்கிறது. கலையினால் மட்டுமன்றி தேசத்திற்கும் அபிவிருத்தி கிடைக்கிறது. கலை இயற்கையை இரசிக்க வைக்கிறது. இயற்கையை மதிக்கவைக்கிறது. உலகினை அறியவைக்கிறது. பண்டைத்தமிழரின் பெருமை சிறுமைகளையும் பிறவற்றையும் அறிதற்கு கால வரையறையோடொட்டிய வரலாறில்லையெனப் பலர் கவலையுறுவர். வரலாறென்பது ஆண்டுத்தேதியும் அரசர் பெயர்களும் வரிசைப்படவமைத்த அட்டவணையன்று. மக்களது சிந்தையில் வளர்ந்த எண்ணங்களையும் வாழ்க்கைமுறையையும் காட்டுவதே உண்மை வரலாறாகும். இந்நிலையிலே தமிழிலக்கியம் உண்மைச்சரித்திரமாகத் தமிழினத்தின் எண்ணப்போக்கையும் வாழ்க்கை முறையையும் எடுத்து காட்டுகின்றது. இவ்வாறே வெவ்வேறின மக்களின் உண்மை வரலாற்றை அவர்களது இலக்கியங்கள் முலமாகக் காணுதல் இயலும்.

உலக மக்களிடையே ஒற்றுமையுணர்வை வளர்ப்பதற்கு புலவர் பலர் படைத்தளித்த இலக்கியங்கள் பேருதவி செய்கின்றன. உலக நாடுகளிடையே பல்வேறு வகைப்பட்ட கோட்பாடுகள் காரணமாகக் காலத்துக்குக் காலம் அவை பகைமை பூண்டு போரொலி கொட்டலாம். ஆனால் இலக்கியங்களையோ அவற்றினை ஆக்கித் தந்த புலவர் பெருமக்களையோ யாரும் பகைப்பதில்லை. மேலும் இன்று வேற்றுமொழி இலக்கியங்கள் சொந்த மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு மக்களிடையே பரப்பப்படுகின்றன. இவ்வாறு உலக இலக்கியங்கள் எங்கும் பரப்பப்படுமானால் உலகப் பொது மனித உணர்வு வளரும். ஒரே குடும்பம் ஒரே உலகம் என்ற சீரிய பொதுநோக்கு மலரும்.

ஒரு சிறந்த நல்ல முழுமையான ஒழுக்கமான பிரஜையை தேசியத்திற்கு கட்டியெழுப்ப இன்றியமையாப் பங்களிப்புச் செய்யும் இலக்கியத்தையும் கலையையும் பல்விதமாய்ப் பாடிப் போற்றிப் பேணுவோமாக.

**சு. பிரவீனா,**
இந்துக் கல்லூரி,
இலங்கைத்துறை முகத்துவாரம்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவலிகங்கை, கடலில் கலப்பதற்கு 40 மைல்கள் முன்பாக இரு கிளைகளாகப் பிரிகின்றது. கொட்டியாறுக்கு மேற்கே, திருக்கோணமலைக் குடாவில் கலக்கும் வரை, குருக்கள் கங்கை என்ற பெயரில் வடக்குப் பாதையில் செல்கின்றது. மற்றையது "குறிஞ்சாமுனை" என்ற இடத்தில் வலப்புறமாகப் பிரிந்து, வெருகல் ஆறு என்ற பெயருடன் ஆனைத்தீவுக்கு வடக்கிலும் தெற்கிலும் பல ஆற்றுவாய்களில் கடலில் சேர்கிறது. உள்ளூர் மக்களிடமுள்ள மரபுரை என்னவென்றால், மிகப்பழங்காலத்தில் வெருகலாறு தங்கள் வயல்களில் பாசனம் செய்வதற்காக அவர்களால் வெட்டப்பட்ட ஒரு சிறு வாய்க்காலாக இருந்தது. ஆனால் மண்ணின் மென்மை காரணமாக தன் படுகையை ஆழமாக்கிக் கொண்ட அந்த வாய்க்கால், தன் உண்மையான ஆற்றுப்பாதையில் வெட்டப்பட்ட சந்தியிலிருந்தே வேகமாக பெருமளவு நீரோட்டத்தை எடுத்து, பிரதான ஆற்றை சில காலங்களில் வற்றும் அளவுக்கு செய்துவிட்டது. இப்போது வெருகலாறு கிழக்கு இலங்கையில் பேரிரைச்சலுடன் பாயும் மிக ஆபத்தான ஆறு. இதே காரணத்தால் வெருகலின் தாய் ஆறான மகாவலி கங்கை ஆழம் குறைந்து போனதுடன், பல இடங்களில் வற்றி, நீர்வழிப் போக்குவரத்து செய்ய முடியாததாகவும் மாறிவிட்டது. பெருமழையை அடுத்து வரும் புதுவெள்ளத்தில் மட்டும் இப்போது மகாவலி பழைய ஆழத்துடன் பாய்கிறது.

மகாவலி ஆறு தனது நீரை வெருகலுக்குள் விடுவிக்கும் இடத்தில், வெருகலாற்றின் படுகை மிக ஆழமாகவும் ஒடுக்கமாகவும் இருப்பதால், அங்கு நீரோட்டம் பயங்கர வேகமாக இருக்கிறது. மழைக்குப் பிறகு இந்த நீர்ப்பாதையால் திருக்கோணமலைக்கு மரம் அரிந்து செல்லும் உள்ளூர் மக்கள், இரு ஆறுகளும் பிரியும் இந்த இடத்தை மிகக் கவனத்துடன் தான் கடக்கிறார்கள். வெருகலின் நீரோட்டத்தில் சிக்கி படகுகள் அடித்துச் செல்லப்பட்டு கடலுக்குள் விடும் நிலைமை அங்குண்டு. படகுகளில் வந்தோர் அவற்றைக் கைவிட்டு விட்டு, நீந்திக் கரையேற வேண்டியது தான்..... வெருகலாறு பிரிவதற்கு சற்று முன்பு உள்ள மண்புட்டிகளையும் திட்டுக்களையும் அகற்றினால், வெருகலுக்குள் திசைதிரும்பும் நீரை தடுத்து மகாவலிக்குள்ளேயே செலுத்த முடியும்.

- சேர் ஜேம்ஸ் எமர்சன் டெனன்ட்

Tennent, J.E. (1859). Ceylon: An Account of the Island, Volume II, London: Longman, Green, Longman, and Roberts, pp.423-24.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்படத்துறையில் வெருகல் இளைஞர்கள்

நம் மத்தியில் சினிமா என்றாலே தென்னிந்தியச் சினிமா தான். என்னைப் பொறுத்தவரை சினிமா என்பது பொழுது போக்கிற்காக மட்டும் உருவாக்கப்படுகின்றது என்பதையே சிறுவயதில் இருந்து எண்ணியிருந்தேன். ஆனால் தொழில் ரீதியாகவும் லாபம் அடையக் கூடியதுமான ஒரு துறையாக திரைத்துறையை பின்புதான் அறிந்துகொள்ள முடிந்தது. இருந்தாலும் அதனை பார்க்கவும் ரசிக்கவும் மட்டுமே முடிந்தது. அதற்குரிய வசதி வாய்ப்புகளும் என்பிரதேசத்தில்குறைவாக இருந்தது. எந்தவித தொழில்நுட்ப வசதிகளும் அற்ற எமது பிரதேசத்தில் சினிமா சார்ந்த படைப்புகள் எல்லாம் பார்க்க முடியுமே தவிர படைக்க முடியாது என்றுதான் கூறவேண்டும்.

கலைஞர்கள் மத்தியில் கலைத் திறமைகள் நிறைந்து காணப்பட்டாலும் அது தொடர்பான தெளிவையும் வழிகாட்டல்களையும் செய்வதற்கு யாரும் முன்னோடிகள் இங்கு இல்லை. சினிமாத் துறையில் ஈடுபட வேண்டும் என்ற ஆசைகளுடனும், விருப்பங்களுடனும் திறமைசாலிகள் மட்டுமே இருந்தார்கள். வெருகல் பிரதேசத்தில் இவ்வாறான கனவுகள் மற்றும் ஆசைகளுடன் இருந்த நிறைய கலைஞர்களின் விருப்பமும் ஆசையும் நிறைவேறும் முகமாக திரைப்படத்துறையை எம் பிரதேசத்தில் வளர்க்க வேண்டும் எனவும் இங்குள்ள வாழ்க்கைச்சூழலை வெளி நாடுகளுக்கும் கொண்டு செல்ல வேண்டும் எனவும் சமீப காலமாக எமது வெருகல் பிரதேசத்தில் இளைஞர்களின் முயற்சியில் திரைப்படங்கள் மற்றும் குறும்படங்கள் துரிதகதியில் உருவாகிக்கொண்டு இருக்கின்றன என்பது சந்தோஷமான செய்தி தான். எனவே கலை கலாச்சாரம் பண்பாடு என்று கலைத்துறையில் ஈடுபாடு காட்டி வந்துள்ள கலைஞர்கள் திரைப்படம் ஊடாக பாரம்பரிய கலை வடிவங்களையும், புதிய உருவாக்கங்களையும் ஆவணப்படுத்த நினைப்பது சிறந்த விடயம் ஆகும். அந்த வகையில் வெருகல் பிரதேசத்தில் இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பற்றியும் துறை வளர்ச்சி பற்றியும் விரிவாக நோக்குவோம்.

**இயக்குனர் ஜனா மோகேந்திரன்**



வெருகல் பிரதேசத்தில் ஆரம்பத்தில் நாடகத்துறைதான் அதிகம் காணப்பட்டது. பாடசாலைகள், சமய விழாக்கள் போன்றவற்றில் இத்துறை நடைமுறையில் இருந்தது ஆனால் எனக்கு சிறு வயதில் இருந்தே எண்ணிம ஊடகம் (டிஜிற்றல் மீடியா) மீது இருந்த ஆர்வம் காரணமாக இத்துறைக்குள் வரவேண்டுமென்ற ஈடுபாடு இருந்தது.

அதன் பின்னர் 2019 ம் ஆண்டு மட்டக்களப்பில் இத்துறை சார்ந்த நண்பர்களின் பிணைப்புக்களுடனும் வெருகல் பிரதேசத்தில் எனது நன்பர்களான ஜெ.தவமுரளி, வி. கிருபானந்தம், கு.குஜெந்தன் போன்றவர்களின் பங்களிப்புடனும் குறும்படங்கள் செய்ய தீர்மானித்தோம். வெருகல் பிரதேசத்தில் சினிமாத்துறையை வளர்க்க வேண்டும் என்ற அவாவில் ஆரம்பகட்ட பயிற்சியாகவே "மறைபுதிர்" எனும் விஞ்ஞானப் புனைவு சார்ந்த குறும்படத்தை எடுத்திருந்தோம். இது வெருகல் பிரதேசத்திலிருந்து வெளிவந்த முதலாவது குறும்படமாகும். 400 க்கும் மேற்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையாளர்களின் முன்னிலையில் மறைபுதிர் குறும் படம் பிரம்மாண்டமாக வெளியிடப்பட்டது.

இதன் வெற்றியைத் தொடர்ந்து எமது பிரதேசத்தில் எங்களுடைய முழு நோக்கமாக இருந்தது, எமது சமூகத்தில் இருக்கின்ற அவலங்கள் என்ன? ஏக்கங்கள் என்ன? எங்களது அடையாளங்கள் என்ன? பிரதேச ரீதியாக மாவட்ட ரீதியாக நாம் பேசுகின்ற மொழிவடிவங்கள் என்ன? பழமையான விடயங்களை என்ன? போன்ற விடயங்களை ஆவணப்படுத்த வேண்டிய வேவை ஏற்பட்டது. ஒரு குறிப்பிட்ட தலைமுறையினர் செய்யாமல் விட்டதனால் அவை அழிந்து விட்டது. இனி வரும் சமூகத்திற்கு எமது பிரதேச அடையாளங்களை கட்டிக் காத்து கொடுக்க வேண்டும் என்பதே எமது குழுவினரின் நோக்கமாகும்.

அதனை தொடர்ந்த "ஒற்றைச்சிறகு" எனும் முழுநீளத் திரைப்படத்தை வெளியிட்டுள்ளோம். இதுவும் எம் பிரதேசத்தில் உள்ள சிக்கல்களை அடிப்படையாக கொண்ட படமாகும். இப்படத்தில்இடம்பெற்ற "வெருகல் பெண்ணே" பலரது கவனத்தையும் ஈர்த்து பாராட்டுகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

எமது பிரதேசத்தில் நிறைய கலைஞர்கள் உள்ளனர் ஆனால் வசதி வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளது. திறமைகள் இருந்தும் அதனை எவ்வாறு வெளிக்கொண்டு வருவது என்ற வழிகாட்டல்கள் குறைவாகவே உள்ளது. அவர்களுக்கான வழிகாட்டல்களையும் ஆர்வமுள்ள புதுக்கலைஞர்களையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதே எமது குறிக்கோளாகும்.

**கஜரூபன்**

வெருகல் வட்டவன் கிராமத்தில் கஜரூபன் என்பவரின் இயக்கத்தில் வெறும் தொலைபேசியை வைத்துக்கொண்டு "Phone" எனும் குறும்படம் உருவானது. சமூக விழிப்புணர்வூட்டும் வகையில் அமைந்த இந்தக்



குறும்படத்தின் கதைக்கருவாக நவீன உலகில் மனிதன் அடிமைப்பட்டு வாழ்கின்ற தன்மை காட்டப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் நாங்கள் சந்தோசமாக ஓடியாடி விளையாடி இருந்தோம். மனம் மகிழ்ச்சியாகவும் முகம் செழிப்பாக இருந்தது.

ஆனால் இன்றைய உலகில் மனிதன் வெறும் கைபேசி எனும் கருவிக்குள் அடங்கிவிட்டான். போன் வந்ததும் எமது பாரம்பரிய விளையாட்டுக்கள் அழிந்து நவீன மெய்நிகர் விளையாட்டுக்கள் தலைதூக்கி மனிதனை ஆட்டிப் படைக்கின்றது என்பதை கதைக்கருவாக கொண்டு கைபேசியால் ஏற்படும் பாதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட சமூக விழிப்புணர்வு குறும்படம் இதுவாகும். இதில் முக்கிய விடயம் என்னவென்றால் இந்தப் படம் முழுக்க முழுக்க தொலைபேசியில் படப்பிடிப்பு செய்யப்பட்டது என்பது தான்.

கஜரூபன் சொல்வதாவது: பாடசாலைக் காலங்களில் பல நாடகங்களில் நடித்து மாவட்ட மட்ட மாகாண மட்ட தேசிய மட்டம் என சென்றதால் நடிப்புத் துறையில் ஆர்வம் ஏற்பட்டது. அத்துடன் ஒரு சில நாடகங்களை நானே நெறியாள்கை செய்து மேடையேற்றி உள்ளேன் இதனால் சினிமா துறைக்குள் உள்நுழைய வேண்டும் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வமே தான் குறும்படங்களை எடுப்பதற்கும் காரணமாக அமைந்தது. இதனடிப்படையில் என்னால் Phone, ரகசியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ரகசியம் 2 போன்ற குறும்படங்கள் தொலைபேசி ஊடாக எடுக்கப்பட்டது எனலாம் இதனை "Verugal media" எனும் யூரியூப் தளத்தில் பார்வையிட முடியும். தொடர்ந்து ஒரு நாள் இரவு எனும் திரைப்படத்தினை தயாரித்து வருகின்றனர் எமது படக்குழுவினர்.

**டிரோன்**


அடுத்த கலைப்படைப்பாக வாழைத்தோட்டம் கிராமத்தில் வெளியான



"காளியன்" குறும்படம் டிரோன் எனும் இளைஞரின் தயாரிப்பிலும் இயக்கத்திலும் வெளியானது. பல குரல்களிலும் பேசகூடிய திறமை கொண்ட டிரோன் இத்துறையில் அதிகம் ஆர்வமுள்ளவர். நிறைவான சாதனைகள் படைக்க தன்னிடம் உள்ள வளப்பற்றாக்குறையே காரணமாகும் என தெரிவித்தார்.

**சனோச்**

சூரநகரை சேர்ந்த சனோச் அவர்களின் படைப்பை பாற்றி பார்க்கும் போது எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற இளவயது திருமணங்களை அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்ட குறும்படமாகும். அதாவது திருமண வயது வருவதற்கு முன்பே பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு திருமணம் முடித்த வைக்கின்றனர். இதனால் பிள்ளைகளின் வாழ்க்கை வேதனைக் குரியதாகின்றது என்பதை வேதனை எனும் குறும்படம் வாயிலாக சித்தரித்துள்ளார். என்னதான் பெரிதாக கனவுகள் காணப்பட்டாலும், சிந்தனைக்கேற்ப



படைப்புக்களை வெளியிட முடியாமல் உள்ளது என தெரிவித்தார் இவர். அடுத்து இயக்குநர் துசாகரன். தெரு ஓரம், ராயப்பன், ராயப்பன் 2 என நகைச்சுவை குறும்படங்களை தயாரித்து வெளியிட்டுள்ளார் தொடர்ந்து மருவீரன் எனும் காதல் கதையை படம் பிடித்து வருவதாக படக்குழுவினர் தெரிவித்துள்ளனர். வெருகல் பிரதேசம் போலவே வசதிகள் குறைந்த எல்லைப் பிரதேசமான வாகரை பிரதேசத்திலும் குறும்படங்கள் வெளிவந்துள்ளன. இயக்குநர் தினேஸ் அவர்களின் இயக்கத்தில் வெளியான திடம் எனும் குறும்படம் இயற்கை விவசாயத்தை ஊக்கப்படுத்தும் ஒரு சமூக விழிப்புணர்வு குறும்படமாகும். தொடர்ந்து அடுத்த படத்துக்கான வேலைகள் நடைபெற்று வருவதாக படக்குழு தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப வசதிகள் அற்ற எல்லைக்கிராமங்களில் இது போன்ற படைப்புக்கள் உருவாவது பாராட்டத்தக்க விடயமாகும். இந்த இளைஞர்களின் கனவுகள் நனவாகி எதிர்காலங்களில் சினிமாத்துறையில் பாரிய வளர்ச்சி அடைய வேண்டும். இப்பிரதேசத்து கலைஞர்களின் திறமைகள் உலக அரங்கில் பேசப்பட வேண்டும் என்பதே எனது விருப்பமுமாகும்.

**ஜெ. தரவமுரளி,**
*பூமரத்தடிச்சேனை.*

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் முற்றத்தில் மறைந்த "கிட்டியும் புள்ளும்" விளையாட்டு

அழகிய தனித் தமிழ்ப் பிரதேசமாய் இலங்கை திருநாட்டில் வளம் கொழிக்கும் வெருகல் பிரதேசத்தின் தொன்மை அறிவீரோ! எம் மண்ணின் பெருமை மிகுந்த பல கிராமிய விளையாட்டுக்களை சில பெரியவர்களினதும் பாட்டிமாரினதும் மெய்சிலிர்த்த வார்த்தைகளின் வழியே தொகுத்தெடுத்த சிறு திரட்டே எனது இந்த படைப்பு.

வெருகல் பிரதேசத்திற்கு உட்பட்ட பல கிராமங்களில் பல கோணங்களில் இக்கிராமிய விளையாட்டுக்கள் உள்ளன. அவ்வொவ்வொரு கிராமத்திலும் வித்தியாசமான ஆற்றுகை முறைகளிலும் வித்தியாசமான பெயர்களிலும் விளையாட்டுக்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு நிகழ்த்தப்பட்ட விளையாட்டுக்கள் பல பண்புகளையும் உண்மை தன்மைகளையும் உள்ளடக்கியிருக்கின்றது. பண்பாடுகள் கலை கலாச்சார விழுமிய ஒழுக்க பண்புகள் மாறாமலும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. அதில் ஆண், பெண், வயது வந்த பெண்கள், சிறுவர்கள், பெரியவர்கள், வயதானவர்கள் என்று பலராலும் விளையாடப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

இந்த கிராமிய விளையாட்டுக்களினூடாக, அன்பு, ஒற்றுமை, மகிழ்ச்சி, கூட்டு முயற்சி, அணுகுமுறைகள், சில தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளுக்குரிய வழிமுறைகளையும் இவ்விளையாட்டுக்கள் வெளிப்படுத்தி இருக்கின்றமையை அறிய முடிகின்றது. இவற்றுள் கிட்டியும் புள்ளும், பூசணிக் கொடி, பிடிகோடு, சுத்து பந்து, கோள் தள்ளுதல் பம்பரம், பளிங்குக்குண்டு எறிதல், காசு விளையாடுதல், சில்லி கோடு, முட்டிப் பானை, சிறட்டை பானை, கிளித் தட்டு, இறைச்சிக் கொத்து, கிள்ளிப் புறாண்டி, பாம்பு மட்டை, ராகாவ பிடிச்சாச்சு, கிளி புறா, பல்லாங்குழி, கள்ளன் பொலிஸ், இவ்வாறு பல விளையாட்டுக்கள் பரவலாக விளையாடப்பட்டு இருக்கின்றது. அவற்றில் முக்கியமான ஒன்று "கிட்டியும் புள்ளும்" (உரு 9.1).




**உரு 9.1 கிட்டியும் புள்ளும்**

- இவ் விளையாட்டில் இரண்டு குழுக்கள் இணைந்து விளையாடுவார்கள். ஒரு குழுவில் ஆகக் குறைந்தவர்கள் ஐவரும் அதற்கு மேற்பட்ட பலரும் விளையாடுவார்கள்.
- சமதரையில் சிறு குழி ஒன்று அமைத்து குழியின் ஆமல் புள்ளை வைத்து கிட்டியால் உச்ச (எற்றுதல்) வேண்டும்.
- குழுவில் உள்ள ஒருவர் பின் ஒருவராக உச்ச வேண்டும். புள் நிலத்தில் விழவிடாமல் மறு குழு பிடித்தாலோ அல்லது விழுந்த புள்ளை உச்சியவர் கிட்டிக்குக் குறிபார்த்த எறிந்து கிட்டியில் பட்டால் உச்சியவர் ஆட்டம் இழப்பார். மறு நபர் உச்ச தொடங்குவார்.
- அவ்வாறு எறியப்படும் புள்ளு கிட்டியில் படாவிட்டால் உச்சியவருக்கு கிட்டியால் புள்ளை தூக்கி அடிக்க மூன்று சந்தர்ப்பம் வழங்கப்படும்.
- அவ்வாறு அடிக்கப்படும் கிட்டிபுள்ளு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் தூரத்தை அடிக்கும் கிட்டியால் அளப்பார்கள். இவ்வாறு ஒவ்வொருவரும் புள்ளை அடித்து அளக்கும் தூரத்தை வைத்து வெற்றி தோல்வி பெறப்படும்.

- குறிப்பாக இவ் விளையாட்டில் "05 அடி" "100அடி" என்ற அளவுகளில் புள்ளு அடிக்கப்படும் தூரத்தை அளப்பதன் மூலம் வெற்றி நிர்ணயிக்கப்படும்.

- புள்ளை உச்சுகின்ற குழு குறிப்பிட்ட வெற்றி இலக்கை அடையாமல் ஆட்டம் இழந்தால் மறு குழு உச்சத் தொடங்கும். அவ்வாறு வெற்றி பெற்றால் வெற்றியை கொண்டாடும் வகையில் இவ் விளையாட்டு இரண்டாவது கட்டத்திற்கு நகரும்.

- புள்ளு உச்சப்படும் குழியில் இருந்து வெற்றி பெற்ற குழுவில் உள்ள அனைவரும் புள்ளை கையால் தூக்கி கிட்டியால் புள்ளுக்கு அடிப்பதற்கு மூன்று சந்தர்ப்பம் வழங்கப்படும்.

- குழுவில் உள்ள அனைவரும் புள்ளை அடித்து ஒரு குறிப்பிட்ட தூரம் வரை கொண்டு செல்வார்கள்.

- கிட்டியால் அடித்துக் கொண்டு செல்லப்பட்ட புள்ளை தோல்வி அடைந்த குழுவில் உள்ள அனைவரும் ஒருவர் பின் ஒருவராக "கிட்டிப்புள்ளு" விளையாட்டுக்கே தனித்துவமான பாடல்களைப் பாடி மூச்சு பிடித்து கிட்டி உச்சுகின்ற குழிவரை புள்ளைக் கொண்டு செல்வார்கள்.

உதாரணமாக:

01. "ஆலையிலே சோலையிலே ஆலம்பாட்டி சந்தையிலே கிட்டியும் புள்ளும் கிறுகி அடிக்க பாலாறு பாலாறு பாலாறு......

02. "வேலி அருகில் வெங்காயம் வெட்டி பாத்தால் சாராயம் குடிச்சிப்பாத்தால் வேப்பெண்ண வேப்பெண்ண வேப்பெண்ண....

03. ஓடுற நரியில ஒரு நரி கிழ நரி கிழ நரி முதுகில ஒருபிடி நரமுடி நரமுடி நரமுடி.....

இவ்வாறன பாடல்களை மூச்சுவிடாமல் பாடிக்கொண்டு வருவார்கள். பாடல்களை பாடி கொண்டு தோல்வியடைந்த குழுவில் உள்ள அனைவரும் புள்ளு உச்சப்படும் இடம் வரும் வரை கொண்டு செல்ல வில்லை என்றால், வெற்றி பெற்ற குழுவில் உள்ள அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை புள்ளை கிட்டியால் அடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

தோல்வி அடைந்த குழு மீண்டும் புள்ளை கையில் கொண்டு புள்ளு உச்சப்படும் இடத்தை நேக்கி ஒருவர் பின் ஒருவராக ஓடத் துவங்குவார்கள். புள்ளு உச்சப்படும் இடத்தை வந்தடைந்ததும் இவ் விளையாட்டு நிறைவடையும். பின்பு தோல்வி அடைந்து பாடிய குழுவினர் புள்ளை உச்ச தொடங்குவார்கள். இவ்வாறு மாறிமாறி இவ் விளையாட்டு ஆற்றுகை சலிப்பு தன்மை இன்றி இவ் விளையாட்டு நிகழ்த்தப்படும்.

இவ் விளையாட்டில் பிரதான சிறப்பு பண்புகள் சில சொல்லலாம். வெருகல் பிரதேசத்தில் வீரம் தழுவிய விளையாட்டுக்களில் இதுவும் ஒன்றாகும். இரண்டு குழுக்களும் ஒற்றுமையாகவும் மகிழ்வாகவும் பண்டிகை காலங்களிலும் பாடசாலை விடுமுறைக் காலங்களிலும் கிட்டியும் புள்ளும் விளையாடுவார்கள். இவ் விளையாட்டில் விளையாடும் குழுவினர் சூதானமாக விளையாட வேண்டும். சில நேரங்களில் புள்ளு உடம்பில் சில பகுதிகளில் பட்டு காயம் வரக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். வெருகல் பிரதேசத்தின் விளையாடி மருவிவரும் விளையாட்டுக்களில் கிட்டியும் புள்ளும் ஒன்றாகும்.

வெருகல் பிரதேசத்தில் பரவலாக விளையாடப்பட்ட கிட்டியும் புள்ளும் பற்றி இங்கு விலாவாரியாகக் கூறப்பட்ட போதும், இவ்வூர்களுக்கே தனித்துவம் நிறைந்த பல விளையாட்டுக்கள் இங்கு இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.


**வெருகலூர் கு. குஜந்தன்,**
வெருகல்.

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் கல்வெட்டு

"ஸ்ரீ சுப்ரமண்ய நம: தெற்கு மதில் கயில வன்னியனாருபயம். திமர்சா மகன் பழையிற் சிம்பாப்பிள்ளை. மேற்குப்புற ம(தி)ல் மட்டக்களப்பூரவர், நிகொம்பு கரையூரவர். வடபுறம் செட்டியழுபயம்."



வெருகலம்பதிக் கோவில் தென்மதிலை கயிலை வன்னியனார் கட்டினார், மேற்கு மதிலை மட்டக்களப்பு மக்களும் நீர்கொழும்புக் கரையூர் மக்களும் சேர்ந்து கட்டினர். வட மதிலை செட்டியார்கள் கட்டினர். நீர்கொழும்பு போர்த்துக்கேய உச்சரிப்பில் நிகொம்பு வரலாற்று விழிப்புணர்வு என்று பதிவாகியிருப்பதால் இச்சாசனம் போர்த்துக்கேயர் ஆட்சிக்குப் பின் பதிவானது. எழுத்தமைதியில் இதன் காலம் கிபி 17ஆம் நூற்றாண்டு என நம்பப்படுகிறது. 'திமர்சாவின் மகன் பழையிற் சிம்பாப்பிள்ளை' என்ன செய்தார் என்பது தெளிவில்லை. அவர் மேற்பார்வையாளராக அல்லது கல்வெட்டைப் பொறித்தவராக இருக்கக்கூடும். கயிலை வன்னியனார் தென்மதிலைக் கட்டியதை, சிம்பாப்பிள்ளை பொறிக்கப்போக, அதற்குச் சில நாள் பின்பு ஏனையோர் மேற்கு, வடக்கு மதில்களைக் கட்டி தங்கள் பெயரைப் பொறித்திருக்கலாம். திமர்சா என்பது தெலுங்குப்பெயர், அப்பெயரில் பழை எனும் ஊரில் குடியேறிய ஒரு வணிகனின் மகனே இவர் என்பார் பேராசிரியர் சி.பத்மநாதன். சிம்பாப்பிள்ளை என்பதை எழுத்துப்பிழையுடன் எழுதப்பட்ட 'சிதம்பரப்பிள்ளை' என்று அவர் வாசிக்கிறார். கிழக்கில் செம்பக்குட்டி, செம்பாப்போடி, செம்பநாச்சி போல செம்பாப்பிள்ளை என்பது பழைய வழக்குப்பெயர். அது சிம்பாப்பிள்ளை என பேச்சுவழக்கில் எழுதப்பட்டிருக்கவும் இயலும்.

இக்கல்வெட்டு தற்போது வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி கோவிலின் உள் திருச்சுற்றின் தெற்குப் பக்கத்தில் மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது. வரலாற்று விழிப்புணர்வு குறைந்து வரும் சமகாலத்தில், இந்தக் கல்வெட்டும் இந்தக் கோவிலிலுள்ள பெறுமதி வாய்ந்த ஏனைய தொல்பொருட்களும் உரிய குறிப்புக்களுடன் பொதுமக்களுக்கு காட்சிக்கு வைக்கப்படவேண்டியது அவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறவஞ்சி சிலம்பாட்டமும் கொட்டியாரப்பற்றும்

ஆதிமனிதர்கள் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்த காலத்தில் முதலில் எடுத்தது கம்பு எனப்படும் ஆயுதமே ஆகும். இதுவே பின்னர் சிலம்புக் கலையாக வளர்ச்சி பெற்றது. ஆதி காலத்தில் மனிதர்கள் சண்டை செய்ய ஈட்டி, கத்தி, வேல், வாள், கம்பு போன்ற பலவிதமான ஆயுதங்களைப் பயன்படுத்தினர். அவற்றுள் மிகவும் பழமைவாய்ந்த ஆயுதம் கம்பு எனப்படும் "சிலம்பம்" ஆகும்.

சிலம்பாட்டம் என்பது சிறந்த உடற்பயிற்சிக் கலையாகும். கம்பு எடுத்து சுழற்றும் போது உடம்பில் உள்ள ஒவ்வொரு நாடி, நரம்பும், தசைகளும் இயக்கப்படுகின்றன. கம்பைக் கைகளால் பிடித்து சுழற்றிச் சுற்றும்போது தம் உடலைச் சுற்றி ஒரு வேலி போன்ற அமைப்பை உருவாக்கிக்கொள்ளமுடியும். ஒரே ஒரு கலத்தைக் கொண்டு அமைக்கும் இது போன்ற வேலிக்குள் வேறு ஆயுதங்களைக் கொண்டு யார் தாக்க முற்பட்டாலும் அதனை சுழற்றும் கம்பால் தடுத்திட முடியும். உடலின் வலிமை, ஆற்றல், விரைவுத் திறன், உடல் நெகிழ் தன்மை ஆகியவற்றை அடைய சிலம்பப் பயிற்சி உதவுகின்றது.

கொட்டியாரப்பற்றினுடைய சமூக அமைப்பினை எடுத்து நோக்கும் போது சாதி முறையும், தொழில்முறை கொண்டு சிறந்து விளங்குகின்றது. இங்கு காணப்படும் பாரம்பரியக் கலை வடிவங்களாக கூத்துக்கலை, கும்மி, கோலாட்டம், காவடி, கும்பத்துச்சடங்கு, கொம்புமுறி, சிலம்பாட்டம் என்பன குறிப்பிடத்தக்க விடயங்களாக அமைந்துள்ளன. சிலம்பாட்ட ஆற்றுகையில் ஓர் அழகியல் தன்மை காணப்படுவது இதன் தனிச்சிறப்பாகும்.

இச்சிலம்பாட்டம் கொட்டியாரப்பற்றின் சில பிரதேசங்களில் காணப்படுகின்றது. அவற்றில் கட்டைபறிச்சான், சம்பூர், வினாயகபுரம், பூமரத்தடிச்சேனை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கட்டப்பறிச்சான் கிராமத்திற்கு பர்மாதேசத்திலிருந்து வந்த திரு.க.நாகையா அவர்கள் தனது மச்சானிடம் கம்புகலையை முறைப்படி படித்துப் பயின்று வந்திருக்கின்றார். தான் கற்றுவந்த கலையை மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்க முற்பட்ட போது ந.சுந்தரலிங்கம், செ.சுகுணசேகரம் இருவரும் இணைந்து முறைப்படி பழகி கற்றுவந்தனர். சிறிது காலத்துக்கு பின்னர் இவர்களுடன் இன்னும் சிலர் இணைந்து பழகி வந்ததாக கூறப்படுகின்றது.

திரு. க.நாகையா அவர்கள் காலமான பின்னர், சு.சுகுணசேகரம் தனது சுறுசுறுப்பும் ஆக்கமும் கொண்டு இக்கலையை முழுமையாக கற்றுக் கொண்டமையினால் இக்கலையை கையில் எடுத்துக்கொண்டார். அதன்பின் சு.சுகுணசேகரம் அவர்களின் தலைமையில் பலதரப்பட்ட சிலம்பாட்டக் கலைஞர்கள் உருவாக்கிக் கொண்டனர். இதில் முக்கியமாக குறிப்பிடத்தக்க கலைஞர்களாக உமாசங்கர், ராஜஆனந்த் இருவரையும் குறிப்பிடலாம். இவர்கள் இருவரும் தங்களது திறன்களை வளர்த்து இன்று சிறந்த கலைஞர்களாக திகழ்கின்றனர். தற்போது சுகுணசேகரத்துக்கு பின்னர் அவரது மகன் உமாசங்கர், ராஜஆனந்த் சிலம்பு கற்றுக் கொடுக்கும் வஸ்தாவியாக விளங்குகின்றனர். இவ்வாறு சிலம்பம் கட்டபறிச்சான், சம்பூர் எனும் கிராமங்களுக்கு வந்ததாக வரலாறு கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருகல் பிரதேசத்துக்குரிய விநாயகபுரம், பூமரத்தடிச்சேனை கிராமங்களிலும் சிலம்பாட்டம் காணப்பட்டமை அறியமுடிகின்றது. பூமரத்தடிச்சேனை கிராமத்தில் வாழ்ந்துவந்த வஸ்தாவி வே. அரசரெட்ணம், வஸ்தாவி க.செல்வராசா என்பவரால் ஆற்றுகை செய்யப்பட்டு வந்ததாக கூறப்படுகின்றது. விநாயகபுரம் கிராமத்தில் தற்போது உயிர்த்துடிப்புடன் வாழவைத்துக் கொண்டிருக்கும் வஸ்தாவி வைரமுத்து செல்வநாயகம் இக்கலையை தனது தந்தையிடம் இருந்தும், கிண்ணியாப் பிரதேசத்திலிருந்து வந்த வஸ்தாவியிடமிருந்தும்கற்றுக்கொண்டதாக அறியமுடிகிறது. இவர் புன்னையடி மற்றும் ஈச்சிலம்பற்று கலைஞர்களுக்கு கற்றுக்கொடுத்து தனது பிள்ளைகளைக் கொண்டு வெருகல் பிரதேச சபை நடாத்திய விழாவொன்றில் சிலம்ப ஆற்றுகை செய்திருக்கின்றார். பின்னைய காலங்களில் தனது பரம்பரைக்கு பயிற்றுவித்து காட்டும் செயல்முறையினை முன்னெடுத்து வருகின்றார். மெய்ப்பாடம், உடற்கட்டு, மூச்சுப்பயிற்சி, குத்துவரிசை, தட்டுவரிசை, அடிவரிசை, பிடிவரிசை, சிலம்பாட்டம், வர்மம் முதலானவை சிலம்பக்கலையின் முக்கிய கூறுகளாகும். ஒருவர் சிலம்பக்கலையைக் கற்றுக்கொள்ள வேண்டுமாயின், அடிப்படையில் தொடங்கி படிப்படியாகக் இவற்றைக் கற்பதன் மூலம் சிலம்பக்கலையின் பல்வேறு உட்கூறுகளைத் தம்முள் அடையலாம்.

சிலம்பத்தில் பல வகைகள் உண்டு. அவையாவன துடுக்காண்டம், குறவஞ்சி, மறக்காணம், அலங்காரச் சிலம்பம், போர்ச்சிலம்பம், பனையேறிமல்லு, நாகதாளி, நாகசீறல், கள்ளன்கம்பு, நாகம் பதினாறு. இவற்றுள் கொட்டியாரப்பற்றில் குறவஞ்சி சிலம்பாட்டமே ஆடப்பட்டு வருகின்றது.

குறவஞ்சிக்கென்று தனி ஜதிகப் பின்னணி உண்டு. அந்தவகையில் முருகக்கடவுளை வழிபட்டு காடுகளை அண்டி மலைப் பிரதேசங்களில் வாழ்ந்துவந்த வேட்டையாடும் சமூகம் தங்களது வேட்டைக்காக மலைப்பிரதேசங்களில் சென்றிருந்தபோது முருகக்கடவுள் மலையடிவாரத்தில் காவல் காத்துக் கொண்டு இருந்தமையும் தனது கையில் வேல் தடியும் வைத்துக் கொண்டிருந்தமையும் சொல்லப்படுகின்றது. அப்போது முருகக்கடவுள் எனத் தெரிந்து கொள்ளாமல் முருகனுடன் வேடுவர்கள் சண்டையிட்டபோது வேல் தடியினை பயன்படுத்தி வேடுவர்களை முருகன் சண்டையில் வெற்றிகொண்டார். முருகக்கடவுள் பயன்படுத்திய அடிமுறைகள் புதியதாக காணப்பட்டதனை வேடுவர்கள் அவதானித்துள்ளனர். பின் முருகக்கடவுள் தான் யாரென்பதை வேடர்களிடம் வெளிப்படுத்த, வேடுவர்கள் முருகனிடம் இந்தக் கலையை கற்றுத்தரும்படி கேட்டதற்கிணங்க முருகக்கடவுள் கற்றுக்கொடுத்ததாகவும் சொல்லப்படுகின்றது.

மலைப்பிரதேசமான குறிஞ்சி நிலப்பரப்பில் இருந்ததனால் குறவஞ்சி என்றும் முருகப்பெருமானுக்கு சிலம்பன் என்ற இன்னொரு பெயரும் உண்டு என்பதனால் சிலம்பாட்டத்தின் குறவஞ்சி என்று பெயர் சூட்டிக்கொண்டு வேடுவர்களின் வகைப்பாட்டு அடிமுறையாக இதனை அடையாளப்படுத்திக் கொண்டார்கள். குறவஞ்சி சிலம்பத்தில் நான்கு வகையான பிரிவுகள் உள்ளமையும் குறிப்பிடப்படுகின்றது. அதில் அலங்காரம் சிலம்பம், எதிர்முனை சிலம்பம், வர்மம், சிலம்பம், கள்ளர், விளையாட்டு சிலம்பம் என்று கூறப்படுகின்றது. இந்த குறவஞ்சி சிலம்பாட்டத்தினையே இப்பிரதேச சிலம்பாட்டக் கலைஞர்கள் கற்றுக்கொண்டு ஆற்றுகை செய்துவருகின்றனர்.


**பூமரத்தடிச்சேனை புதல்வன்.**

**வி.கிருபானந்தம்**

பட்டதாரி பயிலுநர்

பிரதேச செயலகம்,

வெருகல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனைகளின் ஆனைத்தீவு

"சமதரை நிலத்தில் கொந்தளித்துப் பாயும் (வெருகல்) ஆறு, காட்டாற்று வெள்ளம் வருகையில் சடுதியான நீர்மட்ட உயர்வுகளையும் காட்டுவது வழமை. சில ஆண்டுகளுக்கு முன், ஒரு இராணுவ அதிகாரியும் அவரது மனைவியும், இந்த வழியாக திருக்கோணமலைக்கு போன போது, வெருகலாற்று வெள்ளத்தில் மாட்டிக்கொண்டார்கள். அடுத்துள்ள கிராமத்திலிருந்த மக்களுடன் அவர்கள் அருகிலிருந்த குன்று ஒன்றின் உச்சியில் தங்கினார்கள். எதிர்பார்ப்புக்கு மாறாக, மழை அதிகரித்து, வெள்ளமும் பெருகத் தொடங்கி விட்டது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை எல்லாமே நீருக்குள் தான். இரண்டு வாரங்களுக்குப் பிறகே அவர்கள் குன்றிலிருந்து இறங்கி தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்களாம்.

வெருகலின் ஆற்றுவாய் கடலோடு கலப்பதற்கு முன் "ஆனைத்தீவு" எனும் ஆற்றிடைக்குறை ஒன்றை அமைக்கிறது. அதன் வடகரையில் இருந்த வாடிவீடொன்றில் நாங்கள் தங்கினோம். அதற்கருகே இருந்த விசாலமான ஆழம் குறைந்த குளம், யானைகள் அடிக்கடி வருகின்ற இடம் என்பதால் தான் இவ்விடம் ஆனைத்தீவு என்ற பெயரைப் பெற்றது. அங்குமிங்கும் தெரிந்த யானையின் கால்கள் புதைந்த பெரிய சேற்றுக்குழிகள், மிக அண்மையில் தான் அவை அங்கு வந்து சென்றிருப்பதை உணர்த்தின. இங்கிருந்த ஒரு பெரியவர், சுமார் இருநூறு யானைகளை இங்கு தான் எண்ணியதாகச் சொன்னார். வராத இன்னும் மீதி யானைகள் காட்டில் மறைந்திருந்தனவாம். என்ன துரதிர்ஷ்டமோ, எங்களால் ஒரு யானையைக் கூட இங்கு காணமுடியவில்லை. ஆனால் நாங்கள் புறப்பட்ட அன்று மாலையில் அறுபது யானைகள் கூட்டமாக அந்த வாடிவீட்டுக்கு அருகில் வந்து நின்றதை சில பயணிகள் கண்டிருக்கிறார்கள்."

**– சேர். ஜேம்ஸ் எமர்சன் டெனன்ட்**

**(Tennent, J.E. (1859). Ceylon: An Account of the Island, Volume II, London: Longman, Green, Longman, and Roberts, p.476**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்ததிக்குச் சொல்லிடுவோம்..!

நற்றமிழ் போற்றி நம்மவர் - வாழும்.
நானிலம் தன்னில் நம்மவர் வாழ்ந்திட
உற்றவர் யாவரும் உள்ளமே - வெள்ளை.
உத்தமியாச்சி செண்பகநாச்சி.
செல்வங்கள் யாவும் தந்திடுவாள் - நித்தம்.
சொல்வளம் கொண்டு காத்திடுவாள்.
ஈச்சிலம் பதியில் உறைபவள் - எங்கள்.
ஈர்சிலம்பொலி,தேவியை போற்றிடுவோம்!
ஆண்டாண்டு காலமாய் ஆண்டுகள் - கடந்தும்.
ஆழமாய் அகலமாய் தமிழ் - பண்பாடு.
மாற்றங்கள் வந்தாலும் மாறாமல் - நிற்கிறது.
மாற்றுச் சமூதாயம் இல்லாத தேசமடா - வெருகல்.

செட்டி தான் கட்டினான் சிங்காரவேலவனை
வேலவனின் அருள் வேண்டி வேண்டுதல் - செய்திட
சாதிமத பேதமின்றி சன்னிதானம் - வருபவர்களை
அன்பாக நேசிக்கும் மண் - வெருகலடா!

ஐவகை நிலத்திற்கும் அர்த்தம் சொல்லும் - மண்.
வீரமறவர்கள் வாழ்ந்திட்ட மண் - இது
முதிசங்கள் நாவழி சொல்லிட்ட - சொற்களும்
நவீனங்கள் புகுந்து நவநயம் - செய்தாலும்
நா வழுவா பண்பான சொற்களை - பேசிடும்
வெருகல் மண்ணடா!

ஆழி கடந்து ஆர்ப்பரிக்கும் தேசத்தில் - வாழ்ந்தாலும்.
எம் மண்ணின் வாசனையை நாமே - நுகர்ந்தாலும்
நாம் அழிந்தாலும் எம் மண்ணாம்
வெருகலின் சிறப்பை
நம் சந்ததிக்கு சொல்லிடுவோம்.

**தம்பிராசா சதீஸ்குமார்**
(மக்கள் வங்கி)
6ம் வட்டாரம்.
ஈச்சிலம்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் பிரதேசத்தின் கூத்துப்பாரம்பரியமும் சிறுவர் கூத்தின் முக்கியத்துவமும்.

கிழக்கு இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில்மூதூர்தொகுதியில் அமைந்துள்ள வெருகல் பிரதேச நிருவாகப் பிரிவின் கீழ் இருபத்தைந்து கிராமங்கள் காணப்படுகின்றன. இக்கிராமங்களில் காணப்படும் மக்களுடைய வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்த வகையில் கலை கலைசார பண்பாட்டு முறையும் காணப்படுகின்றது.

வெருகல் பிரதேச மக்களின் பண்பாட்டின் வெளிப்பாட்டுத் தன்மையை இப்பிரதேசத்தில் காணலாம். இங்கு பண்டிகைகளோடு சிறப்பு பெறும் சாக்கடி, கிளித்தட்டு, ஊஞ்சல், விழாக்கள், கும்மி, கரகம், கோலாட்டம், வசந்தன், வடமோடி, தென்மோடி கூத்துக்கள், சடங்கு நிகழ்வுகள் என நிகழும் தமிழர் பாரம்பரிய கலைமரபுகள் சிறப்புற்று காணப்படுகின்றது.

இப்பிரதேசம் தனித்தமிழர் கலை கலாச்சார பண்பாடுகளைப் பேணுகின்ற சமூகங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இவ்வாறு காணப்படும் பிரதேசத்திலே பத்து கிராமசேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கிராமங்களும் தனித்துவமான தன்மை கொண்டு காணப்படுவதோடு பாரம்பரிய கூத்துச்சார்ந்த செயற்பாடுகளை ஓரளவு கொண்டு செல்லும் கிராமங்களும் காணப்படுகின்றது.

ஈழத்தமிழர் பண்பாட்டிலே பாரம்பரிய அரங்குகளில் ஒன்றான கூத்து மகிழ்வுடனும் அழகியலுடனும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. பாரம்பரியக் கூத்துக்கள் அந்த சமூகத்தின் பண்பாட்டு தளத்தில் முன்னெடுக்கப்படுவதாக உள்ள பின்னணியில் தமிழர்கள் மத்தியில் பயில் நிலையில் உள்ள பாரம்பரிய கூத்துக்கள் மகிழ்வூட்டலுக்கும், அறிவூட்டலுக்கும் மக்கள் கூடிக் கொண்டாடி மகிழ்வதற்கான களமாக அமைவதுடன் தெய்வீகத் தன்மை வாய்ந்த ஆற்றுகையாகவும் காணப்படுகின்றது.

குறிப்பாக பாரம்பரிய கலையுடன் இணைந்த செயற்பாடானது வெருகலில் கல்லடி, வாழைத்தோட்டம், புன்னையடி, இலங்கைத்துறைமுகத்துவாரம், ஈச்சிலம்பற்று ஆகிய கிராமங்களில் இன்றும் ஓரளவு நிகழ்த்தப்பட்டு வருகின்றது. ஆரம்ப காலங்களில் இப்பிரதேசத்தில் அனைத்துக் கிராமங்களிலும் மக்கள் விரும்பி தங்களுடைய பொழுதுபோக்கு கலையாகவும் பாரம்பரியக் கூத்துக்கள், வசந்தன்கூத்து, கோலாட்டம், கும்மி, கரகம் போன்ற கலைமரபுகளை நிகழ்த்தியுள்ளனர். இவ்வாறான பாரம்பரிய கலைசார் நிகழ்த்துகை செயற்பாடுகளுக்கு அன்றைய காலச்சூழல் பொருத்தப்பாடுடையதாக அமைந்தது.

இதனால் இங்கு காணப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமக்கு அருகிலுள்ள மாவட்டமான மட்டக்களப்பின் கூத்துக்குப் பேர்போன கண்ணங்குடா, மாவடிஓடை, வாகரை, கதிரவெளி போன்ற கிராமங்களில் வாழ்ந்த அண்ணாவிமார் வெருகல் பிரதேசத்திலுள்ள பல கிராமங்களுக்கு அழைக்கப்பட்டு இங்கு கூத்துக்கள் பழக்கப்பட்டது.

இதன்போது இப்பிரதேசத்தில் காணப்பட்ட இளைஞர்கள், பெரியவர்கள், கூத்தில் ஆடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக் கலைஞர்கள் ஆகியோர் அண்ணாவிமார்களாக உருவாகி அவர்களே இங்கு காணப்பட்டவர்களை வைத்து பல்வேறு கூத்துக்களை பழக்கினார்கள். இவர்களுள் செம்பர் கந்தையா அண்ணாவியார், முத்தன் செல்வராஜா, படையாண்டி மாரியன், கனகசூரியம் போன்ற இன்னோரன்ன அண்ணாவிமார்களே ஆரம்பத்தில் கூத்தை பழக்கி பயிற்றுவித்த அண்ணாவிமார்களாக காணப்பட்டனர். இவ்வாறான அண்ணாவிமார்களுடன் அன்றைய காலப்பகுதியில் பக்கப்பாட்டுக்காரர்களாகவும், மத்தளம் இசைப்பவர்களாகவும், பெண்கூத்து மற்றும் ஏனைய கூத்துக்களில் ஆடியவர்களாக இவர்களுடைய பேரப்பிள்ளைகள், மகன்மார்களான மாரியன் வெற்றிவேல் (உரு உரு 12.1), கந்தையா தெய்வேந்திரம் (உரு 12.2), கந்தசாமி தயாபரன் ஆகியோர் இன்றைய காலப்போக்கில் கூத்தினை ஓரளவு கொண்டு செல்பவர்களாக காணப்படுகின்றனர்.



**உரு 12.1 மாரியன் வெற்றிவேல்**
**அண்ணாவியார்**
**இலங்கைத்துறை முகத்துவாரம்**

அன்றைய காலப்பகுதியான 1940, 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே இவ்வாறான அண்ணாவிமார் மூலம் கூத்துக்கு பேர்போன பிரதேசமாகவும் இப்பிரதேசம் ஒளிவீசியது. இங்கு வடமோடி, தென்மோடி ஆகிய கூத்துக்கள் ஆடப்பட்டன. அதிலும் வடமோடி கூத்தே பிரதானமாக ஆடப்பட்டதாக கூறப்படுகின்றது. இதில் மதுரவீரன் நாடகம், அல்லி நாடகம், துரோணயுத்தம், வீரகுமாரன் நாடகம், கர்ணன்போர், சதாசந்திரன்போர், தர்மபுத்திரன் போன்ற கூத்துக்கள் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான கூத்து ஆற்றுகையும் அதன் சமூகம் சார்ந்த செயற்பாடும் மக்கள் மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கு வழிவகுத்தது.



**உரு 12.2 கந்தையா தெய்வேந்திரம்**
**அண்ணாவியார்**
**வாழைத்தோட்டம்**

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக காணப்படுவதால் இவர்கள் ஊடாக எமது பாரம்பரிய கலை வளர்க்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் "வெருகல் கல்லடி" கிராமத்தில் பாரம்பரிய கூத்தை முன்னெடுப்பதற்கான செயற்பாடு, "வனராணி வடமோடி சிறுவர் கூத்தை மையப்படுத்திய ஓர் பங்குகொள் ஆய்வு" எனும் தலைப்பில் 2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. வெருகல் கல்லடி கிராமத்தில் வசிக்கின்ற சிறுவர்களைக் கொண்டு மத்தள அண்ணாவியார் சி.ஞானசேகரம் மற்றும் ஏடு பார்ப்பவர் த. முத்துலிங்கம் அவர்களின் உதவியுடன் இக்கூத்து ஆற்றுகை பயிற்றுவிக்கப்பட்டது.

இந்த ஆற்றுகையானது தொடர் செயற்பாடுகள் மூலம் முன்னெடுக்கப்பட்டது. சட்டம் கொடுத்தல், சதங்கையணி, அரங்கேற்றம், வீட்டிற்கு வீடு ஆடுதல் போன்ற கூத்தாற்றுகை செயற்பாடுகளை குறிப்பிடலாம். கூத்தரங்கானது பல தரப்பட்ட மக்களையும் பாகுபாடின்றி ஒன்றிணைக்கும் கலை வடிவமாகும். இந்த உலகில் காணப்படும் எல்லாச் சிறுவர்களும் ஒரே விதமான சிந்தனை கொண்டவர்கள் அல்ல. ஒவ்வொரு சிறுவர்களும் பல்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களையும், சிந்தனைகளையும் கொண்டவர்கள். எனவேதான் இவர்களுடன் இணைந்து வேலை செய்யும் போது, கூத்தர்களான சிறுவர்களும், பார்வையாளர்களாக உள்ள சிறுவர்களும் பல நன்மைகளைப் பெறுகின்றனர்.

சிறுவர்கள் "செய்வதனூடாகக் கற்றல்" என்ற விடயத்தினைக் கற்றுக் கொள்கின்றனர். கூத்து ஆற்றுகை செயற்பாடானது ஒரு தொடர் செயற்பாட்டினூடாக அளிக்கை செய்யப்படுகின்றது. குறிப்பாக கூத்து பழகுவதற்கு ஆட்கள் சேர்த்தல், சட்டம் கொடுத்தல், அடுக்குப்பார்த்தல், அரங்கேற்றம், வீட்டுக்கு வீடு ஆடுதல் வரை ஆற்றுகை செய்யப்படுகின்றது. சிறுவர்களிடத்தே குரு மரியாதையினையும், கீழ்ப்படிகின்ற முறையினையும் கற்றுக் கொடுக்கின்றது. கூத்தரங்கிலே அண்ணாவிமாருக்கான மரியாதையானது கூத்துப் பழகுகின்ற வேளைகளில் கூத்தர்களினால் வழங்கப்படும், கூத்துப் பயிற்சி முடிவடைந்ததும் அண்ணாவிமாரது பாதங்களைத் தொட்டு வணங்கி ஆசியைப் பெற்றுக் கொள்வார்.

இதேபோன்று கூத்துப் பிரதி மற்றும் தாளம், மத்தளம் ஆகியவற்றினையும் வணங்குவது மரபு அத்துடன் கூத்தாடுகின்ற நிலத்தினையும் மதித்து பூமாதேவியை வணங்குவர். இவ்வாறான விடயங்களை சிறுவர்கள் அவதானித்துக்கொண்டு, இவற்றினை செய்வதன் மூலம் நற்பண்புகளை இயல்பாகவே பெற்றுக்கொள்கின்றனர்.

சிறந்த ஒழுக்க பண்பு இயல்பாகவே வளர்ச்சியடையும், கூட்டாக செயற்படும் பண்பு, ஒற்றுமை விருத்தியடையும், கூத்து பழகுதல் தொடக்கம் வீட்டுக்கு வீடு ஆடுகின்ற மரபு வரை அனைவரும் ஒன்றினைத்தே அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். களரியிலே ஒரு பாத்திரம் கூத்தாடி கொண்டிருக்கும் வேளை அனைத்து சிறுவர்களும் சேர்ந்திருந்து தாளக்கட்டுக்களை சொல்லுதல், பிற்பாட்டுக்கள் பாடுதல், தாளம் அடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவார் அத்துடன் தினமும் கூத்தாட முன்னர் களரிக்கு நீர் தெளிக்கும் வேளை அனைவரும் இணைந்து வேலையில் ஈடுபடுவதனைக் காணலாம்.

சிறுவர்களிடையே இலைமறை காயாக மறைந்து கிடக்கும் திறமைகளையும் சபைக்கூச்சங்களையும், தயக்கம், பயம், வெட்கம், பதட்டம் போன்ற உணர்வுகளை களைந்தெறிந்து அவர்களை சுதந்திரமாக செயற்பட வைக்கின்ற தன்மை கூத்தரங்கிற்கு உண்டு. கூத்தர்களாய் உள்ள சிறுவர்களை இயல்பாக செயற்பட வைத்து அவர்களிடம் உள்ள பலமான விடயங்களை பலமடைய செய்யும் ஆற்றல் சிறுவர் கூத்தரங்கிற்கு உள்ளது.

உளச்சோர்வினை நீக்கி கற்றலில் ஈடுபட வாய்ப்பளிக்கின்றது. கற்பனை வளம், தெளிவான சிந்தனை, படைப்பாற்றல் திறமை என்பன உருவாகும். கலையில் ஆர்வம் ஏற்படும், இரசனை வளர்ச்சியடையும், கல்வியிலும், குணத்திலும் ஆளுமை கொண்ட மனிதர்களாக உருவாகுவதற்கு வழி செய்யும்.

முகாமைத்துவ பண்பு வளர்ச்சியடைகின்றது. கூத்தரங்கிலேயே முகாமைத்துவக் கற்கை இயல்பாகவே பயிற்றுவிக்கப்படுகின்றது. அதாவது கூத்து முகாமையாளர், களரி முகாமையாளர், முதலீட்டு முகாமையாளர் ஆகியோர் செயற்படுகின்றனர். இதற்கு ஒவ்வொருவரும் பொறுப்பாக இருந்து செயற்படுவார். இதனூடாக கிடைக்கின்ற அனுபவத்தினூடாக பாடசாலையிலே அல்லது வேறு இடங்களிலே சுயமாக செயற்பட உதவியளிக்கின்றது.

தலைமை தாங்கும் பண்பு வளரும், நம்பிக்கை வளர்ச்சியடையும், தன்னைத்தானே உணர்ந்து கொள்ள முடியும், அதாவது தங்களையும், தங்கள் திறமைகளையும் அறிந்து கொள்ள முடியும் தனது இயலும், இயலாமையினை அதற்கேற்ப அறிந்து செயற்பட வைக்கும். உளப்பிரச்சினையில் இருக்கின்ற சிறுவர்களுக்கு அதிலிருந்து விடுபட வாய்ப்பளிக்கும், உண்மையான மகிழ்ச்சி, நகைச்சுவை என்பன இயல்பாகவே தோன்றும் தனது பழமை, புதுமை, பாரம்பரியம், பண்பாட்டு அடையாளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றினை அழியாது பார்த்தல் வேண்டும் எனும் உணர்வினைத் தூண்டவும் உதவுகின்றது.

வெவ்வேறு வயதினை உடைய சிறுவர்கள் கூத்தில் பங்குபற்றுவதனால் ஒவ்வொருவரையும் புரிந்து கொண்டு சிறுவர்கள் செயற்பட முடிகின்றது. இங்கே புரிந்துணர்வு ஏற்படுகின்றது. அத்துடன் விட்டுக்கொடுப்பு, பிரச்சினையை தாங்களாகவே சமாளிக்கும் தன்மை, பொறுமை, சகிப்புத்தன்மை, அவதானம் போன்ற ஒழுக்கப்பண்புகள் சிறுவர் கூத்தரங்கு மூலமாக கல்வியிலும், குணத்திலும் ஆளுமை கொண்டவர்களாக இருப்பதற்கு வழி செய்கின்றது.

சிறுவர் கூத்தரங்கு எமது பிரதேசத்திற்கு முக்கியமான ஒன்று. பாரம்பரியக் கூத்தினைப் பொறுத்தவரை கற்போர், கற்பிப்போர் என்கின்ற நிலையன்றி சமூகத்தில் அனைவரும் ஒன்றுகூடி இயற்கையான சூழலில் சுதந்திரமான கல்வி மூலம் அறியப் பெற்றுக்கொண்டனர். இவை இன்றும் சமூகத்தில் நிலைத்து நிற்கின்ற ஒரு சமூகத்தின்நடைமுறைகள் அடுத்த தலைமுறைக்கு கையளிக்கப்பட்டு பேணிப்பாதுகாப்பதற்கு வாய்ப்பளிக்கின்றது. சிறுவர் கூத்து மூலம் பாரம்பரிய கூத்தரங்கு அறிவுப் புலத்தினை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லவேண்டிய கடப்பாட்டை அனைவரும் சிந்தித்துப் பார்ப்போமாக.

**வி. விக்னேஸ்வரன்,**
*கல்லடி.*

## தரையில் பிடித்த மீன்

இலங்கையின் சிறுகுளங்கள் கொண்ட சமதரை காணப்படும் இடங்களில் கோடைக் காலங்களில் சேற்றை அகழ்ந்து மீன் பிடிக்கும் வழக்கம் இங்குள்ள மக்களுக்கு உண்டு. கிழக்கு மாகாண தலைமை அரசாங்க அலுவலரான திரு.வைற்றிங், இப்படி மீன் பிடிப்பதை தற்செயலாக இரண்டு இடங்களில் கண்டிருக்கிறார். ஒன்று கொட்டியாறிலிருந்து சில மைல் தூரத்தில் இருக்கும் மல்லிகைத்தீவு எனும் இடத்தில். மற்றையது வெருகல் ஆற்றின் கரையில் இலந்தைத்துறைக்கும் ஆனைத்தீவுக்கும் இடையே இருந்த குளத்தில். அங்கிருந்த களி உறுதியாக ஆனால் ஈரலிப்பானதாக இருந்தது. ஆண்கள் சவள் கொண்டு வேகமாக களியைக் குத்திப் புரட்டியபோது களி துண்டு துண்டாக உடைய, ஒன்பது தொடக்கம் பன்னிரண்டு அங்குலம் நீளமான முற்றாக வளர்ந்த மீன்கள் உள்ளிருந்து கரையில் பாய்ந்து துடித்தன. நான் ஆசைப்பட்டதற்காக இப்படி ஒரு மீனை எனக்காகப் பிடித்துத் தந்தார், மாத்துறை நகரத்தின் முதலியார் திரு.ஏ.பி.விக்கிரமரத்ன.

**சேர். ஜேம்ஸ் எமர்சன் டெனன்ட் (1859),**
**பிரித்தானிய இலங்கையின்**
**பதில்கடமை ஆளுநர்**
***Tennent.J.E. (1859). Ceylon: An Account of the Island, London: Longmann Green,p.220.***

**வடிவேல் சாமி மலைக் கல்வெட்டு – 01**



1. உபஸிக ஸவினிய
2. பருமக திஸஹ ஐய தெவிய லெணெ ஸகஸ
3. திஸய

சங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட, சவினி, பருமகன் திசையனின் மனைவி தேவி, திசை, ஆகிய பெண்ணடியார்களின் குகை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைத்துறையும் ஏழு குளங்களும்

## - அன்றும் இன்றும்

வெருகல் பிரதேசத்தில் பாரம்பரியத் தமிழ் ஊராம் இலங்கைத்துறை, இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் காணப்பட்ட பழமை வாய்ந்த இறங்கு துறைகளில் ஒன்று. அக்காலத்தில் மன்னர்கள் அவர்களுடைய வழிபாட்டுத் தெய்வங்களுடனும் தமது மக்கள் கூட்டத்தினருடனும் கடல் மார்க்கமாக வந்து இறங்கிய இறங்குதுறை காலப் போக்கில் இலங்கைத் துறை என சிறப்புப்பெயர் கொண்டு விளங்குகின்றது.

இலங்கைத்துறையில் மன்னர்கள் வந்து இறங்கியபோது துர்க்கை வடிவான அம்மன் சிலையும், விநாயகர் சிலையும், பாற்கடலில் பள்ளிகொள்ளும் விஷ்ணு மூர்த்தி சிலையும் எடுத்துக்கொண்டு மக்கள் கூட்டத்தினருடன் வந்திறங்கினார்கள். துர்க்கை அம்மன் சிலையின் மேனி செம்புபோல் ஒளி வீசியதனால் செம்பகநாச்சியம்மன் என பெயர் பெற்றதாம். செம்பகநாச்சி அம்மனை இலங்கைத்துறை முனையிலும், விநாயகரை செண்பகநாச்சி அம்மன் ஆலயத்தின் மேற்கே ஒரு மரநிழலிலும், விஷ்ணு மூர்த்தியை செண்பகநாச்சி அம்மன் ஆலயத்தின் கிழக்கே குஞ்சிதபாத மலையுச்சியிலும் கருங்கல்லால் கோயில் அமைத்து பிரதிட்டை செய்தார்கள். செண்பகநாச்சி அம்மன் ஆலயத்திலிருந்து மேற்குப்புறமாக சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தினுள் ஏழுகுளங்களையும் மன்னர்கள் அமைத்தார்கள்.

இலங்கைத்துறையின் ஏழு குளங்களும் அமைந்த இடங்களில் மன்னர்களுக்கும் ஆலயத்திற்கும் திருப்பணி செய்ய கொண்டு வந்த மக்களை ஆங்காங்கே குடியமர்த்தினார்கள். அம்மக்களுக்கு குடிமனைகளையும் பாத்திர பண்டங்களையும் களிமண்ணினால் உருவாக்கிக் கொடுத்தார்கள். இதற்குச் சான்றாக அங்கும் இங்கும் கண்டெடுக்கப்படும் தொன்மையான உடைந்த மட்பாத்திரப் பண்டங்கள் சாட்சியாக காட்சியளிக்கின்றன.

இலங்கைத்துறையின் செண்பகநாச்சி அம்மனின் மேற்கே அமைந்து காணப்படும் தெய்வீக எழில் மிகுந்த குளங்கள்:

1) தீர்த்தக் குளம் / கன்னிமார் குளம்
2) பிள்ளையாரடி செந்தாமரைக் குளம்
3) மீனாச்சிமார் குளம்
4) நாயன்மார் குளம்
5) நாச்சிமார் குளம்
6) அண்ணன்மார் குளம்
7) வதனமார் குளம்

இந்தக் குளங்கள் ஒவ்வொன்றுக்கும் காவல் தெய்வங்களாக முறையே கன்னிமார், பிள்ளையார், மீனாட்சிமார், நாயன்மார், நாச்சிமார், அண்ணன்மார், வதனமார் ஆகியோரை நிலைநிறுத்தி காவல் தெய்வங்களின் பெயர்களை ஏழுகுளங்களுக்கும் வைத்து அழைத்ததாக மரபுவழி கதையினூடாக அறிய முடிகிறது.

ஆனால் இன்றைக்கு இந்த ஏழு குளங்களும் பெயர் மாற்றமுற்று,

1) செண்கபகநாச்சியம்மன் தீர்த்தக்குளம்- - உப்புக்குளம்
2) பிள்ளையாரடி செந்தாமரைக்குளம் - தாமரைக்குளம்
3) மீனாட்சிமார்குளம் - சுண்டிக்குளம்
4) நாயன்மார் குளம் - நாயன்மார்குளம்
5) நாச்சிமார் குளம் - வெல்லம் குளம்
6) அண்ணன்மார் குளம் - வண்ணார் குளம்
7) வதனமார் குளம் - ஆட்காட்டியன் குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவாறு அழைக்கப்படுகின்றன. ஏழு குளங்களில் தீர்த்தக்குளம் உவர்நீராகிவிட, ஏனைய ஆறு குளங்களும் நன்னீருடன், செந்தாமரை வாசம் வீசும் எழில் கொஞ்சும் குளங்களாக திகழ்வதை இன்றும் காணலாம் (உரு 13.1).




**உரு.13.1 இலங்கைத்துறையில் ஏழு குளங்களின் அமைவிடங்களைக் காட்டும் கூகிள் செய்மதி வரைபடம்.**
**1 - வதனமார் குளம், 2 - அண்ணமார் குளம், 3 - கன்னிமார் குளம், 4 - நாச்சிமார் குளம், 5 பிள்ளையாரடிக் குளம், 6 - மீனாச்சிமார் குளம், 7 - நாயன்மார் குளம். இலங்கைத்துறைக் கிராமத்தை திருமலை - மட்டக்களப்பு [A15] நெடுஞ்சாலையோடு ஈச்சிலம்பற்று வப்பியா சந்தியில் இணைக்கும் 8 கி.மீ நீளமான இலங்கைத்துறை வீதி சிவப்பு அம்புக்குறியின் திசை வழியே காட்டப்படுகிறது.**

செண்கபகநாச்சியம்மன் தீர்த்தக் குளத்திற்கு கன்னிமார் காவலாக நிலைநிறுத்தப்பட்டார்கள். இக்குளம் செண்கபகநாச்சியம்மன் தீர்த்தமாடும் குளமாக சிறப்புப் பெற்று விளங்கியது. இக்குளம் கடல்முகத்துடன்இணைந்து காணப்பட்டதனால் உவர் நீரேரியால் அரிப்பு ஏற்பட்டு உப்புக் குளமாக மாறியுள்ளது. கோவில் அமைந்த இடம் கோயில்முனை என காரணப் பெயர் கொண்டு இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது.

செண்கபகநாச்சியம்மனுடன் வந்திறங்கியவர் பிள்ளையார் என்பதற்குச் சாட்சியாக கருங்கல்லினாலான சிலையும், கருங்கல் தூண்களும் துதிக்கை தூக்கி நிற்கும் யானைச்சிற்பங்களும், அருகே செந்தாமரை எழில் கொஞ்சும் நறுமணம் வீசும் குளமும் இன்றும் காட்சியளிக்கின்றன. ஏழு குளங்களுள் அண்ணன்மார் குளம் காலப்போக்கில் பெயர் திரிபுபட்டு "வண்ணான் குளம்" என அழைக்கப்படுகிறது. நாயன்மார் குளம் அன்றும் இன்றும் ஒரே பெயரினால் அழைக்கப்பட்டு வருகின்றது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் இலங்கைத்துறையில் குடிப்பதற்கோ வேறு பாவனைகளுக்கோ கிணறுகளோ, குழாய் நீர் வசதிகளோ இல்லாத நிலையில் இந்த ஏழு குளங்களில் உள்ள நீரையே தங்கள் அனைத்து பாவனைக்கும் பயன்படுத்தி பயன்பெற்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாத்துரை எனும் எழுத்தாளர் எழுதிய "சரிந்த கோட்டை" எனும் நாவலில் இலங்கைத்துறையின் செண்கபகநாச்சியம்மன் ஆலயத்துடன் ஏழு குளங்கள் தோன்றியது தொடர்பான செய்தி எடுத்தாளப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். இத்தகவலை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

மன்னர்களால் கொண்டுவரப்பட்ட மக்கள் ஆங்காங்கே வாழ்ந்தார்கள்




**உரு 13.2 மாதவிக்கல் குன்றிலுள்ள மாதேவியம்மனும் சிவலிங்கமும்**

என்பதற்குச் சான்று பகர்வதாக "மாதவிக்கல்" என்றோர் இடம் இலங்கைத்துறையில் காணப்படுகின்றது (உரு 13.2). மாதவிக்கல் என்பது காரணப்பெயராகும். மாதவியாள் வந்து இறங்கி மஞ்சள் அரைத்து கல்லிலுள்ள நீர்க்கேணியில் நீராடி, வழியருகில் உள்ள காளமாமுனியை தரிசித்தாள் என்பது மரபுவழிக்கதையாகும். இதற்கான ஆதாரமாக மஞ்சள் அரைத்த இடம் மஞ்சள் நிறமாக வழிந்தோடிய தடமும், நீராடிய கேணி கற்பாறையின் நடுவே தோணி வடிவில் காட்சியளிப்பதும் மாதவியாள் தரிசித்த காளமாமுனி தற்போது உதிரமுனியாகக் வீற்றிருப்பதும் ஆதாரங்களாகச் சொல்லப்படுகின்றன.

மாதவிக்கல்லும் அதையடுத்த வயல்சார்ந்த இடமும் "மாதவிபுரம்" என்று இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. மாதவிபுரத்தில் விவசாயம் செய்த மக்கள் தானிய அறுவடை செய்வதற்கு முன் காளமாமுனிக்கு படையல்கள் வைப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

கொல்லன்குளம், உமுகாமம் என்பன மக்கள் விவசாயம், மாடு வளர்ப்பு செய்யும் இடமாக திகழ்ந்தது. கொல்லன்குளத்திலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்திலே தட்டாத்திக்கல் மலை, தண்ணீர்க்குடிமலை என இரண்டு மலைகள் காணப்படுகின்றன. அந்த மலைத்தொடரை ஊடறுத்தே கொட்டியாரப்பற்றின் பிரதான பாதை மூதூர் தொடக்கம் வெருகல் வரை நகர்ந்தது. இந்தப் போக்குவரத்து பாதை வழியாகவே மக்கள் ஆரம்பத்தில் பயணித்தனர்.



**உரு 13.3 தட்டாத்தி பிள்ளை பெற்ற கல் என்றழைக்கப்படும் பாறை**

அக்காலப்பகுதியில் நிறைமாத கர்ப்பிணியான தட்டாத்தி எனும் பெண் பயணம் மேற்கொண்ட போது பிரசவ வலி ஏற்பட்டு மலையடிவாரத்தில் குழந்தையை பெற்றெடுத்தாள் என்பது ஐதிகம். அந்த மலை தட்டாத்திக்கல் என்றும் தட்டாத்தி பிள்ளை பெற்ற கல் என்றும் இன்றும் அழைக்கப்படுகின்றது (உரு 13.3). அவள் பயணத்தின்போது தாகத்தினை தீர்க்கும் இடமாக மலை நடுவே அமைந்த மலைக்கேணி, தண்ணீர்க்குடிமலை என்றும் இன்று சாட்சிகளாகக் காட்சியளிக்கின்றன.

இலங்கைத்துறையின் மறுபகுதியாக கடலும் ஆறும் சங்கமிக்கும் இடமான முகத்துவாரம், மன்னர்கள் வந்திறங்கிய இலங்கைத்துறை முகத்துவாரம். ஆரம்பத்தில் இலங்கைத்துறையின் பாகமாகவே கருதப்பட்ட இலங்கைத்துறை முகத்துவாரம், தற்போதைய புவியியல் - நிர்வாகக் காரணிகளால் இன்று தனி ஊராகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகிறது. முகத்துவாரத்தின் கிழக்கே கடலும் வடக்கு, மேற்கு ஆகிய திசைகளில் நீரேரிகளும் தெற்கே நிலப்பரப்புகளாலும் சூழப்பட்டு எழில் மிகுந்த மருதம், நெய்தல், குறிஞ்சி ஆகிய அமைப்பைக் கொண்ட பட்டினமாகக் காணப்பட்டதே இலங்கைத்துறை முகத்துவாரம்.



**உரு 13.4 இலங்கைத்துறை முகத்துவாரம் குஞ்சிமாப்பா மலை பெரியசுவாமி கோவிலில் 2005கள் வரை அமைந்திருந்த பாலமுருகன் சன்னதி.**

மன்னர்கள் காலத்தில் கொண்டு வரப்பட்ட விஷ்ணு மூர்த்தியை மலையுச்சியில் கருங்கல் தூண்களால் கோவில் அமைத்து மலை நடுவே தீர்த்தக் கேணியும் கடல் அருகே தாமரைக்கேணியும் அமைத்து பிரதிட்டை செய்துள்ளனர். இவ்வாலயமே குஞ்சிதபாத மலை, குஞ்சிமாப்பா மலை, பெரியசுவாமி மலை என பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டு வருகின்றது. இதற்குச் சான்றாக கல்லின் நடுவே தீர்த்தக்கேணி, தாமரைக்கேணி, கருங்கல் தூண்கள் என்பன இங்கு காணப்பட்டன. அக்கோவில் அழிவடைந்த பின்னர் இங்கு பெரியசுவாமிக்கு வழிபாடுகள் இடம்பெற்று வந்தபோது, மலையுச்சியில் பாலமுருகன் கோவில் அமைக்கப்பட்டிருந்தது. (உரு 13.4). தற்காலத்தில் அம்மலையின் உச்சியில் லங்காபட்டின சமுத்திரகிரி விகாரை அமைந்துள்ளது.

திருக்கரைசைப் புராணத்தின் படி, சிங்கபூதரன் எனும் அரசன் அயோத்தியை ஆட்சி செய்த போது ஆட்சியில் தோல்வி கண்டான். மனமுடைந்த மன்னன் "சலகாமி" எனும் குதிரையில் ஏறி வந்திறங்கிய இடம் இலங்கைத்துறை முகத்துவாரம். இதனூடாக கங்குவேலி சென்று மகாவலி கங்கையில் நீராடி தோசம் நீங்கப்பெற்றான். அப்போது திருக்கரைசையம்பதி "திருமங்களாய்" எனும் இடத்தினை மன்னன் எழில்வேந்தன் ஆட்சி செய்தான். அங்கே சென்ற மன்னன் சிங்கபூதரன், எழில்வேந்தனின் மகளான திருமங்கை எனும் பெண்ணை திருமணம் செய்தான். அகத்திய தாபனத்திலுள்ள சிவன் கோவிலை புனருத்தாரணம் செய்து அவ்விடத்தினை ஆட்சி செய்தான்.

கோயிலும் சுனையும் சூழ்ந்த தேவார திருப்புகழ் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கோணேசுவரத்தினை தரிசிக்க வந்த வரராமதேவர், குளக்கோட்ட மன்னனின் தந்தையாவார். குளக்கோட்ட மன்னன் பிறப்பதற்கு முன்னரே திருக்கோணேசுவரரை வரராமதேவ மன்னர் தரிசித்துள்ளார். இதன் வழியாகவே தந்தையான வரராமதேவர் விட்டுச் சென்ற பணியை முடிப்பதற்கு மகன் குளக்கோட்ட மன்னன் திருக்கோணேசுவரர் ஆலயத்தினைக் கட்டுவித்தான். திருக்கோணேசுவரர் தலத்தின் நன்மை கருதி குளங்களையும் (கந்தளாய் குளம்), வயல் நிலங்களையும் உருவாக்கினான்.

அதுமட்டுமன்றி திருக்கோணேசுவரர் ஆலயத்தின் எதிர்கால நன்மை கருதி நான்கு பற்றுக்களை உருவாக்கினான். இப்பற்றுக்களூடாகவே திருக்கோணேசுவரரர் ஆலயத்திற்கு தேவையான அபிசேகப் பண்டங்களையும் மக்கள் வழங்கினார்கள். இந்த நான்கு பற்றுக்களும் முறையே, திருகோணமலைப் பற்று, தம்பலகாமப் பற்று, கட்டுக்குள பற்று, கொட்டியாரப்பற்று என்பனவாம்.

இந்தப் பற்றுக்களில் மூதூர் தொடக்கம் வெருகலம்பதி வரை கொட்டியாரப்பற்றுக்குள் உள்ளடக்கப்படுகின்றது. இதனை கோணேசர் கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது. இச்சான்றானது இலங்கைத்துறையில் மன்னர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தமது குடிகளுடன் குளங்கள், கோயில்கள் அமைத்து வாழ்ந்தனர் என்பதற்கு பின்னணியாக அமைகின்றது. குளக்கோட்டன் மன்னன் தனது காலத்தில் ஆலயங்கள், குளங்கள் போன்றவற்றைக் கட்டுவித்தான். வயல் நிலங்களை உருவாக்கினான். ஆதலால் இலங்கைத்துறையின் செண்பகநாச்சி அம்மன் ஆலயமும் ஏழு குளங்களும் குளக்கோட்டன் மன்னன் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்பது சமூகக் கருத்தாகும்.

செண்பகநாச்சி அம்மன் ஆலயமானது (பதிவிலக்கம் HA/5/TM/47), திருக்கோணேசுவரம் தோன்றிய காலத்திலேயே தோன்றியதாக தம் முன்னோர் சொன்ன கதைகளை அடிக்கோடிட்டு, 1924ஆம் ஆண்டு பிறந்த வைரமுத்து கந்தவனம், கறுவல் கதிர்காமத்தம்பி (சடைச்சாமியார்) ஆகியோர் கூறுகின்றனர். "செண்பகநாச்சியம்மன் ஆலயத்தின் மேற்கே பிரதான பிள்ளையார் கோயிலும், அதனுடன் ஏழு தாமரைக்குளங்களும் அமையப்பெற்றுள்ளது" எனும் குறிப்பும் கிடைக்கின்றது.

**திருமதி. இராசநாயகி நடேந்திரன்,**
ஈச்சிலம்பற்று கிராம அலுவலர்,
இலங்கைத்துறை முகத்துவாரம்.

## வடிவேல்சாமி மலைக் கல்வெட்டு 02

ஈச்சிலம்பற்று வட்டவான் எல்லையில் அமைந்துள்ள பாலக்காடு வடிவேல்சாமி மலையில் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த பிராமிக்கல்வெட்டுக்கள் பல அமைந்துள்ளன. இவற்றில் இலங்கை தொல்லியல் திணைக்களத்தால் படிக்கப்பட்ட கல்வெட்டு கீழே தரப்பட்டுள்ளது.




வெருகல் பிரதேச செயலகத்திலிருந்து மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் தெற்கே ஒரு கிமீ பயணிக்கும் போது "எழுத்துக்கல் மலை" எனும் சிறுகுன்று வரும். அதன் அருகாக வீதியின் இடப்புறம் (வடக்கே) செல்லும் பழைய ஈச்சிலம்பற்று வீதியில் ஒரு கிமீ பயணித்தால் பாலக்காடு வடிவேல் சாமி மலையை அடையலாம். அக்குன்றின் வடகிழக்குப் பகுதியில், ஒன்றினுள் ஒன்று என்றவாறு அமைந்துள்ள இரு குகைகளின் மேற்புறங்களில் இந்தக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் காலம் கிமு 2ஆம் நூற்றாண்டு ~ கிபி 1 ஆம் நூற்றாண்டு வரை என்று கணிக்கப்பட்டுள்ளது.

புஸஹ பத நகஸ மஹசிதஸ
புஷ்யனுடையதும், பரதவன் நாகனுடையதும் மகாசித்தனுடையதும்

பரதவர் என்று வாசிக்கப்படும் 'பத' என்ற சொல், அதிக எண்ணிக்கையில் கிழக்கு மாகாண பிராமிக் கல்வெட்டுக்களிலேயே காணப்படுகிறது. இப்பெயர் தமிழர் இலங்கையில் வாழ்ந்ததற்கான சான்று என்பர். பத என்பதை பத்தன் என்றும் வாசிக்கலாம். அப்பெயர் இன்றும் இலங்கைத்தமிழர் மத்தியில் ஆட்பெயராகவும் குலப்பெயராகவும் நீடிக்கிறது. பேராசிரியர் பத்மநாதனின் கருத்துப்படி, பத என்போர் முண்டா மொழியைப் பேசிய குறுணிக் கற்கால இனக்குழுவினர். நாகர் தமிழ் பேசிய ஈழத்து ஆதிக்குடிகள் என்பதை நிறுவும் அவர், 'பத நாக' என்ற கல்வெட்டு வாசகம் இலங்கையின் தொல்குடிகளான பத மற்றும் நாகர் இனங்களின் குலக்கலப்பைக் குறிக்கின்றது என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையிறங்கினாள் மலைநீலி!

மட்டக்களப்பிலிருந்து திருக்கோணமலை சென்று கொண்டிருக்கிறீர்கள். இரு மாவட்டங்களினதும் எல்லையான வெருகல் பாலத்தைத் தாண்டி, சுமார் ஒன்றரைக் கிலோமீட்டர் கடந்ததும், வலப்புறம் இலங்கைத்துறை முகத்துவாரம் செல்லும் முத்துச்சேனை சந்தி தென்படும். இலங்கைத்துறை முகத்துவாரம் கிராமம், அண்மையில் "லங்காப்பட்டினம்" என்று பெயர் மாற்றப்பட்டு சுற்றுலாத்தலமாக மாற்றப்பட்டிருப்பதால், அந்த வீதியை அடையாளம் காண்பது இலகு. அந்த வீதியில் நேராக ஆறு கிமீ பயணித்தீர்கள் என்றால், இடப்பக்கம் "பாஷாண பவ்வத விகாரை" என்று ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ள பௌத்த வளாகமொன்றைக் காண்பீர்கள். அதன் நுழைவாயிலின் அருகே சிறிய கொட்டகை ஒன்று தெரிகிறதா? வாருங்கள். அது தான் நீங்கள் தரிசிக்க வந்த பழம்பெரும் கோவில். கல்லடி மலைநீலியம்மன் ஆலயம் (உரு 14.1).

என்ன, சிறியகொட்டகை ஒன்று தான் பழைமை வாய்ந்த கோவிலா? என்று நீங்கள் கேட்பது புரிகிறது. இல்லை. இந்தக் கோவில் 2006 வரை உள்ளே, குன்றின் மீது அமைந்திருந்தது. உள்நாட்டு யுத்த காலத்தில் இங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்த போது இக்கோவில் குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி அடியோடு தகர்ந்து விட்டது. இப்போது சுமார் பன்னிரு ஆண்டுகளாகத் தான் மலையிறங்கித் தவமிருக்கிறாள் மலைநீலி.

யார் இந்த மலைநீலி? அவள் பற்றி நமக்குப் போதுமான குறிப்புகள் இன்று கிடைப்பதாக



**உரு 14.1 நீலியாமலை மலைநீலியம்மன் கோவில்**

இல்லை. தமிழ் நாட்டின் பழையனூர் நீலி என்ற தெய்வம், சங்க இலக்கிய காலத்திலிருந்தே புகழ் பெற்றவள். அவளும் இவளும் ஒன்றா என்பது தெரியாது. தமிழகத்தில் நீலியம்மன்கள் அனேகம் என்றாலும், நீலி என்ற பெயரில் இலங்கையில் வேறெங்கும் அம்மன் கோவில்கள் இல்லை. எனினும் நீலி என்ற பெயரை பரவலாக ஒரே ஒரு வழிபாட்டில் காண முடிகின்றது. அது இந்தக் கோவில் அமைந்திருக்கும் வெருகல் பிரதேசத்தை அண்டித்தான் என்பது ஒரு சிறப்பு. அது வேடுவ ஆதிக்குடியினரின் "பெரிய சாமி" வழிபாடு!

கரையோர வேடர் ஆதிக்குடிகள், திருக்கோணமலையின் கொட்டியாறுப்பற்று, மட்டக்களப்பின் கோரளைப்பற்று பகுதிகளில் வாழ்ந்த ஈழத்துத் தொல்குடிகள். இன்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் சந்ததியினர் கோரளைப்பற்று வடக்கிலும் (வாகரைப் பிரதேசம்), கொட்டியாறுப்பற்று கிழக்கிலும் (வெருகல் பிரதேசம்) கணிசமான எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். இவர்களது பெரியசாமி வழிபாட்டில் பல தாய்த்தெய்வங்களும், ஆண் தெய்வங்களும் குழுக்களாக வழிபடப்படுவது வழமை.

இந்தக் குழுக்களில் முதன்மையானவர்கள், "மீனாச்சிமார்" எனும் ஏழு கன்னியர். அவர்களுக்கு, இக்கிலுப்பன் மள்ளன், குடாமள்ளன், நீலியாமள்ளன், கச்சப்புறவட்டன், குக்குளுப்பான் மள்ளன், ஆக்கால் நீலியா, குடாக்கால் நீலியா என்று பெயர். இவர்களின் பெயரில் "நீலி" இடம்பெறுவதால், நீலிக்கென்று இலங்கையில் தனித்துவமான நீண்ட கால வழிபாட்டு மரபு உண்டு என்பதை நம்மால் ஊகிக்க முடிகிறது.

தமிழில் 'நீலாசோதையன்' என்றும் சிங்களத்தில் 'நீல மகாயோதய' என்றும் இலங்கை ஐதிகங்களில் பதிவாகியிருக்கும் தொன்மப் பாத்திரமொன்றை நீலியோடு இணைத்து சிந்திக்கமுடியும். நீலாசோதையனின் படையும் குளக்கோட்டு மன்னனின் படையும் இணைந்தே கந்தளாய்க் குளத்தைக்கட்டியதாகச்சொல்கிறது கோணேசர் கல்வெட்டு[1]. ராஜாவலி நூல் சொல்வதன்படி, நீல மகாயோதையன், முதலாம் கயவாகு மன்னனின் படைத்தளபதி. இலங்கையிலிருந்து சிறைப்பிடிக்கப்பட்ட சிங்களவர்களுக்குப் பகரமாக பாண்டிநாட்டிலிருந்து பெருந்தொகைத் தமிழர்களைச் சிறையெடுத்து வந்தவன் அவன்.

ஆனால் இலங்கைத் தமிழ் நாட்டார் மரபுரைகள் சொல்வதன்படி, நீலாசோதையன் பலம் பொருந்திய "அசோதையன்" குலத்தில் பிறந்தவன். "சோதையர்" அல்லது "யோதர்" உடல் வலிமை கொண்ட குள்ளர்கள். மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் இவர்களையே பூதங்கள் என்கிறது. இந்த சோதையரின் குலதெய்வம் நீலி அம்மன். அவள் அருளால் சோதையர் குலத்தில் பிறந்த மாவீரனே நீலாசோதையன். குளங்கள், நீர்நிலைகள், பாரிய கட்டுமானங்களின் நிர்மாணத்தோடு சோதையர்கள் நினைவுகூரப்படுகிறார்கள். கந்தளாய்க் குளம் போலவே, மாந்தையின் சோதையன்கட்டுக் குளமும் (யோதவாவி) சோதையர்கள் அமைத்தது தான். சோதையன், நீலன், ஆகியோருடன் தொடர்பான தொன்மங்கள், நீலாப்பளை, அம்பாறை பெரியநீலாவணை, மட்டக்களப்பு சோதையன்கட்டு முதலிய இடங்களில் இன்றும் நினைவுகூரப்படுவதால நீலாசோதையன் தொடர்பான தொன்மம் உண்மையாக இருக்கக்கூடும்.

ஏனைய சமூகங்களின் கதையாடல்களில் பெருமளவு மருவிப்போய் விட்ட நீலாசோதையனுக்கு, சலவைத்தொழிலாளர் சமூகத்தின் பெரிய தம்பிரான் வழிபாட்டில் தற்போதும் இடமிருக்கிறது. சலவைத்தொழிலாளரின் பெரிய தம்பிரான் - நீலாசோதையன் தொடர்பையும், கரையோர வேடுவ ஆதிக்குடிகளின் பெரிய தெய்வம் - நீலியம்மன் தொடர்பையும் ஒப்பிட்டு விரிவான ஆய்வுகளெதுவும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. நீலாசோதையனுக்கும் நீலிக்குமான உறவு தொடர்பில் மேலதிக கற்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எது எப்படியோ மலைநீலி இலங்கையின் மிகப்பழைமையான பூர்வீகத் தெய்வம் என்றே கருத வேண்டியிருக்கிறது. கல்லடி, சனப்புழக்கமில்லாமல் அடர்ந்த காடாக இருந்த காலத்தில் கூட, இந்தக் குன்று "நீலியாமலை" என்றே அழைக்கப் பட்டிருக்கிறது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் சேனைப் பயிர்ச்செய்கைக்காக வெளியூரிலிருந்து இங்கு சில குடும்பங்கள் குடியேறியிருக்கின்றன. நீலியாமலையின் மேற்கு மற்றும் தெற்குப்புறமாக அவர்கள் காடு வெட்டி வெளியாக்கி தங்கியிருந்தார்கள்.

1. எட்டிசை மண்வெட்டிக் கொண்டே ஏழரைச் சுற்றாம் மரத்தை இனதா வெட்டி தட்டி ஒரு காலாலே எற்றி அது வீழ முன்னம் தரணி மீதில் ஒட்டி ஒரு குளம் சமைத்து ஆங்கு உறுநீரும் கொண்டு அருளையுற்ற வீரன் அட்டதிக்கும் புகழ்ந்தருளும் நீலாசோதயன் படையும் அரசர்மாரும் - கோணேசர் கல்வெட்டு, நூல் 28


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் காத்தார். அவர் மகன் கதிராமன், போன்றோர் மலைநீலியை வழிபட்டு வந்தவர்களில் சிலர். இலங்கைத்துறையிலிருந்து வந்து போன "தெவளம்பூவர்" என்பவர் மலைநீலியின் பூசாரியாக இருந்த வேளையில், இங்கு சேனைப்பயிர் செய்து கொண்டிருந்த வர்களில் ஒருவரான அனுமார் முத்தையா, நீலியாமலையில் வீற்றிருந்த மலைநீலியின் பரம பக்தராக விளங்கினார். இவரது நினைவாக, கல்லடியின் மேற்குப்புறமான ஆற்றின் ஒருபகுதிக்கு இன்றும் "அனுமார் முடக்கு" என்ற பெயருண்டு.

ஆனால் கொஞ்சகாலத்திலேயே மலைநீலி சீற்றம் கொள்ளும் சம்பவம் நடைபெற்றது. நீலியாமலையின் அருகே யாரும் பத்தியம் காக்கவில்லை. பன்றி வேட்டைக்குச் சென்ற சிலர், இந்தக் குன்றின் மீது பன்றியை உரித்து தீமூட்டி அதில் இறைச்சியை வதக்கி சாப்பிட்டிருக்கிறார்கள். பன்றித்தோலும் இறைச்சிக்கழிவுகளும் அழுகி நாறி காற்றில் பறந்து நீலி மீது விழுந்தன.

நீலி வெகுண்டெழுந்தாள். அப்பகுதி முழுவதும் கோதாரி எனும் கொள்ளைநோய் பரவியது. வாந்திபேதியும் வயிற்றுளைவும் ஏற்பட்டு நிறையப்பேர் மடிந்தார்கள். மடிந்த பிணங்களைத் தூக்கி அகற்றியவர்களும் அடுத்தடுத்த நாட்களில் நோய் கண்டு இறந்தார்கள். குடும்பத்தில் யாருக்கும் கோதாரி வந்தால் மற்றவர்கள் அவர்களுக்கு பணிவிடை செய்யவே பயந்தார்கள். கணவனை மனைவியும் தாயை பிள்ளையும் கைவிட, அவர்கள் அனாதையாகத் துடிதுடித்துச் செத்தார்கள். அவர்களது பிணங்கள் காகமும் கழுகும் தின்ன அப்படியே விடப்பட்டன.

குழந்தைகள், பெரியவர்கள், பெண்கள், முதியவர்கள் என்ற பேதமில்லாமல், எல்லோரும் செத்து விழ எஞ்சியவர்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இங்கிருந்து விலகிச் சென்றார்கள். நீலியாமலை இடுகாடாய் ஆனது. அந்த இடுகாட்டின் நடுவே மலையுச்சியில் மலைநீலி கெக்கலி கொட்டிச் சிரித்து நின்றாள். ஆண்டுகள் கடந்தன. நீலியாமலை பழையபடி அடர்ந்த காடாகி விட்டது. யானையும் கரடியும் சிறுத்தையும் புழங்கும் அந்தக் காட்டுக்குள் யாரும் நுழையவே அஞ்சினார்கள். அப்போது ஒருநாள் - 1940ஆம் ஆண்டளவில் இருக்கும் - அடுத்த கிராமமான வாழைத்தோட்டத்தில் பெரியசாமி சடங்கு இடம்பெற்றுக் கொண்டிருந்தது. வீறிட்டு அலறியபடி சாமியாடியில் நீலி எழுந்தாள். கூடியிருந்த கூட்டத்தில், கைகூப்பி நின்றுகொண்டிருந்த கந்தரைக் கண்டதும் அவள் கண்கள் நிலைகுத்தி நின்றன. அவரை அருகே அழைத்தாள். வடக்கே தான் வீற்றிருக்கும் நீலியாமலை பாழ்பட்டுக் கிடப்பதைச் சொன்ன அவள், தன்னை அங்கே வணங்கும்படி ஆணையிட்டாள்.

கந்தரின் இயற்பெயர் கணபதி கந்தையா. அவர் வெருகல் முகத்துவாரத்தைச் சேர்ந்தவர். நீலியின் அருள்வாக்கு கிடைத்ததும் நீலியாமலைக்குச் சென்ற அவர் பித்துப்பிடித்ததுபோல் மூன்று நாள்கள் அன்னம் தண்ணீர் இன்றி அங்கேயே அமர்ந்திருந்தார். அவரைக் காணவில்லை என்று தேடிச்சென்ற அவரது கூட்டாளி கதிராமரிடம், தனக்கு அங்கே கோவில் கட்டும்படி நீலியா கட்டளையிட்டதைச் சொன்னார். கதிராமர் தன் வீட்டுக்குப் போய் கத்தி, கோடரி, மண்வெட்டு எடுத்துவந்ததும், குன்றின் உச்சியில் சிறாம்பி[2] கட்டி அதில் நீலியை அமரச்செய்து வழிபட்டார்கள். மலையின் அருகாக அவர்கள் காடுவெட்டி சேனை செய்து குடியிருக்கலானார்கள்.

மலைநீலி, கோபமுள்ள அளவுக்கு குணமுள்ளவள். அவளது அருளின் மகிமை கண்டு கூட்டம் கூடியது. பிள்ளைவரம் வேண்டிய பலருக்கு அவள் மழலைச்செல்வத்தை அள்ளித்தந்தாள். விரைவிலேயே மலைநீலி கொட்டியாறுப்பற்றின் பிரபலமான தெய்வமாக மாறினாள். அவளுக்குக் காணிக்கையாக வந்த பொன்னாலான சிறுதொட்டில் ஒன்று இன்றும் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

மலைநீலியம்மன் கோவில் புகழ்பெற ஆரம்பித்த காலத்தில், வாழைத்தோட்டத்திலிருந்து பலர், நீலியாமலையைச் சூழ குடியேறினார்கள். கந்தர்

2. மரம், தடி கொண்டு தரையிலிருந்து சற்று உயரமாக காவற்பரண் வடிவில் அமைக்கப்படும் சிறுகுடில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் கதிராமரின் குடும்பங்களுடன், வயிரன் கந்தன், பாவாடை ஆறுமுகம், சின்னத்தம்பி செல்லத்துரை, வேலுப்பிள்ளை கந்தையா, சித்திரவேல் கனகம்மா ஆகியோர் இணைந்து மொத்தம் ஏழு குடும்பங்களே இங்கு அமர்ந்த ஆதிக்குடிகள் என்று சொல்லப்படுகின்றன. நீலியாமலையின் சூழல் சிறுசிறு குன்றுகளைக் கொண்டதாகவும், கடலோரம் கற்கள் நிறைந்ததாகவும் இருந்ததால், அங்கு இப்படித் தோன்றிய புதிய கிராமத்துக்கு "கல்லடி" எனும் பெயர் உண்டாயிற்று.

ஒருநாள் கந்தரின் கனவில் தோன்றிய நீலி, கடலோரம் ஆம்பர்[3] கிடப்பதாக அடையாளம் காட்டினாள். கந்தருக்கு வெருகலாற்றில் ஆம்பர் கிடைத்தது. பசுஞ்சாணத்தின் மணத்துடன் கரும்பாசி படர்ந்த மூன்று தட்டுகளாக அவருக்குக் கிடைத்தது ஆம்பர். வண்டிச்சில்லு அளவுக்குப் பெரிய துண்டொன்று கிடைத்ததென்றும் கதை உண்டு. அவர் பெரும் பணக்காரர் ஆனார். அவரை எல்லோரும் "ஆம்பர் சாமி" என்று அழைத்தார்கள். நீலியின் உத்தரவுப்படி அவர் நீலியாமலை மீது கல்லாலான கோவில் ஒன்று கட்டினார்.

கருவறையில் அம்மன் முகக்களையில் (உலோகத்தில் செய்யப்பட்ட முகம் போன்ற அமைப்பு) நீலி எழுந்தருளினாள். குன்றின் அடிவாரத்தில் பிள்ளையாருக்கும் நாகதம்பிரானுக்கும் சிறு சன்னதிகள் அமைக்கப்பட்டன. குன்றின் வடக்கே இருந்த சிறுகுகையில் காளமாமுனிக்கு வழிபாடுகள் இடம்பெற்றன. கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டோரும் ஆம்பர் சாமியிடம் திருநீறு ஓதிப் பூசினால் நீலியின் கருணையால் சுகமடைந்தார்கள். நீலியின் புகழ் ஓங்கியது. ஆனால் ஆம்பர் சாமியின் பிற்காலம் அவ்வளவு மகிழ்ச்சிபடும்படி அமையவில்லை. ஆம்பர் கிடைத்து செல்வந்தரான பிற்காலத்தில் மலைநீலியை அவர் மறந்துவிட்டார் என்கிறார்கள். அவரிடம் எஞ்சியிருந்த ஆம்பர் கட்டிகளை

அபகரிக்க எண்ணி, சிலர் அவரை மதுபோதைக்கு அடிமையாக்கினர். அவர் செல்வமெல்லாம் தீர்ந்தது. இறுதிக்காலத்தில் அவர் நீலியம்மன் கோவிலை தேசத்துக்கென எழுதி வைத்து மறைந்தார். ஆனால் ஆம்பர் சாமியின் காலத்தில் திரு. ஆறுமுகத்தின் தலைமையில் அமைந்த நிர்வாகத்தால், மலைநீலிக்கு மூன்று நாள் திருவிழாச் செய்வது என தீர்மானிக்கப்பட்டது. அது கதிர்காமத் திருவிழாவான ஆடிப்பூரணையில் நிறைவடையும். பூரணைக்கு இரண்டு நாட்களுக்கு முன் கோவிலில் "புறவிடுதி" இடம்பெறும். அன்று வழிபாட்டுப்பொருட்கள், நைவேத்தியப்பொருட்களைத் தயார் செய்து ஆலயத்தை அலங்கரிப்பார்கள்.

இரண்டாம் நாள் அடியார்கள் நேர்த்திகளை நிறைவேற்றுவதும், பூசைகள் இடம்பெறுவதும் என்று கோவில் அல்லோலகல்லோலப்படும். காவடி, தீச்சட்டி எடுப்பவர்கள், நீலியா மலையையே சுற்றி வலம் வருவார்கள். அன்றிரவு தேவியின் திருவுலா மலையைச் சுற்றி இடம்பெறும். மூன்றாம் நாள் ஆடிப்பூரணை காலையில், அவளைக் கடற்கரைக்குக் கொண்டு சென்று தீர்த்தமாடித் திரும்புவார்கள்.

நீலியின் அதிசயங்களுக்குக் குறைவிருக்கவில்லை. மலைநீலியின் கோவிலுக்கருகே குன்றின் விளிம்பில் வெள்ளை விரித்து நாம் கோரியதைக் கேட்டால் உடனே கிடைக்கும் என்ற நம்பிக்கை நிலவியிருக்கிறது. அவள் அடியவர்கள் தங்கம், காசு பணம், உடுதுணிகள் என்று நிறைய இப்படிப் பெற்று வந்தார்களாம். ஒருவன் இதைப் பரிசோதித்துப் பார்க்க முடிவெடுத்திருக்கிறான். ஒரு அண்டாவைக் கொண்டு சென்று வெள்ளை விரித்து வைத்து பசும்பால் வேண்டுமென்று

3. விலைமதிப்புள்ள ஆம்பர் திமிங்கிலத்தின் எச்சம் என்றும், விசித்திரமான கடற்பறவை ஒன்றின் எச்சம் என்றும், நாட்டார் நம்பிக்கைகள் நிலவுகின்றன. உண்மையில் ஆம்பர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மரங்களில் கசிந்த பிசின். புற அழுத்தம், வெப்பம், அதன் மீது படியும் புழுதி என்பவற்றால் வழவழப்படைந்து, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின், கண்கவர் தோற்றத்தை அடைகிறது. இது கடலிலும் சில சுரங்கங்களிலும் பெறப்படுகின்றது. இதன் பளபளப்புத் தன்மையால் இரத்தினக்கல் ஆபரணத் தொழிலிலும், சில இடங்களில் மருந்தாகவும், பயன்படுகின்றது. ஆம்பர் அலங்காரப் பொருளாகப் பயன்பட்டதை பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தித்திருக்கிறான். பிரார்த்தித்த கையோடு ஒரு மறைவான இடத்தில் சென்று ஒளிந்து நின்று பார்த்திருக்கிறான். கொஞ்ச நேரத்திலேயே அந்தரத்திலிருந்து பால் தோன்றி ஊறி அண்டாவுக்குள் பொழிந்ததைக் கண்டு இவன் வாய்பிளக்க நின்றிருக்கிறான். ஆனால் அண்டா நிரம்பிய பின்னும் பால் நிறுத்தப்படாமல் வெளியே சிந்தச் சிந்த ஊற்றப்படுவதைக் காண அவனால் பொறுக்க முடியவில்லை. "காணும்காணும்" என்று அவன் கத்தியபடி ஒரு எட்டு முன்னே எடுத்து வைக்க, பால் நின்றுவிட்டது. "காணும்" என்று அவன் சொல்லிவிட்ட அன்றிலிருந்து நீலி யாருக்கும் எதையும் கொடுக்கவில்லை.



உரு 14.2 மலைநீலியம்மன் கோவில். 2000களில் எடுக்கப்பட்ட புகைப்படம்.

1987ஆம் ஆண்டு கல்லடிக்கு வந்த இந்திய அமைதிப்படை, நீலியாமலையிலேயே முகாமிட்டது. அது அம்மன் கோவில், அங்கு இருக்காமல் வேறு இடத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று ஊர்மக்கள் சொன்னதை இராணுவத்தளபதி கேட்கவில்லை.

ஆனால் அதன் பிறகு ஓரிரு நாள் இடைவெளியில் இரவுக்காவலில் விழித்திருந்த மூன்று இராணுவ வீரர்களில் இருவர் மலையிலிருந்து கால்தடுக்கி கீழே விழுந்து செத்துப் போனார்கள். படுகாயங்களோடு தப்பிய ஒருவன் நீண்ட மௌனத்துக்குப் பிறகு, நள்ளிரவில் இளம்பெண்ணொருத்தியைத் தான் அங்கு கண்டதையும், அவள் தன்னை விபரீதமாக அழைத்ததையும், நெருங்கிச் செல்ல அவள் விலகி விலகிப் போனதையும், இறுதியில் தன்னை அறியாமலேயே தடுக்கி விழுந்து விட்டதையும் கிலியோடு சொன்னான். அப்படி இளம்பெண்ணொருத்தியை தாங்கள் இரவு நேரத்தில் கண்டதை பல வீரர்கள் ஒத்துக்கொண்டார்கள். வெறும் இருபத்தேழு நாட்களில் இந்திய அமைதிப்படையின் அந்த முகாம் கல்லடியிலிருந்து கலைக்கப்பட்டது. இலங்கை உள்நாட்டு யுத்தம் உச்சம் பெற்ற 1996இல் விடுதலைப்புலிகளின் இராணுவ முகாமொன்று இதே இடத்தில் அமைக்கப்பட்டது. ஊர்மக்கள் இந்திய அமைதிப்படைக்கு என்ன நடந்ததென்று எத்தனை சொல்லியும் கேளாமல் அவர்கள் அங்கு தங்கினார்கள். கொஞ்சக் காலத்திலேயே அங்கிருந்தவர்களும் இளம்பெண்ணொருத்தியை அடிக்கடி காணத் தொடங்கினார்கள். இந்திய அமைதிப்படைக்கு இருபத்தேழு நாட்கள் எடுத்தது. இவர்கள் மூன்று நாள் அதிகம் இருந்தார்கள். முப்பது நாட்களில் விடுதலைப் புலிகளின் கல்லடிப் படைத்தளம் கைவிடப்பட்டது.

ஏனோ மலைநீலி சட்டென அமைதியானாள். 2006இல் யுத்தத்தால் இங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்தார்கள். மீண்டும் நீலியா மலையைக் காடு சூழ்ந்தது. வான்வழித் தாக்குதலில் அங்கிருந்த வானலைக் கோபுரம் மீது வீசப்பட்ட ஷெல்லை நீலி தான் வாங்கிக்கொண்டாள். அவள் கோவில் (உரு 14.2) சுக்குநூறாய் உடைந்து தரைமட்டமானது.

2008இல் கிழக்கிலங்கை விடுவிக்கப்பட்ட பின்னர், கல்லடி மக்கள் மீளக்குடியமர்ந்தனர். நீலி கோவில் சிதைந்து கிடந்த குன்றில் மீண்டும் ஒரு சிறுகொட்டகையை அமைத்தார்கள். அப்போது நீலியாமலை இராணுவத்தளமாக மாற்றப்பட்டது. எனினும் வழிபாட்டுக்குத் தடை எதுவும் இருக்கவில்லை. 2008 இறுதியில் இங்கு வந்த தேவானந்த தேரர் எனும் பௌத்த பிக்கு, நீலியாமலையில் பிராமிக் கல்வெட்டுக்கள் இருப்பதைக் காட்டி, இது உண்மையில் பௌத்தர்களின் வழிபாட்டுத்தலம் என்று கூறினார். நீலி மலையிறங்கவேண்டும். இது புத்தபிரானின் உறைவிடம் என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலி ஒன்றும் சொல்லவில்லை. அவள் அமைதியாக மலையிறங்கினாள். பிள்ளையார், நாகதம்பிரான் போன்ற பரிகலங்களுடன் அவள் வீதியோரம் அமர்ந்தாள். நூறு நூறாண்டுகளாக அவளது உறைவிடமாக நீடித்த நீலியாமலை, பாஷாண பர்வத விகாரை எனும் பெயரைப் பெற்றது. இதேபோலப் பாலமுருகன் கோவில் அமைந்திருந்த குஞ்சிமாப்பா மலையில் லங்காபட்டின சமுத்திரகிரி விகாரை அமைக்கப்பட்டதால், பெருமளவு சுற்றுலாப்பயணிகள் இலங்கைத்துறை முகத்துவாரத்துக்கு திரண்டார்கள். அந்த விகாரைக்கு இட்டுச்செல்லும் வீதியில் இருந்த நீலியாமலையில், இல்லையில்லை, பாஷாண பர்வத விகாரையில், சுற்றுலாப்பயணிகள் ஈ மொய்ப்பது போல் கூட்டம் கூடினார்கள். அங்கு வெள்ளரசு மரம் நடப்பட்டது. போதிமாதவனின் பிரதிமாகாரம் எழுந்தது. மலையுச்சியில் இருந்த சிறு கிறவல் மேட்டில் பழைய தாதுகோபமொன்றின் இடிபாடு தோன்றியது. மும்மணிகளைப் போற்றும் கீதங்கள் ஒலிபெருக்கியில் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்தன. அவளது சிறுகுடிலைத் தாண்டி தாமரை மலர்கள் எடுத்துச் செல்லப்பட்டு, அவள் வீற்றிருந்த நீலியாமலையில் வேறு யாருக்கோ சாற்றப்பட்டன. ஆனால் நீலியின் நெடுந்தவம் கலையவில்லை.

என்ன காரணத்தாலோ சில மாதங்களில் தேவானந்த தேரர் அவளை உள்ளே அழைக்க ஒப்புக்கொண்டார். ஆனால் மலையில் இடம் தரமாட்டேன், விகாரையின் நுழைவாயிலில் நீங்கள் சிறிய கோவில் கட்டிக்கொள்ளலாம் என்று அவர் சொன்னார். கல், சீமெந்து கூடத் தருகிறேன், அடிக்கல்லும் நானே நாட்டுகிறேன் என்று சொல்லும் அளவுக்கு அவர் கனிந்தார். ஆனால் நீலியின் தவம் கலைவது விரும்பாத துர்ச்சக்தி ஒன்று அதற்கு ஒப்புக்கொள்ள மறுத்தது. "கட்டினால் மலைமீது தான் கோவில் கட்டுவோம்" என்று ஊரவரில் சிலரை வீறாப்பு பேசச்செய்தது. தேரர் வெகுண்டார். "கோவில் கட்ட விடுங்கள் என்று சொல்லி யாராவது இனி படியேறுங்கள், பார்க்கிறேன்" என்று கறுவியபடி அவர் சென்று விட்டார். அதன் பிறகு மலைநீலி மலையேறவேயில்லை.

வீதியோரம் நீலி அமர்ந்து பன்னிரண்டு ஆண்டுகளாகின்றன. மாமிசத்துக்கு வெகுண்டு கோதாரி பரப்பியவள், மூன்று இராணுவங்களை அஞ்சி நடுங்கச் செய்தவள், ஆழ்ந்த மௌனத்துடன் தகரக்கொட்டகையில் அமர்ந்திருக்கிறாள். கோதாரியை விடக் கொடூரமான பெருந்தொற்று உலகையே கலக்கி வரும் காலம் இது. அந்தத் தேரர் இன்று உயிரோடு இல்லை. நீலி எழுந்துவிட்டாள் என்கிறார்கள் அடியவர்கள். சீறப்போகிறாளா, சிரிக்கப்போகிறாளா? தெரியவில்லை. காலம் பதில் சொல்லட்டும்.

**தகவல் தந்தவர்கள்:**

**திரு.திருச்செல்வம் உமாகாந்தன்**
**திரு. முத்தையா தெய்வேந்திரம்**
**திரு. கதிராமன் மனோரஞ்சன்**
**திரு. பிரான்சிஸ் தேவதாஸ்**
**திருமதி.இராசமணி கந்தையா**

கல்லடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெருகல் வேகநதி !

(1802 மே) 26ஆம் திகதி···காலை ஏழு மணிக்கு நாங்கள் தோப்பூரிலிருந்து புறப்பட்டு, பத்தரை மணிக்கு ஆனைத்தீவு எனும் சிற்றூரை வந்தடைந்தோம். ஆளுநரின் வருகைக்காக அங்கு அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. சிறிதளவே விவசாயம் செய்யப்படினும், அழகான சமநிலமாக இருப்பதால், நாங்கள் வந்த வீதி நல்ல நிலையில் இருந்தது. மட்டக்களப்பு கமாண்டோ லியூட்டினண்ட் ஜூவல் மற்றும் அந்த மாகாண வருவாய் அதிபர் திரு. பார்க்கினே ஆகியோர் ஆனைத்தீவில் எங்களை சந்தித்தனர்.

ஆனைத்தீவிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் வெருகல் கங்கை இருக்கிறது. ஒரு விசாலமான, ஆழம் கூடிய, வேகமாகப் பாயும் நதி. அதைக் கடக்க எமக்கு மூன்று வள்ளங்களே இருந்தன. யானைகள், குதிரைகள், பொதிகள் என்பவற்றை இந்தத் துறையைக் கடக்கச் செய்வதிலேயே எங்கள் மாலைப்பொழுதின் பெரும்பொழுது கழிந்தது. எதிர்க்கரையிலிருந்து வீசப்பட்ட கயிறுகளைப் பற்றிப்பிடித்து யானைகள் நீந்தி வந்தன. கயிறு மூலம் இழுக்கப்பட்ட இன்னொரு வள்ளத்தோடு குதிரைகள் நீந்தி வந்தன. பொதிகளும் பல்லக்குகளும் அதே வள்ளங்களில் ஏற்றி எடுத்து வரப்பட்டன. வெருகலின் வடக்குக் கரையில் உள்ளூர் மக்களால் பயபக்தியோடு வழிபடப்படும் ஓரளவு பழைமையான பெரிய கோவிலொன்று இருக்கிறது. அத்துடன் கொட்டியாறு மாவட்டம் முடிகிறது···..ஆறுமணியளவில் நாங்கள் பொதிகளுடன் வெருகல் கரையைக் கடந்து ஏழரை மணியளவில் தட்டார்வெளியை அடைந்தோம்.

**திருக்கோணமலையிலிருந்து மாத்துறை வரை இலங்கை ஆளுநர் பிரடெரிக் நோர்த் 1802ஆம் ஆண்டு மேற்கொண்ட பயணத்திலான குறிப்புகள். அவரோடு துணை சென்ற மருத்துவர் தோமஸ் கிறிஸ்டியால் எழுதப்பட்டது.**

***Cordiner, James. 1802. Description of Ceylon, Vol II, London, pp. 131-132,***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலனித்துவ கால ஆவணங்களில் வெருகல் பிரதேசம்

திருக்கோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேசம் அங்கு பாயும் வெருகல் கங்கையாலும் அந்த ஆற்றின் கரையிலுள்ள சித்திரவேலாயுத சுவாமி கோவிலாலும் புகழ் பெற்ற இடம். இங்குள்ள வட்டவான் பப்பரங்கல் மலை, இலங்கைத்துறை, கல்லடி நீலியாமலை முதலிய இடங்களில் கிடைக்கும் தொல்லியல் எச்சங்கள் இங்கு மிகப்பழங்காலம் தொட்டே மக்கள் வசித்து வருவதை சுட்டிக் காட்டுகின்றன. வெருகல் - கல்லடி நீலியாமலையில் கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுகளிலிருந்து வெருகலாற்றின் கரையில் வணிகம் செழித்ததை அறியமுடிகிறது. இலங்கையின் பழைமை வாய்ந்த வங்கிக் கட்டமைப்புக்களில் ஒன்று அல்லது பல, இப்பகுதியில் நிலவியதை இந்தக் கல்வெட்டுக்கள் சொல்கின்றன **(Amazing Lanka 2010)**. எனினும் இப் பிரதேசத் தின் வரலாற் றைக் கட்டியெழுப்புவதற்கு போதுமான சரித்திரச் சான்றுகள் இல்லாமையால், வாய்மொழிச் செய்திகளிலும் கர்ணபரம்பரை ஐதிகக் கதைகளிலுமே தங்கியிருக்க வேண்டியதாக இருக்கிறது.

இப்பிரதேசத்தின் பிற்கால வரலாற்றை, குறிப்பாக, ஐரோப்பியர் காலத்துக்குப் பிந்திய வரலாற் றைக் கட்டியெழுப்புவதற்கு, உத்தியோகபூர்வமான சில ஆவணங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவற்றில் சுமார் பத்து வரைபடங்களும் ஐந்து ஐரோப்பியக் குறிப்புகளும் அடங்கும். ஐந்து ஐரோப்பியர் காலக் குறிப்புகளும், பிரித்தானியர் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்தவை. 1800ஆம் ஆண்டுக்கு பிற்பட்டவை. எனினும் வரைபடங்கள் இடச்சுக் காலத்திலிருந்தே, 1690களிலிருந்து கிடைக்கின்றன.



**உரு 15.1 வெருகல் கல்வெட்டு**

வெருகல் கோவில் புகழ்மிக்கது. உள்ளூர் மக்கள் பலர் அங்கு வந்து வழிபடுகிறார்கள் என்பதை ஐரோப்பியக் குறிப்புகள் சொல்கின்றன. 17ஆம் நூற்றாண்டில் நீர்கொழும்பு உட்பட தூரதேச மக்கள் பலர் இக்கோவிலில் வழிபட்டமை வெருகல் கல்வெட்டால் தெரியவருகிறது (உரு 15.1).

1839இல் மட்டக்களப்பிலிருந்து வந்த ஒரு மாற்றுமதக் குழுவினரால், அப்போதைய இலங்கை ரூபாய் 6000 பெறுமதியான வெருகல் கோவிலின் நகைகள் கொள்ளையிடப்பட்ட செய்தி ஒரு குறிப்பில் பதிவாகி இருக்கிறது **(Ribeyro 1847:81)**.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருகலாறு அக்கால இலங்கையின் மிக வேகமான ஆழம் கூடிய ஆபத்தான ஆறாக ஐரோப்பியர் குறிப்புகளில் வர்ணிக்கப்படுகின்றது **(Cordiner 1802:131)**. அதில் முதலைகள்



உரு 15.2 வெருகல் துறையடியில் அமைந்திருந்த முருகன் சன்னதி. 2000களில் எடுக்கப்பட்டது. படம்: *Doctorandus Sarajevo*

உலவுகின்றன. வெருகலாற்றின் கரைகள் செங்குத்தானவை. அங்கிருந்து பார்க்கும் போது, ஆறு அதல பாதாளத்தில் பாய்கின்றது. ஆற்றைக் கடக்க வேண்டுமென்றால், மண்ணைச் சரித்துக் கீழிறங்க வேண்டும். ஐரோப்பியப் பயணிகளின் யானைகளும் குதிரைகளும் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே வெருகலாற்றைக் கடந்திருக்கின்றன **(Tennent 1859:422-25)**. இன்றைய வெருகல் பாலமானது 2011 ஒக்டோபர் 19ஆம் திகதி திறக்கப்பட முன்பு பாதை **(Jetty)** இயங்கிய வெருகல் துறையடி (உரு 15.2), கிழக்கின் ஆபத்தான நீர்வழி மார்க்கங்களுள் ஒன்றாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

வெருகலாறு, பழங்கால இலங்கையில் வணிக ரீதியிலும் போக்குவரத்து ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஆறாக இருந்தது. மகாவலி கங்கையின் இரு பிரதான கிளைகளில் ஒன்று என்பதால், கடலூடாக வரும் வெளிநாட்டுப் பயணிகள் நாட்டுக்குள் நுழைகின்ற பிரதான நீர்வழி மார்க்கமாகவும் இருந்து வந்தது **(Turnour 1836:70)**. வெருகலாற்றின் நீர்மட்டம் எல்லா இடத்திலும் ஆழமாக இல்லாத காரணத்தாலும், அதன் கழிமுகங்களான இலங்கைத்துறை முகத்துவாரம், வெருகல் முகத்துவாரம் என்பன பாறைகள் நிறைந்திருந்ததாலும், பெரிய கப்பல்கள் இதன் வழியே உள்ளே நுழைந்திருக்க முடியாது. எனினும், வத்தை, சம்மான், தோணி, வள்ளம், கட்டுமரம் முதலிய சிறியரக நீர்ப்படகுகள் இந்த ஆறு வழியான போக்குவரத்துக்கு உதவி இருக்கக்கூடும்.

வெருகலாற்றின் ஆற்றுப்படுகை திசைமாறியிருப்பதை வெருகலில் வசித்த மக்கள் ஐரோப்பியப் பயணிகளிடம் சொல்லியிருக்கிறார்கள். இன்று பாய்கின்ற வெருகல் கங்கையின் படுகையானது, தங்கள் வயலின் நீர்ப்பாசனத்துக்காக, அக்கால மக்கள், குறிப்பாக வெருகல் கோவிலின் அர்ச்சகர்கள் வெட்டிய செயற்கையான கால்வாய் தான். அங்கு மண் மென்மையானதாக இருந்ததால், மிகக் குறுகிய காலத்திலேயே தன் ஆற்றுப்படுகையை மாற்றிக் கொண்டு திசைமாறி ஓடத்துவங்கியது வெருகல் ஆறு. **(Penny-cyclopedia 1836:450; Barrow 1857:35; Tennent 1859:424)**.

நிர்வாக ரீதியாக வெருகல் பிரதேசம் என்று வரையறுக்கப்படும் இன்றைய புவியியல் எல்லைக்குள் 'வெருகல்' என்ற பெயரிலான இடங்கள் எதுவும் இல்லை. ஆனால் ஆற்றின் அக்கரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அடங்கும் கதிரவெளியின் வடக்கு அந்தமே வெருகல் என்று இன்றும் அழைக்கப்படுவது ஆற்றின் திசைமாற்றத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குக் கிடைக்கும் முக்கிய சான்று. வெருகல் கிராமத்துக்கும் கோவிலுக்கும் இடையே கால்வாயாக வெட்டப்பட்டு, மண்ணரிப்பால் தானாக அகலமாகி பிற்காலத்தில் ஆற்றின் முதன்மை நீர்ப்பாதையாக மாறிய புதிய வெருகலாற்றின் கிளை கடலில் கலந்த இடத்தில் தான் வெருகல் முகத்துவாரம் உருவாகி இருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உரு 15.3 கூகிள் ஏர்த் செய்மதி வரைபடத்தின் படி 1985இல் இன்றைய நாதனோடையிலிருந்து நீர்வடிச்சல் பாதை ஒன்று வடகிழக்கே செல்கின்றது.**

என்றால், வெருகலாற்றின் பழைய பாதை எது? வெருகலாறு மழைக்காலங்களில் பல ஆற்றுவாய்களில் கடலில் கலந்ததை ஒரு ஐரோப்பியக் குறிப்பு சொல்கின்றது ***(Tennent 1859:423)***. இன்னொரு ஐரோப்பியக் குறிப்பின் படி, ஆநெய்த்தீவானது, வெருகலாறு இரண்டாகப் பிரிந்து மீண்டும் இணைவதால் தோன்றும் ஆற்றிடைக்குறை ஆகும். ***(Tennent 1859:474)*** வெருகலாறு சில வரைபடங்களில் இருவாற்று முனையாறு ***(Ruati Mone R.)*** என்றும் ஈச்சிலம்பற்று ஆறு ***(Itirclanpattoo-aar)*** என்றும் காட்டப்பட்டிருக்கிறது (வரைபடங்கள் *1813, 1904*). ஆக, வெருகலாறு ஈச்சிலம்பற்றை நெருங்கித்தான் ஆரம்பத்தில் ஓடியிருக்கிறது. இருவாற்றுமுனை என்ற பெயர் வெருகலாறு ஒருகால் இரண்டாகப் பிரிந்து ஓடியது என்பதற்கான சான்றாகும். இன்னும் சில படங்களில் வெருகல் ஆறு தனியேயும் வெருகல் கங்கை தனியேயும் பிரித்து குறியிடப்பட்டிருப்பதையும் நாம் அவதானிக்கவேண்டும்.

என்றால், வெருகல் பிரதேச மக்கள் வெள்ள அபாயத்துக்கு முகம் கொடுத்து வந்த நாதனோடையே வெருகலாற்றின் பழைய படுகையாக இருக்கவேண்டும். நேரே கிழக்கு நோக்கிப் பாயும் வெருகலாறு, மிகச்சரியாக அந்த இடத்தில் தான் திசைதிரும்பி தெற்காக ஓடுகிறது. எனினும் உள்ளூர்மக்கள்நாதனோடை மிக அண்மைக்காலத்தில் வெருகலாற்றில் உடைப்பெடுத்து உருவான புதிய வடிச்சல் என்றும் முன்பு அது இருந்ததில்லை என்றும் சொல்கிறார்கள்.

ஆனால் செய்மதி வரைபடங்களை பழைய வரைபடங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இங்கு தூர்ந்துபோன பழைய ஆற்றுப்படுக்கை ஒன்று இராமல் நீர் உடைப்பெடுத்து அவ்வழியே புதிதாக ஓட வாய்ப்பில்லை என்ற முடிவுக்கே நாம் வரமுடிகின்றது (உரு.*15.3*).

ஆநெய்த்தீவு வெருகலின் ஆற்றிடைக்குறை என்று ஐரோப்பியர் கூறுவது உண்மையாயின், நாதனோடை வழியே பாய்ந்த பழைய வெருகலாறு, இருகிளைகளாகப் பிரிந்து ஆநெய்த்தீவை உருவாக்கி ஈச்சிலம்பற்று அருகே மீண்டும் இணைந்து உப்பாறாக இலங்கைத்துறை முகத்துவாரத்தில் கடலில் கலந்திருக்க வேண்டும். இலங்கைத்துறை முகத்துவாரத்துக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருகலாற்றின் வழக்கமான நீர்வரத்து நின்றபின்னரே அங்கு உவர்த்தன்மை அதிகரித்து, உப்பாறு உருவாகியிருக்கவேண்டும். இன்றும் கார்த்திகை - மார்கழி மாதங்களில் வெருகலாற்று வெள்ளம், உப்பாறில் கலப்பதால் அதன் உவர்த்தன்மை குறைவதைக் காணலாம். வெருகலாற்றின் இந்தப் பழைய பாதையை செய்மதிப் படங்களின் மூலமும் உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது (பார்க்க: பின்னிணைப்பு உரு 01).

இதைத் தவிர, வெருகலாற்றின் இன்னொரு பழைய பாதையை இன்றும் கறுக்காமுனை - இலங்கைத்துறைக்கு மேற்கே காணலாம். வெருகலாற்றிலிருந்து சுங்காங்குழி வழியாக பிரிந்தோடும் அந்த சிற்றோடையை பரப்பிறப்பு ஆறு, கட்டாறு, சுங்கான்குழி ஆறு என்று பலவாறு அழைக்கிறார்கள். இந்தக் கட்டாறும் உப்பாறும் வடக்கே உப்பூறலுக்கு அருகே உள்ள உல்லைக்களிக் களப்புடன் இணைந்து மூன்றாற்றுப் பிரிவை உண்டாக்குகின்றன (மகேஸ்வரன் 2016:5).

மூன்றாற்றுப் பிரிவினூடு வந்திணையும் வெருகலாற்றின் நீர் கடலில் திறக்கும் இடமே இலங்கைத்துறை முகத்துவாரம். ஈச்சிலம்பற்றும் இலங்கைத்துறையும் வெருகலாற்றின் கிளையாறுகள் இரண்டிற்கு இடைப்பட்ட ஆற்றிடைக்குறையில் அமைந்திருப்பதை 1805, 1813 ஆண்டுகளில் வரையப்பட்ட இரு பிரித்தானியப் படங்கள் காண்பிக்கின்றன. எது எப்படியோ வெருகலாற்றின் படுகை வெவ்வேறு காலங்களில் திசை மாறியிருக்கிறது என்பதையும், அதன் பழைய கழிமுகம் இலங்கைத்துறை முகத்துவாரம் தான் என்பதை மட்டுமேனும் இந்தப்படங்களிலிருந்து நாம் ஊகித்துக்கூற முடியும்.

ஆனால் ஐரோப்பிய குறிப்புகளில் கிடைக்கும் அதிர்ச்சியூட்டக்கூடிய செய்தி வேறொன்று உண்டு. இலங்கைத்துறையின் உண்மைப்பெயர் வேறு. அவை எல்லாமே சொல்லி வைத்தால் போல், ஒரே பெயரைத்தான் பயன்படுத்துகின்றன. இலந்தைத்துறை. இலந்தை மரங்கள் சூழ்ந்த துறை!

ஐரோப்பியர் நாவில் தமிழ்ப்பெயர்கள் புழங்கும் போது, அதில் தவறு ஏற்பட வாய்ப்பு இருக்கலாம். எனவே அவர்கள் இலங்கைத்துறை என்ற பெயரைக் கேட்டு தவறாக எழுதியிருக்கலாம் தானே? இல்லை. சொல்லிவைத்தாற் போல, ஒன்பது வரைபடங்களிலும் இலந்தைத்துறை என்ற தமிழ்ப்பெயரின் சிதைந்த வடிவங்களே உரோமன் எழுத்துக்களில் காணப்படுகின்றன. ஒன்றில் கூட, இலங்கைத்துறை என்ற பெயர் இல்லை. வரைபடங்கள் தான் அப்படி என்றால், 1854ஆம் ஆண்டு எழுத்தாவணமொன்றில், பிரித்தானிய காலனித்துவ செயலாளர் சேர் ஜேம்ஸ் டெனண்ட், **Ellendetorre** - இலந்தைத்துறை என்றே அவ்வூரைச் சொல்கிறார். ***(Tennent 1860:220)***

இன்னொரு கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், இலங்கை என்பதை இலந்தை என்று திரித்து பதிவு செய்யும் அளவுக்கு, அந்தப்பெயர் ஒன்றும், அவர்களுக்கு புதிய அல்லது கடினமான உச்சரிப்புள்ள சொல் அல்ல. தாங்கள் சீலோ, சிலோன் என்று அழைக்கும் நாட்டை சிங்களவர்கள் லங்கா என்றும், தமிழர்கள் இலங்கை என்றும் அழைக்கிறார்கள் என்பதை இந்த வரைபடங்கள் - குறிப்புகளுக்குச் சமகாலத்திலேயே பல்வேறு ஐரோப்பிய அறிஞர்கள் பதிவுசெய்து வைத்திருக்கிறார்கள்.

இலங்கைத்துறை உண்மையிலேயே இலந்தைத்துறை ஆகமுடியுமா? முடியும். இலந்தை (தாவரவியல் பெயர்: ***Ziziphus jujuba***) தெற்காசியாவைத் தாயகமாகக் கொண்ட தாவரங்களில் ஒன்று. வறண்ட நிலங்களிலும் ஈரலிப்பான பகுதிகளிலும் சாதாரணமாக வளரக்கூடியது அது. எனவே இலந்தை அடர்ந்து வளர்ந்த கரையில் அமைந்த துறை இலந்தைத்துறை ஆவது சாத்தியமான விடயம் தான். இலந்தை மரத்தால் பெயர்பெற்ற கொட்டிலந்தை எனும் இன்னொரு ஊர் இலந்தைத்துறையின் வடக்கே உள்ளதாலும் இதை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

இலந்தைத்துறை வெறும் நூறாண்டுகளில் "இலங்கைத்துறை" ஆக மாறி, இன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"லங்காபட்டுன" என்று உருமாறி நிற்பது காலத்தின் விந்தை என்றே சொல்ல வேண்டும்.

இலந்தைத் துறையோடு இணைந்து, ஈச்சிலம்பற்றும் ஆநெய்த்தீவும் அதிக எண்ணிக்கையில் ஐரோப்பிய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஐதிகங்களின் படி, ஈச்சிலம்பற்றின் பழைய பெயரான ஈச்சிலம்பத்தை என்பது, அங்கு கோவில் கொண்டிருக்கும் செம்பகநாச்சியம்மன் காரணமாக, ஈர் + சிலம்பு + அத்தை (இரு சிலம்பு கொண்ட அன்னை) என்றவாறு பெயர் சூட்டப்பட்டது. அதேபோல் கோணேசர் கோவிலுக்கு பசுநெய் கொடுக்கும் பொறுப்பைக் கொண்டிருந்த மக்களின் ஊர் ஆநெய்த்தீவு. (ஆ என்றால் பசு). ஐரோப்பியர் குறிப்புகளில் இந்த ஐதிகத்துக்கு மாறான கருத்துக்களைக் காணமுடிகின்றது. ஆனைத்தீவு யானைகளாலேயே அப்பெயர்பெற்றது என்பதையும், அங்குள்ள குளத்தில் நூறுக்கும் மேற்பட்ட யானைகள் நீரருந்த வருவதையும் பிரித்தானிய கால ஆவணங்கள் பதிவு செய்து வைத்திருக்கின்றன. ***(Casie Chetty 1834:9-10;. Tennent 1859:423)***

அதேபோல் ஈச்சை மரம் ***(Phoenix sylvestris)*** பேரீச்சைக் குடும்பத்தைச் சேர்ந்த தெற்காசியாவைத் தாயகமாகக் கொண்ட தாவரம். ஈச்சமரத்தால் பெயர்பெற்ற ஊர்கள் இலங்கையில் ஏற்கனவே உண்டு. (உம்: ஈச்சந்தீவு, ஈச்சையடித்திடல்) ஈச்சை என்ற சொல் பேச்சுவழக்கில் ஈச்சல், ஈந்து, ஈஞ்சு என்றெல்லாம் திரியும். அப்படி ஈச்சல் மரமருகே பற்றை அமைந்திருந்த ஊர் ஈச்சலம்பற்றை ஆகியிருக்கக்கூடும். இன்றும் சிங்களத்தில் இவ்வூரை "ஈச்சலம்பத்துவ" என்றே அழைக்கிறார்கள் என்பதையும் சில பழைய தமிழ் ஆவணங்களில் இவ்வூரின் பெயர் "ஈச்சலம்பற்றை" என்று பதிவாகி இருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும். மட்டக்களப்பிலுள்ள ஆரையம்பதியின் பழைய பெயரும், இதேபோல் ஆரைப்பற்றை (ஆரை என்றால் ஒருவகைக் கீரை, ***Marsilea quadrifolia***) மூலம் அமைந்ததே என்பதை ஒப்பிடலாம். இலங்கையின் பழைமைவாய்ந்த பல ஊர்கள், தாவரங்களாலும் புவியியல் அமைப்புகளாலும் பெயர் பெற்றவை என்பதால் ஈச்சலம்பற்றை என்ற பெயரும் இலங்கையின் ஊர்ப்பெயர் வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற ஒன்றாகி விடுகிறது.

சரி. வெருகல் என்ற பெயர் எப்படி உருவாகி இருக்கக்கூடும்? வெருகு என்பது அகராதியில் காட்டுப்பூனையின் பெயராகவும், தாவரப்பெயராகவும் இடம்பெறுகிறது. காட்டுப்பூனை என்பது உள்ளூரில் "கொடுப்புலி" என்றறியப்படும் பூனைக்குடும்பத்தைச் சேர்ந்த விலங்கு. வெருகு என்ற சொல்லுக்கு அகராதிகள், நெட்டி ***(Aeschynomene aspera),*** பெருஞ்சேம்பு ***(Arum spp.)*** முதலிய பொருள்களைக் குறிப்பிடுகின்றன. ஆனால் வெருகலில் 'தர்ப்பைப்புல்' என்று பொதுவாக அறியப்படும் நாணல்குடும்பத்தாவரத்தையே ***(Desmostachya bipinnata)*** வெருகம்புல் என்று அழைக்கிறார்கள். அது நீர்நிலைகளின் கரையில் செழித்து வளரும் தாவரம். வெருகம்புற்கள் மண்டி வளர்ந்த ஆற்றங்கரை வெருகல் கங்கை என்ற பெயரைப் பெற்றிருக்கிறது என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

காலனித்துவ ஆவணங்களில் மேலும் தேடும் போது வெருகல்பிரதேசம் தொடர்பான இன்னும் பல சுவையான தகவல்கள் கிடைக்கக்கூடும். எவ்வாறெனினும் அதற்கும் முந்திய வெருகல் பிரதேச தொல்வரலாற்றைக்கட்டியெழுப்புவதற்கு இப்போது கிடைக்கும் சாசனங்கள் போதுமானவை அல்ல என்பது தவக்குறைவு தான். ஈச்சிலம்பற்று, வட்டவான், கல்லடி, வெருகலம்பதி, இலங்கைத்துறை பகுதிகளில் கிடைக்கும் கல்வெட்டுக்களையும் தொல்பொருட்களையும் பக்கச்சார்பின்றி ஆய்வுக்குட்படுத்தினால் வெருகல் வரலாற்றின் அந்த மர்மப்பக்கங்களையும் ஓரளவு நிரப்பிக்கொள்ளமுடியும் என்பதில் சந்தேகமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணைகள்:**

- மகேஸ்வரன், (2016). இலங்கைத்துறை முகத்துவார கண்ணகி அம்மன் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலர், இலங்கைத்துறை முகத்துவாரம்,: ஆலய பரிபாலன சபை.

- Amazing Lanka, (no date). Serunuwara Pashana Pabbatha Rajamaha Viharaya. Amazing Lanka Website, Retrieved From http://www.amazinglanka.com

- Barrow, Sir George. (1857). Ceylon: Past and Present, London (UK): John Murray

- Casie Chetty, Simon. (1834). The Ceylon Gazetteer, Cotta: Church Mission Press.

- Cordiner, James. 1802. Description of Ceylon, Vol II, 131-132, London.

- Penny Cyclopedia, (1836), "Buffon – Charles's Wein", Volume VI, London (UK): Charles Knight and Co.

- Riberyro, John. 1847. History of Ceylon: Presented by Captain John Ribeyro to the King of Portugal in 1685, Jeorge Lee (Trans), Colombo: Government Press.

- Tennent, Sir James Emerson. (1860). Ceylon: An Account of the Island, Vol I, London: Longman.

- Tennent, Sir James Emerson. (1859). Ceylon: An Account of the Island, Vol II, London: Longman.

- Turnour, George. (1836). An Epitome of the History of Ceylon, Compiled from Native Annals, Cotta: Church Mission Press

**வி.துலாஞ்சனன்,**
உதவிப் பிரதேச செயலாளர் (பதில் கடமை),
பிரதேச செயலகம்,
வெருகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பின்னிணைப்பு :
# வெருகல் வரைபடங்கள்

உரு. 1 வெருகலாற்றின் படுகைகளும் வெருகல் பிரதேசமும்.

மேல்வரும் படத்தில் நீலநிறத்தில் இன்றைய வெருகலாற்றின் பாதை காட்டப்படுகின்றது. வெருகல் கோவிலுக்கு (4) அருகே இன்றைய வெருகலாறு இரண்டாகப் பிரிகிறது. இதற்கு "இரண்டாத்துப்பிரிவு" என்று பெயர். நேரே செல்லும் வெருகல் கங்கை (I), வெருகல் முகத்துவாரத்தில் (5) கடலில் கலக்கிறது. இரண்டாத்துப்பிரிவில் பிரியும் சின்னக்கங்கை (J) எனும் கிளை, கதிரவெளிக்கு வடக்கே (6) கடலோடு சேர்கிறது. சிவப்பு நிறத்தில் காட்டப்பட்டிருப்பது பழைய வெருகலாற்றின் படுகை. நாதனோடை (A) வழியாக பாய்ந்த பழைய வெருகலாறு கடந்த 2020ஆம் ஆண்டு நாதனோடையில் அணை கட்டும்வரை மாரிகால வெள்ளப்பெருக்கில் மாத்திரம் தன் பழைய படுகையை அண்டிப் பரவிப் பாயும். தற்காலத்தில் புள்ளிக்கோடாகக் காண்பிக்கப்பட்டுள்ள சுங்கான்குழி ஆற்றின் வழியாக (B) இந்தப் படுகைக்கு இப்போதும் நீர் வரத்து இருக்கிறது.

சுங்கான்குழி ஆறு இரண்டாகப் பிரிந்து மின்னியாறு (C) என்ற பெயரில் உப்பாற்றில் (D) கலக்கின்றது. அதன் மறு கிளையான நல்லதண்ணி ஆறு வெவ்வேறு இடங்களில் கட்டாறு (E), முள்ளியோடை (F), பரப்பிறப்பு ஆறு (G) என்ற பெயர்களில் அழைக்கப் படுகிறது. உப்பாற்றுக்கும் நல்லதண்ணி ஆற்றுக்கும் இடைப்பட்ட ஆற்றிடைக் குறைத் தீவின் தென் அந்தத்திலேயே ஈச்சிலம்பற்று (2) அமைந்துள்ளது. உப்பாறும் நல்லதண்ணியாறும் உல்லைக்களி களப்பில் (H) திறக்கும் வடக்கு அந்தத்தில் இலங்கைத்துறை (1) கிராமம் அமைந்துள்ளது. இன்னொரு பழம்பெரும் கிராமமான ஆனைத்தீவு (3), நாதனோடை வழியே பாய்ந்த பழைய வெருகலாற்றின் இரு கிளைகளுக்கிடையே உருவான ஆற்றிடைக்குறை ஆகும். இந்தக் கிராமம் இன்று மறைந்துவிட்டது. ஆனைத்தீவில் வாழ்ந்தோரின் சந்ததியினர் சேனையூர், முத்துச்சேனை கிராமங்களில் வசிக்கிறார்கள்.

ஈச்சிலம்பற்று வட்டவான் பிராமிக்கல்வெட்டுகள் மின்னியாற்றின் கரையிலும், கல்லடிப் பிராமிக்கல்வெட்டுகள் உப்பாற்றின் கரையிலும் அமைந்திருக்கின்றன. பண்டைய மானுடக் குடியேற்றங்கள் நீர்க்கரையை அண்டியே உருவாகியிருக்கின்றன என்பதற்கு பழம்பெரும் வெருகல் கிராமங்களினதும் கல்வெட்டுத் தொல்லிடங்களினதும் அமைவிடங்கள் நல்லதொரு சான்றாம்.




**உரு. 1 வெருகலாற்றின் படுகைகளும் வெருகல் பிரதேசமும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. 1690கள் இடச்சு வரைபடம்

https://www.nationaalarchief.nl/

வெருகல் ஆறு (Verge Riv.), இலந்தைத்துறை (Elendenture)



## 3. 1695 இடச்சு வரைபடம்

https://www.nationaalarchief.nl/

வெருகல் கோவில் (Werergel Pagood), ஈச்சிலம்பற்றை (Ietkclompaÿ), ஆனைத்தீவு (Arinetive)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. 1753 இடச்சு வரைபடம்

https://www.atlasofmutualheritage.nl/


வெருகல் கோவில் (Pagode Werrugel), ஆனைத்தீவு (Annetive). ஈர்ச்சிலம்பிட்டி (Ierhelampitty). நல்லூர் (Nalour)* இலந்தைத்துறை (Ellentiture) தவறுதலாக தெற்கே காட்டப்பட்டுள்ளது.




## 5. 1800 பிரித்தானிய வரைபடம்

https://www.davidrumsey.com/

கோவில் (Pagoda), ஆனைத்தீவு (Annediva), ஈச்சிலம்பற்றை (Ierbclanpitty)





*மூதூர் பிரதேசத்தின் தென் அந்தத்திலுள்ள நல்லூர் , 1900கள் வரை வெருகல் பிரதேசத்தின் மத்தியில் காட்டப்பட்டிருப்பதை ஆராயவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. 1805 பிரித்தானிய வரைபடம்

https://www.davidrumsey.com/


வெருகல் (Wingel), ஆனைத்தீவு (Arretwoe), நல்லூர் (Natoer), ஈர்ச்சிலன்பற்று (IrgelenPattoe), இலந்தைத்துறை (Fendetono)




## 7. 1813 பிரித்தானிய வரைபடம்

https://www.bmarchives.org/

- வெருகல் ஆறு (Virgal Aar), வெருகல் கங்கை (Virgl Ganga), வெருகல் குளம் (Virgl Colom), ஆனைத்தீவு (Arnetivo), புறாமலைமுனை?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. 1851 பிரித்தானிய வரைபடம்

https://www.davidrumsey.com


- வெருகலாறு (Wergal River), ஆனைத்தீவு (Anativo), இலந்தைத்துறை (Elendetore), ஈச்சிலம்பற்று ஆறு (Itirclanpattoo-aar).




## 9. 1904 பிரித்தானிய வரைபடம்.

https://www.davidrumsey.com

வெருகலாறு (Virgel Aar),
வெருகல் (Verukal),
ஆனைத்தீவு (Anaittivu / Arnetivoo),
நல்லூர் (Naloor),
இலந்தைத்துறை (Ellendetorre).




தென்வெருகலாறு, கங்கையாறு (Kinge Aar) என்றும், வடவெருகலாறு களரிக்கோட்டலாறு (Kalarikortel Aar) என்றும் அழைக்கப்படுகின்றன. ஆனைத்தீவுக்கு அருகாகச் செல்லும் இன்னொரு கிளை, இருவாற்று முனை ஆறு (Ruati Mone R.) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடலில் உள்ள வெருகல் குன்று, கப்பல் குன்று, முதலைக்குன்று என்பன பெயரிடப்பட்டுள்ளது சிறப்பு. (ம.ப.பா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"செண்பகம் இதழ் விரிந்து மணம் வீச

கரம் கோர்த்து பலம் சேர்த்த அனைத்து

நல்லுள்ளங்களுக்கும் நன்றிகள்"



மலர்க்குழுவும்
கலாசார அதிகார சபையும்
பிரதேச செயலகம்
வெருகல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் பிரதேச செயலக நிகழ்வுகள் சில.....












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EVERGREEN PRINTERS (PVT) LTD., BATTICALOA. 065 2222607